601
2-54
N54·8·3
197819

12 விருந்து வரிசையில் உலக இலக்கியங்கள் 12

1.	இந்துலேகா	.... மலையாள நாவல்
2.	மாமனார் வீடு	.... ஆங்கில நாடகம்
3.	துன்பக்கேணி	.... ஜப்பானியக் கதை
4.	நூர்ஜஹான்	.... வங்காளி நாடகம்
5.	கைக்கடிகாரம்	.... ரஷ்யக் கதைகள்
6.	முத்துமாலை	.... சீனக்கதைகளும் நாடகமும்
7.	தாயகத்தின் அழைப்பு	.... ஆங்கில நாடகம்
8.	அறக்கோட்டம்	.... இந்தி நாவல்
9.	மாலதி—மாதவன்	.... சமஸ்கிருத நாடகம்
10.	கடல்மறவர்	.... பிரஞ்சு நாவல்
11.	கல்மனிதன்	.... ஸ்விடிஷ் கதைகள்
12.	ஆண்டிமடம்	.... ஆங்கில இசை நாடகம்

மேற்குறித்த 12 புத்தகங்களும் ரூ 6/—அனுப்பினால் தபாற் செலவின்றி அனுப்பப்படும். தனித்தனியே பெறுவதற்கு பிரதி 8 அணா—தபாற்செலவு 1 அணா.

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு : : சென்னை—1.

எழுதும்

தொடர் சித்திரம்

?

எதிர்பாருங்கள்!

பொன்னி

மலர் 8	மே 1, 1954.	இதழ் 3

திருவள்ளுவர் ஆண்டு 1985
சித்திரை திங்கள் 19-ம் நாள்

பொருளடக்கம்

தலையங்கம்	...	3
மக்கள் மன்றம்	...	8
செய்தித் திரட்டு	...	10
காதல் பாடம்	...	11
சிந்தை கொள்வீர்!	...	16
அந்த நாள்!	...	17
குள்ள நரி	...	23
சாமியே, சரணம்	...	27
விநோத மண முறைகள்	...	33
காந்தள் மெல்விரல்	...	37
அச்சம் தவிர்	...	41
இலக்கியச் செல்வங்கள்	...	43
கற்றதனாலாய பயன்	...	49
புரட்சி மனம்	...	52
நமது மருத்துவர்.	...	62

★

விலை 4 அணா

"பொன்னியில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே.

புரட்சிக்கவிஞர் விழா

சென்ற ஏப்ரல் 29 புரட்சிக்கவிஞர் பாரதிதாசனாரின் 64-வது பிறந்த நாளாகும். தன்மான இயக்கம் தமிழர்க்குத் தந்த பெருஞ்செல்வமாக விளங்கி, எண்ணற்ற இளைஞர்களைக் கவிதைத் துறையில் ஊக்கும் கவியூற்ருக இலங்கி, துருப் பிடித்துப் போயிருந்த தமிழ் இலக்கியத்திற்குப் பாரதி வழியில் புத்திலக்கியம் கண்டு, தமிழகக் கவிஞர்களிடையே ஈடும் எடுப்புமற்று விளங்கும் புரட்சிக் கவிஞருக்கு இந்நாளில் நம் வாழ்த்தினைக் கூறுகிறோம்; புதிய புதிய இலக்கியங்கள் இன்னும் பல தரும்படி தமிழ் மக்கள் சார்பாக அன்னாரை வேண்டுகிறோம்.

பகுத்தறிவுப் பாசறை படைக்கொட்டிலாக வேண்டாம்!

அன்றோர் நாள் ஆரியர்தம் நாட்டிலே, வடவர் தேசத்திலே விருந்தின் மன்னர் ஒருங்கு கூடினர்; திட்டங்களைத் தீட்டி நாட்டு மக்களைக் காக்கவோ, திரைகடல் கடந்து வெற்றிச் செல்வியைத் தேடவோ, தென்னாட்டை வெல்ல ஒரு தீர்மானம் நிறைவேற்றவோ அல்ல!

மட்டுண்டு மகிழ, மங்கையர் கரங்கள் நீட்டும் மதுவுண்டு மதியிழந்து ஆடியும் பாடியும் அகங்குளிர; கூடினர் குதித்தனர் கூத்தாடினர். நாடோடிகள் என்று அவர்களை நாம் கூறமாட்டோம்; புல்லேந்தினாலென்ன? பூணூலேந்தினாலென்ன? நாட்டையாளும் மன்னர்கள் அவர்கள்.

நாட்டு மன்னர் கூட்டத்திலே நூற்றுக்கணக்கானவர்கள் வீற்றிருக்கின்றனர். அத்தனை பேரும் அந்த இனத்தவர்; ஆம் என்று தலையாட்டும் தலையாட்டிப் பொம்மைகள். ''ஆற்றலற்ற நாட்டு மன்னர்களே'' என்று ஆரவாரிப்பதைப்போல இமயத்தின் நெற்றியிலே கொடியொன்று தோற்றமளித்தது துணுக்குற்றனர், துள்ளிக் குதித்தனர், காணாததைக் கண்டதைப்போல........காரணம் விருந்தின் மன்னர் முன்னர் தத்தம் வெறும் பெருமையைக் காட்டக் குதித்தனர். குடி வெறியோ! அன்றிக் கொள்கை

வெறியோ! ஆனால் அங்கே பறந்த அந்தக் கொடி யிருக்கின்றதே அது இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் வெற்றிச்சின்னம், இருந்தமிழ் நாட்டு மன்னனின் வீரஇலச்சினை.

எம் தமிழ் நாட்டு எல்லை இமயம்; அது எமக்குச் சொந்தம் என்பது போல் பறந்து கொண்டிருந்தது அந்தப் பைந்தமிழ்க் கொடி. பார்த்தனர் வேர்த்தனர் பயந் தொடுங்கினரோ அன்றிப் பாய்ந்தெழ எண்ணினரோ! கதித்தெழுந்தனர் — இருகசடர் கனகனும் விசயனும். ஆளில்லா இடத்தில் கோழை குதிப்பான் என்பதைப் போல "எம்போலும் முடி மன்னர் ஈங்கில்லாத போது வம்பர்கள் இக்கொடியை வானுயரச் செய்துவிட்டனர். நம்போன்றோர் இனி நலம்பாடிக்கொண்டிருக்க நாள் இல்லை; நண்பர்களே எழுவீர்! வெல்வோம் அந்த வீணர்களை, தெம் பற்றவர்கள், நம்போன்ற தீரர்கள் இல்லாத நாளில் கம்பம் நாட்டி வெற்றிக்கொடி நாட்டினர். இன்றுஅவர்கள் வந்தால்" பேதையர் பேசி முடித்தனர். மதியிழந்த மன்னர்கள் தம்து தகுதி மறந்தனர்.

ஏப்ரல் 18-ம் நாள்! அன்னைத் தமிழ் வளர்க்கும் பைந்தமிழ்ப் பாசறையாம் அண்ணாமலை நகரிலே; ஆம்! அறிவொளி வீசும் அருந்தமிழ்க் காளையர் துள்ளித் திரிந்து தமிழ்த்துதி பாடும் அண்ணாமலைநகரில்தான். வந்த விருந்தினர்க்கு வரவேற்பளித்தனர். வரவேற்பு விழா! வந்தவர் வேறு யாருமல்ல, கங்கா புத்திரர் கனம் நேரு அவர்கள். வரவேற்றவர்களோ காங்கிரஸ் ஊழியர்கள். மாலையும் வரவேற்பும் மந்திரியாரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. களிப்புக் கடலில் நீந்தினர் கனம் நேரு அவர்கள்—மகிழ்ச்சி மிஞ்சினால்............இழக்கச் செய்யும் என்பார்களே! அதை அந்த நிலையை அடைந்தாரோ என்னவோ!

காணுமிடமெங்கும் கருப்புக்கொடி—காதில் ஒலிப்பவையெல்லாம் நாட்டுப்பிரிவினை—போகுமிடமெங்கும் மொழிப் போர். இத்தனையும் கண்டும் கேட்டும் காட்டுமிராண்டிகள் முட்டாள்கள் என்று கழறிச் சென்றவரல்லவா? அவர்.

எக்காளக் களிப்பிலே இருப்பவர் இடந் தேடினர் காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில். தென்னாட்டாரை, மக்கள் மன்றத்தின் மதிப்பைப் பெற்றவர்களை, அடக்கு முறைப் போரில் ஐயாயிரக் கணக்கில் சிறைக்கனுப்பிய அறிவியக்கத்தாரை, ஆட்சியாளரையே அமைச்சர் பதவி வேண்டாம் என்று உடச்செய்தவர்களைப் பார்த்துப் பைத்தியக்காரர்கள் என்று பகன்றாராம்!

600 008
197819

ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை புலப்படும். அன்று கனகனும் விசயனும் கதித்தெழுந்தனர். கங்கையைக் கடந்து இமயத்திலே கன்னித் தமிழ்க்கொடி பறப்பதா ?

இன்று நேரு அவர்கள் குதித்தெழுகின்றார் என் திட்டமாகிய ஐக்கிய இந்தியாவைப் பிரிக்க எண்ணுவார்க்கு இந்நாட்டில் ஆதரவா என்று ?

அன்று ஆரியர் அளித்த விருந்திலே பேரிகை கொட்டி, பகைவர் முன்னல்ல பரம்பரையினர் முன்னே வீரமொழி பேசினர் கனகவிசயர்.

இன்று மாற்றுக் கட்சியினருக்கும் மதிப்பளிக்கும் பொதுக்கூட்டத்திலல்ல, காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் நேரு பேசியிருக்கின்றார் திராவிடக் கழகத்தினர் பைத்தியக்காரர்களென்று.

அன்று கூடியது ஆரியர் கூட்டம், ஆரியத் தலைவர் பேசினர். இன்று கூடியது தமிழர் பெருங்கூட்டம், ஆரியர் பேசினர். அன்றும் இன்றும் நிகழ்ச்சி ஒன்றுதான், ஆனால் நடைமுறைதான் வேறு.

காவா நாவினர் கடுஞ்சொல் காதிற்கெட்டியது கங்கைக் கரை மேவினன் செங்குட்டுவன், கங்கைக் கரை காவிரிக்கரையை வென்றுவிடும் என்று கூறிய கனக விசயன் தலையிலே கண்ணகிக்குக் கல்சுமத்திக் கட்டிக் கொணர்ந்தான்—இது அன்றைய நடைமுறை.

நேரு அவர்களும் இந்த நிலையைக் கனக விசயர் கல் சுமந்த வரலாற்றைப் படிக்காதவரல்ல ! படித்திருப்பார். ஆனால் அது ஏட்டுப் படிப்பாக்கியிருப்பார்—விஞ்ஞானத்தைக் கற்றுவிட்டு விண்மதியை நாகம் விழுங்குவதாகக் கூறும் கூட்டத்தவர்தானே !

நாட்டைக் காக்கும் நற்பணியை ஏற்ற நேரு அவர்களே ! தங்கள் நாவைக் காக்கும் நல்ல குணத்தையும் ஏற்க வேண்டுகின்றோம். மாற்றுக் கட்சிக் கருத்துக்களுக்கு ஏற்றமளிப்பதும், மாற்றுக்கட்சித் தலைவர்களைப் போற்றியுரைப்பதும்தான் அரசியல் நாகரிகம் என்ற அந்தப் பாடத்தைத் தாங்கள் அறிந்தவராயிற்றே ! அதற்குள் மறந்தது ஏனோ என்று கேட்கின்றோம் ? ஐக்கிய இந்தியாவில் ஆரியராவது திராவிடராவது, தென்னாட்டவராவது வடநாட்டவராவது என்று பறைசாற்றும் நேரு அவர்களே ! சிந்தித்துக் கூறும்.

2
[handwritten library annotation]

காங்கிரஸ் கட்சியில் தலைமைப் பீடம் காங்கிரஸ் ஆட்சி முதன் மந்திரி இடம் இரண்டையும் ஏற்றவர் தாங்கள்.

ஆனால் காமராசர் இந்த இரு பதவிகளையும் சென்னை மாகாணத்திலே ஏற்க முடியவில்லையே....... இது ஏன் ? வடக்கு தெற்கு என்பதன்றி வேறென்ன காரணம். அண்டிப் பிழைக்க வந்த ஆரியம் இந்நாட்டை ஆளுகிறது. இங்கிருந்து ஆண்ட எம் தமிழ்க் கூட்டம் ஏங்கியிருக்கிறது. வாழும் கூட்டம், வாடிடும் கூட்டம், இதற்கிடையிலே போராட்டம் இல்லாமல் இருக்க முடியுமா ? ஆட்சியாளர்கள் என்ன செய்திருக்க வேண்டும். அடிப்படைக் காரணம் என்ன என்று ஆய்ந்திருக்க வேண்டும்; நேர்மை, நீதி, ஒழுங்கு கட்டுப்பாடு உடையவர்களாயிருந்தால்.

காட்டுமிராண்டிகள் என்றீர்—கண்ணியத்தையும் கடமையுணர்ச்சியையும் எண்ணிக் காத்திருந்தோம். முட்டாள்கள் என்றீர்—எங்கள் முணுமுணுப்பு உம்மை முகம் கவிழச் செய்தது. இன்று பைத்தியக்காரர்கள் என்று பறை சாற்றிச் சென்றிருக்கின்றீர் ! ஆமாம் ! கட்டுப்பாட்டையும் கண்ணியத்தையும் எண்ணிக் காலம் பார்த்திருந்த நாங்கள் பைத்தியக்காரர்கள்தான். எது பைத்தியக்காரத்தனம் ?

ஆரியர் வேறு, திராவிடர் வேறு என்று வாய் வேதாந்தம் பேசாது வரலாற்றைப் புரட்டிக் காட்டுவதா ?

ஆண்டபரம்பரை அருந்தமிழ் நாட்டைத் தனித்து நின்று ஆட்சிபுரிய நினைப்பதா ? அன்னை மொழியை ஆட்சி மொழியாக்க எண்ணிப் பணிபுரிவதா ?

வற்றாத ஆறுகளும் வளங்குன்றா மலைகளும் முத்தெடுக்கும் கடல்களும் செந்நெற் கழனிகளும் செம்பொற் கனிகளும் இங்கிருக்க உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க இடமும் எம் நாட்டவர்க்குக் கிடைப்பதில்லையே இது ஏன் என்று எண்ணிப் பார்ப்பதா ?

வந்தேறிகளை இந்த நாட்டில் வாழவிட்டுவிட்டு, சொந்த நாட்டார் பிறர் நாட்டில் தோட்டிகளாய் வாழ்ந்து வருவது ஏன் என்பதா ? எதய்யா பைத்தியக்காரத்தனம் !

அறப்போர் அறப்போர் என்று கூறி அமைதியை நிலைநாட்டியது பைத்தியக்காரத்தனம்தான் !

கனக விசயர் தலையிலே கல்சுமத்திய கன்னித் தமிழ் நாட்டில் பிணக்குவியல்களைப் பெருக்கச் செய்யாதது பைத்தியக்காரத்தனம்தான்.

காவா நாவினர் கனகவிசயர் கல்சுமந்த காட்சி அன்று கண்ணெதிரே காவா நாவினர் கனம் பண்டிதர் கருப்புக் கொடி காணும் காட்சி இன்று. அன்று வாளேந்திப் போர் புரிந்தகாலம், இன்று அறிவேந்தி அறப்போர் தொடுக்கும் காலம்! காவா நாவினர் கண்ணியம் பெற்றதில்லை........ அடங்கா நாவினர் ஆட்சிப் பீடத்தில் அதிகநாள் இருந்ததில்லை. நாவடக்கம் அற்றோர் நல்வாழ்வு பெற்றதில்லை.... தனிப்பட்டவர் நிலையே இப்படி என்றால் நாட்டையாளும் நல்ல மனிதர் கனம் நேரு அவர்கள் இதைத் தம் அணிகலமாகக் கொள்ள வேண்டும். ஏனென்றால் காவா நாவினர் மதியிழந்த மந்திரிகள் — இவர் தம் ஆட்சி கணநேரம் ஒளி காட்டி மறையும் மின்மினியாவதைக் காலங் காட்டிச் சென்றிருக்கின்றது...............கனம் நேரு அவர்கள் மட்டுமென்ன? கற்பாறையா? ....இருக்கட்டுமே சிற்றுளிகளாம் மக்கள் ஒன்று சேர்ந்தால் கற்பாறையும் கண நேரத்தில் மறையலாம்.

இறுதியாக ஒன்று இயம்புகின்றோம்! உலகப் பொதுமறை தந்த வள்ளுவன் குறளையாவது வழிகாட்டியாகக் கொள்வீர்களென்று,

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு"

சொல்லிழுக்குப்பட்டுத் துயரப்படாதீர். பகுத்தறிவுப் பாசறைகள் படைக்கலக் கொட்டிலாக மாற வேண்டாம்.

மே விழா!

உழைப்பின் பெருமையை உலகம் உணரவேண்டும்; உழைப்பவர்களுக்கு முதலிடம் தரப்படவேண்டும். உழைப்பே செல்வம் என்று கருதப்படும் நாளே மக்கள் சமுதாயம் முன்னேறும் நன்னாளாகும். "உழைப்பவர்க்கே உலகம்" என்றும், "புதியதோர் உலகு செய்வோம்" என்றும் எழுப்பப்பெறும் முழக்கங்கள் இந்நாளில்தான் உருவம் பெறமுடியும். இந்த ஆண்டு நடைபெறும் **மே விழா** இந்நிலை நோக்கி உலகை நடத்திச் செல்லுமென நாம் நம்புவோமாக. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பாட்டாளி மக்களுக்கு நம் மே தின வாழ்த்தினை மனமுவந்து கூறுகிறோம்.

மக்கள் மன்றம்

அஸ்ஸாம்,
12-4-54.

பொன்னியைக் கண்டேன். களிப்பெய்தினேன். மலர்ந்த முகத்தோடு என் உள்ளத்தைக் கவர்ந்தாள். என்னை மட்டுமா? இல்லை. தமிழன் எங்கெங்கு குடிபுகுந்துள்ளானோ அங்கெல்லாம் புன்னகை பூத்துவிட்டாள். வளர்க பொன்னி. வாழ்க தமிழகம். பி. பி. எஸ். மணி.

* * *

சீர்காழி, 17-4-54.

என்னை வளர்த்த என் அன்புக் காதலி "பொன்னி"யின் வரவு கண்டு மகிழ்கிறேன். "காரிருள் அகத்தில் நல்லகதிரொளியாய், இந்தப் பாரிடைத் துயில்வோர் கண்ணிற் பாய்ந்திடும் எழுச்சியாய்த்" திகழும் "பொன்னி" வலிவும்பொலிவும்பெற வாழ்த்துகிறேன். ஆர். எஸ். கலைச்செல்வன்.

* * *

கொழும்பு-14.
8-4-54

"பூத்துக் குலுங்குது பார்,
"பொன்னி"யென்ற மலர்
பொலிந்து விளங்குகிறாள்
பொன்னி தமிழ்ச்செல்வி
தமிழ்ஞானம் தான்பெருக்க
தமிழர் நல்வாழ்வுபெற
நலமாக வந்துதித்த
நமது பொன்னி வாழி!

எம். கிரகரி கர்வாலோ.

வருந்துகின்றோம்!

ஜூபிடர் பிக்சர்ஸின் சொந்தக்காரர்களில் ஒருவரும், படவுலகில் முன்னணியில் இருந்தவருமான எஸ். கே. மொய்தீன் அவர்கள் கடந்த 17-4-54 அன்று இரவு 10-00 மணிக்குத் திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக இறந்தார் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம். அன்னாருடைய திடீர் மரணத்தால், அவரையிழந்து சோகத்திலுழலும் அவர்தம் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் உரியதாகுக.

பொன்னி அலுவலகத்திற்குக் கடிதம் எழுதும் அன்பர்கள் தபாற் பெட்டி எண் **1795** என்று குறிப்பிட வேண்டுகிறோம்.

—பொறுப்பாளர்.

புதுவயல்
18-4-54.

கடல் கடந்திருந்த காதலனை கன்னல் மொழியின்றி, முதலில் கனிச்சிரிப்பை விட்டெறிந்து கப்பலடியில் நின்று வரவேற்கும் காதலிபோல், நூற்றுக்கணக்கான இதழ்க் கன்னிகளுடன் நின்று, என் செந்தமிழ்க் காதலி பொன்னி, இதழ்க் கடையில் சிரிப்பமையக் கண் சிமிட்டினாள்; மாண்டவர் மீண்ட இன்பத்தைப் பெற்றேன்—மயங்கினேன். எங்களை எழுத்தாளர் உலகிற்குக் கொண்டுவந்த இதயக் கமலமல்லவா அவள். பெரி. சிவனடியான்.

வேலூர்.
15—4—54.

"பொன்னி" மீண்டும் ஆடியும் பாடியும் ஓடி வருவது கண்டு உள்ளம் மகிழ்வுற்றது. தங்கள் முயற்சி வெல்க. தமிழ் வெல்க. பொன்னியின் இன்பமே இன்பம்!

T. கோவேந்தன்.

* * *

க. புதுப்பட்டி,
19—4—54

யாண்டு பலவாக மகப்பேறின்றி வாடிடும் பெற்றோருக்கு மைந்தன் பிறந்தால் யாங்ஙணம் மகிழ்வரோ, அவ்வாறே "பொன்னி" கண்டு அகமிக மகிழ்கிறேன்.

எம். இரத்தினம்.

* * *

கரூர்
21—4—54.

"பொன்னி" என்று வருமோ என ஏங்கினேன். வந்தது கண்டு பூரித்தேன், சிரிக்க வைத்தது, சிரித்தேன். சிந்திக்க வைத்தது, சிந்தித்தேன். "அந்த நாள்" அருமை.

ம. ஆறுமுகம்

* * *

கல்லாவி,
19-4-54,

"பொன்னி"யில் கன்னித் தமிழில் பல கருத்துரைகள் கண்டு களிப்படைந்தேன். "அந்த நாள்" தொடர் சித்திரக் காட்சிகள் என் மனதைக் கவர்ந்தன. "பொன்னி" சிந்தனைக்கு விருந்தாகவும், சீர்குலையும் திராவிட சமுதாயத்திற்குச் சிறந்த மருந்தாகவும் இருக்குமென வாழ்த்துகிறேன்.

வளர்க பொன்னி! பரவுக பொன்னியின் புகழ்!!

க. வெ. சு. எழில்வேலன்

நம்மைப் பிரிந்தார்!

பணம் படைத்தோரைப் பார்க்கின்றோம்; ஆனால் பிறர்க்கு அள்ளிக் கொடுக்கும் குணம் படைத்தோரைக் காண முடிவதில்லை. தமிழுக்கா......? நான் தருகின்றேன்; தமிழ்ச் சங்கத் தலைமையா...? நான் ஏற்று நடத்துகின்றேன்; ஏழை மாணவனா...? நான் உதவி செய்கிறேன்; கல்வி வளர்ச்சிக்கா....? காசுகளை அள்ளிக் கொடுக்கிறேன் என்று வாழ்ந்து காட்டியவர் முத்தமிழ் வள்ளல் A. Y. அருளானந்தசாமி நாடார் அவர்கள். அவரது மறைவு பொதுவாகத் தமிழ் நாட்டிற்கும், சிறப்பாகத் தஞ்சை மாவட்டத்திற்கும், குறிப்பாகக் கரந்தைத் தமிழ்சசங்கத்திற்கும் பேரிழப்பாகும். அன்னாரை இழந்து வருந்தும் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுவதைத் தவிர வேறென் செயவல்லேம்.

செய்தித் திரட்டு

ஆட்சிமொழி மாநாடு
பெண்ணாகடம், 11—4—54

உணர்ச்சி வேண்டும்.

தமிழர்களுக்கு உணர்ச்சி வேண்டும். உணர்ச்சி மிகுதியாகவும் இருக்கக்கூடாது. ஆனால் இப்போது உள்ளது போல் குறைவாகவும் இருக்கக்கூடாது. மாநாடு திறந்தே இருக்கிறது. உங்கள் உள்ளத்தைத்தான் திறக்க வேண்டும். கடமையில் கருத்து, நேர்மை, நாணயம், ஒழுங்குமுறை, கட்டுப்பாடு இவைகளெல்லாம் வேண்டும்.

ஓ. பி. இராமசாமி ரெட்டியார்

* * *

நாகபுரி. ஏப்ரல் 20.

மக்களாட்சி மலர!

மக்களாட்சி மாண்புற வேண்டுமானால் பலமான எதிர்க்கட்சி அவசியம். ஒவ்வொருநாளும் அரசாங்கத்துக்குச் சோதனைக் கட்டமாய் இருக்க வேண்டும்.

டாக்டர். அம்பேத்கார்

* * *

அகில இந்திய எழுத்தாளர் மாநாடு
அண்ணாமலைநகர், 16—4—54.

பகுத்தறிவைப் பயன் படுத்துக.

இந்தியா முழுவதும் உள்ள எழுத்தாளர்கள் எந்தச் சிக்கல்களைப்பற்றி எண்ணும் பொழுதும் எழுதும் பொழுதும் அல்லது பேசும் பொழுதும் பகுத்தறிவைப் பயன் படுத்தவேண்டும்.

டாக்டர், இராதாகிருஷ்ணன்

அகில இந்திய எழுத்தாளர் மாநாடு
அண்ணாமலைநகர், 16—4—54.

எழுத்தாளர் கடமை.

அரசாங்கங்கள் அதிகாரத்தைப்பயன் படுத்தி நாடுகளின் நிகழ்ச்சிகளை உருவாக்குகின்றன. ஆனால் நாமோ, நமது பேச்சாலும். எழுத்தாலும் மக்களுடைய பகுத்தறிவை வயப்படுத்தி நிகழ்ச்சிகளை உருவாக்குகிறோம். நாம் குறிப்பிட்ட ஒரு நாட்டுக்கோ, அல்லது கொள்கைகளுக்கோ பாடுபடுபவர்களல்ல; நமது நோக்கம் மனித சமுதாயத்துக்குப் பணிபுரிவதும் உலக அமைதிக்கு உழைப்பதுமாகும்,

டாக்டர். இராதாகிருஷ்ணன்

* * *

ஆட்சிமொழி மாநாடு.
பெண்ணாகடம். 11—4—54.

கற்றுக்கொடுத்தவன்

தமிழ் ஆட்சிமொழியாக்கப்படவேண்டும். அதற்கு நம்மிடையே ஒற்றுமை வேண்டும். நமக்குள் கட்சிப் பூசல் ஒழிய வேண்டும். தமிழ்மொழி கிரேக்க, இலத்தீன், எகிப்திய, பாபிலோனிய மொழிகளுக்கும் மூத்தது. தாலூக்கா, மாவட்டம் போன்ற பிரிவுகளை உலகிற்கே பிரிக்கக் கற்றுக்கொடுத்தவன் தமிழன். கரிகாலன் அணை, பாண்டியன் அணை இவைகள் எப்பொழுது கட்டப்பட்டவை? அவைபோல் தமிழும் வாழும்.

பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரை M.A.,L.T.

காதல் பாடம்

அவன் :

தினைப்புனம் எங்கும் தேடிப் பார்த்தேன்; என் தேன்மொழியைக் காணாது திகைத்தேன், கிளி கடியும் கீதம், குருவியோட்டும் குரல்... கேட்டு மகிழச் சென்றேன்; கேளாது திகைத்தேன். மயிலெனத் தோகை விரித்து மானெனத் துள்ளி ஆடும் என் மதி முகத்தைக் காணமுடியாது போயிற்று.

கிளிகள் ''அக்கா...! அக்கா !!', என்றழைத்தன; குயில்கள் கூ... கூ...வெனக் கூவின; ஒருக்கால் என் கொஞ்சுமொழியைக் காணாது அழுதனவோ! கதிரை உண்ணாமல் கதறுகின்றனவே... அதுதான் காரணமாயிருக்குமோ!

மணம் வீசிக் குளிர் காட்டி மிதந்துவரும் தென்றலோ முல்லையின் நறுமணத்தை முகரச் செய்தது; முகர்ந்தேன். ஆனால் மகிழ்ந்தேனில்லை. வருவேன் என்ற எனக்கு வரவேற்பளித்து முல்லை சூடி முறுவல் நகை காட்ட, புனக் கொல்லை சென்றிருப்பாளோ! ஆம்! அப்படித்தானிருக்கும். இல்லை யென்றால்......ஒருக்கால் நம்மைக் கேளிக்கை காட்டி, வேடிக்கை பார்க்க எண்ணியிருப்பாளோ? எவ்வாறிருந்தால் தானென்ன? என் வாடாத முல்லையைத் தேடாதிருக்க முடியவில்லையே!

எழுந்து நடந்தேன்; முகை விரித்து நிற்கும் முல்லைக்காட்டை நோக்கி. முல்லை மலர் கொய்து என் முழுநிலா வருவதற்கு முன்னர் கள்ளத்தனமாக அவள் முல்லைச் சிரிப்பைக் கவர நினைத்தேன். நினைத்து நடந்தேன் நெஞ்சத்தை முன்னே விட்டு. கண்டதென்ன? என் அன்பு உருவத்தைக் காணவில்லை; அலர்ந்த முல்லையைக் கண்டேன், வண்ணப்புருவைக் காணவில்லை; வளர்ந்த முல்லைக் கொடியைக் கண்டேன்.

முல்லையெல்லாம் முகை விரித்து நின்றன. பார்த்ததும் தத்தம் பற்களைக் காட்டின. அழுதனவோ! அன்றி அரற்றினவோ! அவள் இல்லாத காரணத்தால். உள்ளமிருந்தால் அவை உணர்த்தியிருக்கும்; வாயிருந்தால் கூறியிருக்கும்!

அருவியிலே மருவியாடுவாள்; சுனையிலே மூழ்குவாள்; என்றெல்லாம் எண்ணி எங்கெங்கோ தேடினேன். ''நாளைக் காண்போம்'' என்று நலங்கூறிச் சென்றவள்......இன்று காலையிலிருந்து தேடியும் காணவில்லையே! காரணம்......என்ன காரணமாயிருக்கும். சிந்தித்தேன்...சிந்தித்தேன்... சிந்தனையிலே மனம் நொந்ததுதான் பயன். பகல் முழுதும் என் பாவை வருவாள் என்று பார்த்துக் கொண்டிருந்தேன். பகல் கழியப்போகின்றதே, இன்னும் என் பாவையைக் காணோமே என்றெண்ணியபோது எனக்கு அகிலமே வெறிச்சென்றாகி விட்டது.

ஏன் அவள் வரவில்லை? எண்ணி எண்ணிப் பார்த்தேன்; வருந்தி வருந்தி நினைத்தேன், வாராத காரணம் என்னவென்றறிய மிஞ்.

சியது வருத்தந்தான். கதிரவன் மேற்றிசையில் இறுதியாகத் தனது கதிர்க் கை காட்டி மறைந்தான். ஆம்! என் ஏக்கம் காணத் தாளாதுதான் மறைந்தானோ என்னவோ?

அவள் :

நான் என்ன செய்வேன் முல்லைக் காட்டிலே என்னைத் தேடியிருப்பார். அருவியிலே நான் ஆடிக் கொண்டிருப்பேன் என்று ஆய்ந்திருப்பார். கிளியோட்டிக் கொண்டிருப்பேன் என்று தினைப்புனம் எங்கும் சுற்றியிருப்பார்; எங்குந் தேடி என்னைக் காணாத போது எத்துணைத் துன்பங்களை ஏற்றிருப்பார்! இல்லை... என்னைப் பற்றித்தான் என்ன நினைத்திருப்பார்.

நான் என்ன செய்வேன்? பெண்ணாகப் பிறந்ததே குற்றம், என்னைப் பெற்றெடுத்த அன்னை என்னிடம் பேரன்பு காட்டுவது பெருங் குற்றம்; இவற்றினும் பெருங்குற்றம் உள்ளத்தின் நிலையை இந்த உடல் காட்டி விடுவதுதான்! அகத்தின் நிலையைப் பிறர்க்கு எடுத்துணர்த்த முகந்தான் கண்ணாடியோ!

பகலையுண்டாக்கும் இந்தப் பாழும் கதிரவன் ஏன் இரவில் மறைகின்றான்? எப்போதும் பகலாயிருந்திருப்பின் வீட்டிற்கு வர வேண்டிய வேலையிருந்திருக்காது. காலமெல்லாம் தினைப்புனத்தில் காதற்பாடம் கற்றிருக்கலாம். பகல் முழுதும் அவரைப்... பக்கத்தில் வைத்துப் பார்த்துக் கொண்டேயிருந்திருப்பேன். கதிரவனைப் போக்கும் இந்தக் காரிருள் என்னைக் காட்டைவிட்டு வீட்டிற்கு வரச் செய்துவிடுகின்றதே.

நான் என்ன செய்வேன்! அந்திப் பொழுது என்னை அகத்திற்கு இட்டு வந்தது. அன்னை என் முகத்தைப் பார்த்தாள். இல்லை, இல்லை! என் அங்க அமைப்பைப் பார்த்தாள் திடுக்கிட்டாள். "ஏனம்மா இப்படி" என்றாள். "என்னம்மா!" என்றேன். அகத்தில் ஏதேனும் அதிர்ச்சி ஏற்பட்டதோ" என்றாள். தோழி ஒரு மாதிரியாகப் பார்த்தாள். தாய்க்குஎன்னைப் பார்த்ததும் என்ன தோன்றியதோ! "அணங்கு தீண்டியதோ! மற்றுயார் தீண்டினரோ" என்றாள். திடுக்கிட்டேன். இன்பமோ! துன்பமோ அளவோடிருந்தால்தானே! இன்பம் என்று அள்ளி அள்ளிக் குடித்தால்... உள்ளத்தில் மாற்றம்; உருவத்திலும் மாற்றம் அன்னை அறிந்து கொண்டாள்.

நான்தான் என்ன செய்யமுடியும்! "அன்பே! அமுதே! ஆர

பழம்பெரும் தமிழ் இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டென்பன. எட்டுத்தொகையுள் ஒன்றான கலித்தொகையோ கற்றோரேத்தும் தகுதிவாய்ந்தது.

"தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாய்க் கூட்டிச் சர்க்கரையும், கற்கண்டின் பொடியும், மிகக் கலந்து இனித்த நறுந் தேன் பெய்து இளஞ்சூட்டி லிறக்கி எடுத்த சுவைக் கட்டிகளின் தொகுப்பே கலித்தொகை எனல் பொருந்தும்........ அக்கட்டிகளுள் ஒன்றே கலித்தொகை 51ம் பாடல். 'காதல் பாட'த்தைப் படித்துப் பார்த்த பின்னர் கலித்தொகையில் வாசகர்களின் நாட்டம் செல்லவேண்டுமென்பது எமது விருப்பம்.

ணங்கே! இன்பக் கனிச்சுவையே! எழிலூட்டும் பாவையே! கண்ணே மணியே!'' என்றெல்லாம் காதல் கீதம் பாடிய அவரை என்னால் கணமும் பிரிய முடியவில்லையே! அன்பின் பிணைப்பிலே ஈருயிரை ஓருயிராக்கிய அவரை அரைக் கணமும் மறக்க முடியவில்லையே! பிரிவு என்னைப் பேயறைந்தவளாக்கிவிட்டது... பிரிவு என் நிலையைப்பிறர்க்கு அறிவித்துவிட்டது. அன்னை, என்னை அறிந்துகொண்டாள்; இல்லை! புரிந்துகொண்டாள். புனக்காவலுக்குப் போக வேண்டாமென்றாள்; அகத்திலிருத்தி விட்டாள். என் நிலையை அவர்தான் எப்படி அறிவார்! நான்தான் எவ்வாறு அறிவிப்பேன்.

பகற்குறி பாழாகி விட்டதே என்றுபதறினேன்; இரவிலாவது வருவார் என எதிர் பார்த்தேன்.

முதல் யாமம்! வீட்டுத் தோட்டத்திலே ஒரு கொன்றை மரம்; பறவைகளுக்கு அதுதான் இரவு தங்குமடம்... ஒரே காலத்தில் எல்லாப் பறவைகளும் ஓலமிடத் தொடங்கின. அவர்தான் வந்திருப்பார் என்று ஆவலுடன் எழுந்தேன். தாய் ''என்னம்மா வேண்டும்'' என்றாள். ''ஒன்றுமில்லையம்மா'' உறக்கத்தில் கலக்கம் என்று உறங்கத் தொடங்கினேன். இரண்டாவது யாமம்! மரத்தின் கிளை குலுங்கியது... இரவுக்குறி காட்டுகிறார் எம் காதலர் என்றெண்ணினேன்; எழுந்தேன்... நடந்தேன்... நாய் குரைத்தது. அப்பா எழுந்துவிட்டார்! ஆடாமல் அசையாமல் படுக்கையறை தேடிப் புகுந்து விட்டேன்.

இறுதி யாமம். எழுந்தேன்... நடந்தேன்... என்னைக் காட்டிக் கொடுப்பதில் கவனம் செலுத்தினானோ என்னவோ! சந்திரன் ஒளிந்து நின்று என்னை ஊருக்கு அறிவிப்பவன் போலத் தன் உடலைப் பாதிக்கு மேலாக மறைத்து வெளிப்பட்டான். காதலர் வரவு நாடிக் காத்திருந்தேன்... நாழிகை கழிந்தது; கோழியும் கூவியது. என் உள்ளமும் வாடி வதங்கியது. என் அகம் நாடியவரைக் காணாது அகம் நாடிப் புகுந்தேன்...... அவரோ......

அவன்:

பகலெல்லாம் தேடிப் பார்த்தேன். இரவெல்லாம் ஏங்கியிருந்தேன். என் செல்வியைக் காண முடியவில்லை. இரவுக் குறியில்... பகற்குறியில்... எத்தனை நாட்கள்! காணமுடியாது தவித்தேன், எத்தனை நாட்கள் தாம் இப்படிக் கழிப்பது? காண வேண்டும்... ஆம் காணத்தான் வேண்டும். இதற்கொரு முடிவு கண்டேன்... சரியோ? தவறோ? குறையோ? நிறையோ? அவற்றையெல்லாம் ஆய்ந்துகொண்டிருக்க என் உள்ளத்தில் அத்துணை அமைதி ஏது? புறப்பட்டேன்; பகலவன் ஒளி பரப்பிக் கொண்டிருக்கும் பகல் நேரத்திலேயே என் காரிகை வீடு நோக்கிக் கால்கள் நடந்துகொண்டிருந்தன, ஆனால், என் கருத்

தெல்லாம்... அகத்தின் அருகில் சென்றேன். ஏன்? அகத்திற்கே சென்று விட்டேன்.

வரவேற்பில்லாமல் வாயிலில் நுழைந்தேன். வீட்டின் முன்புறத் திண்ணை... அமர்ந்தேன். அழைப்பது யாரை? என் ஆருயிரைக் கவர்ந்த அணங்கையா? அணங்கையீன்ற அன்னையையா? என் ஆருயிரை அழைத்தால் அன்னையோ தந்தையோ ஐயமுறுவரே;• அன்னையையோ தந்தையையோ அழைத்தால் அவர்கள் தாமே வருவர். நாம் பார்க்க வேண்டுவது அவளை; ஆம் என் ஆருயிரை விட்டு நீங்கினுல் சுட்டெரித்துவிடும்; தொட்டு நெருங்கினுல் தண்ணென்றளிக்கும் தீயைப் பெற்றிருக்கும் என் திருமகளை அல்லவா நான் பார்க்க வேண்டும். வருவது வரட்டும்! வருவார் வந்து போகட்டும் என்றெண்ணினேன். ஆழமான ஓடையில் தவறி வீழ்ந்தவன் நீந்துவதற்கு நேரம் காலம் பார்த்துக் கொண்டா இருப்பான்.

''வீட்டிலுள்ளவர்களே'' என்றழைத்தேன். ஏனென்று கேட்பார் யாருமில்லை. இல்லை! இல்லை!! அவர்கள் ஏனென்று கேட்கும் வரை நான் என் பேச்சை நிறுத்தி வைக்கவில்லை. ''தண்ணீர்த தாகம் நீர் வேண்டுமென்றேன்... என்னைப் பற்றியது தண்ணீர்த் தாகமா? தணியாத் தாகமல்லவா?

அவள் :

தந்தை உணவுண்ண அமர்ந்தார். அறுசுவை உண்டியோ? அன்றி அத்தனையும் அற்றதோ? நான்தான் அவற்றை மறந்து அநேக நாட்களாயிற்றே! தாய் பரிமாறத் தொடங்கினுள், அருகே நின்றிருந்தேன். தாக மிகுதியால் தண்ணீர் வேண்டுமென்ற குரல் கேட்டது. பரிமாறிக் கொண்டிருந்த அன்னை ''மகளே'' என்றுள், ''ஏனம்மா'' என்றேன்.

''பொன் கரகத்திலே (தம்ளர்) நீர் வார்த்துப் புதிதாக வந்தாற்கு ஊட்டி வா'' என்றுள். ''ஊம்'' என்று நகர்ந்து நீர்வார்த்து ஊட்டச் சென்றேன்.

எனக்கென்ன தெரியும்? அன்று சிற்றில் கட்டிடுவோம்; சிறு சோறு ஆக்கிடுவோம்: சிறுமியருடன் ஆடிப்பாடி அகமகிழ்ந்து கூடியிருப்போம். அவ்வமயம் கட்டுக்கடங்காத காவலற்ற ஒருவன் சிறுதேருருட்டி ஓடிவருவான். அவனைக் கண்டாலோ! எங்களுக்கெல்லாம் ஒருவித நடுக்கம். ஆனுல் உள்ளத்திலே ஒன்றுமறியா உவகை, அதுதான் இன்று...

அவன் வருவதுதான் தெரியும். சிற்றில் அழிக்கப்படும்; சிறுசோறு இறைக்கப்படும், சேர்த்துக் கட்டிய கோதை கூந்தலிலிருந்து பிய்த்தெறியப்படும். வரிப்பந்து எங்கள் கரங்களிலிருந்து வாங்கப்படும்! ''அன்னையோ'' என்றழுவோம். நாங்கள் அழாவிட்டாலும் அவனுக அழச்செய்து விடுவான். இத்தகு செயல்களை இளமைப் பருவத்தே புரிந்த அந்தப் பட்டிப்பயல் தான் நீர்வேட்டுக் கேட்டான் என்பது, எனக்கெப்படித் தெரியும்?

அறியாது சென்றேன். இருந்துண்டு செல்ல வந்த விருந்தினன் என்று எண்ணிச் சென்றேன். ஆனுல் மனநோய்க்கு மருந்தளிக்க வந்த மருத்துவன் என்பது எனக்கெப்படித் தெரியும்? நீர்க் கரகத்தைக் கொண்டு சென்று நீட்டினேன். நீரை வாங்க மறுத்தவன் போல் என் நீள் கரம் பற்றினுன். வளையணிந்த முன் கையை வருத்தி விட்டான். அவன் என்பால் கட்டிக்காத்த ஆசையை என் கரத்தைத் தொட்டுப் பிடிப்பதில் காட்டிவிட்டான்.

நீர்வேட்கை தணிக்கலாமென்று தான் நிமிர்ந்து சென்றேன். காதல் வேட்கைக்குக் களைப்பிடம் காட்டப்போகின்றேம் என்பது எனக்கெப்படித் தெரியும்? தண்ணீர் வேண்டி வந்திருந்தால் தாகம் தணிந்து சென்றிருப்பான். என்னை வேண்டி வந்தவன் எப்படி எழுந்து செல்வான். கட்டிக் காதத ஆசையை விட்டிக்கொடுத்தா? செல்வான். திடீரென்று கையைப் பற்றியதும் திடுக்கிட்டேன். ''அம்மாவோ! இவன் செய்த அநீதியைப் பார்'' என்று அலறிவிட்டேன். அன்னையோ என்னினும் அலறி ஓடிவந்தாள். கரகம் கரத்தினின்றும் நழுவியது. இறுகப் பிடித்தவன் கரங்கள் என்னை நாடுகின்றன. என் கரங்களோ...... நடுங்கின.. அன்னையோ அருகே வந்துவிட்டாள்! இந்த நிலை என் வாழ்க்கையில் புதிது மட்டுமல்ல! புதிராகவுமிருந்தது.

அவன் :

என்ன எடுத்துரைப்பாளோ என்றெண்ணினேன். உள்ளதைக் கூறிவிட்டால் ஊரில் அலர் பரவிவிடுமே என்று அஞ்சினேன். பெண்மை பேதமை யென்பரே! என்றெல்லாம் ஒரு கணம் என் உள்ளம் ஊசலாடத் தொடங்கியது. ஆனல்....மறுகணம்....அவள் சொன்ன அந்த விடையிருக்கின்றதே அது...என்னை ஓர் ஆட்டு ஆட்டிவிட்டது. என் உள்ளமே ஆட்டங் கண்டுவிட்டது. அச்சங்கொண்டல்ல! அவள் அறிவுத் திறங்கண்டு. அன்னையே! உண்ணும் நீர் விக்கினன், என்ருள். அன்னை என்னை நோக்கி விரைந்தாள். படபடத்த நெஞ்சைப் பக்குவமாகக் கையால் தொட்டுப் பார்த்தேன்.

அவள் அன்னையோ! என் முதுகைத் தன் கையால் தடவிக் கொடுத்தாள். விக்கினன் என்று பக்குவமாக என் பைந்தொடி சொன்ன வாக்கை நம்பினள். அன்னை தடவியதெல்லாம் ''என் மகள் உனக்குதானப்பா'' என்பதன் குறிப்போ என்றெண்ணினேன். வேறென்னதான் எனக்குத் தோன்றும், கனியைத் தேடி வந்தவனுக்குக் காயும் கனியாகத் தானே தோன்றும்!

அவள் :

பிறரகம் புகாத பெண்மை இருக்கின்றதே! அது என்னைப் பெரிதும் நடுங்கச் செய்துவிட்டது. வாய்விட்டு அலறவும் செய்தேன். கட்டிக் காப்பவனைக் காட்டிக் கொடுத்தது என் வாய். உண்மையறிந்த உள்ளம் சும்மா இருக்குமா? என்ன! வழி தேடத் தொடங்கியது; 'அன்னை யறியாமல் அதை மறைக்க வேண்டுமே! இத்துணைத் துணிவு எப்படித்தான் எனக்கேற்பட்டதோ! நினைக்கும் போதே வியப்பு மேலிடுகின்றது. எப்படியோ என்னவோ கூறி மறைத்துவிட்டேன். ஆனல் அவ்வமயம் அவன் பார்த்த...அந்தப் பார்வை இருக்கின்றதே...அது; என் அகம் கலந்து அகம் புகுந்த கள்வன்இருக்கின்ருனே அவன்... நானறியாமல் என்னுளம் கவர்ந்த அந்தக் கள்வன்......'' கடைக்கண்ணுல் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்'' செய்தான். அக்கள்வன் மகனைக் கனவிலும் மறத்தல் ஆவதா? எப்படித்தான் மறத்தல் ஆகும்!

நான் அறியாத காதல் பாடம்! பிறர் அறியாமல் வாய் திறவாமல் விழியை மொழியாக்கி அறிவாய் எனத் தெரிவித்த அந்தப் பாடம், மறத்தற்குரியதா? கடைக்கண்ணுல் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம் பெற வகை காட்டும் அப்பாடம்! ஆம் காதல் பாடம் தான்!

*

சிந்தை கொள்வீர்!

'' எழில்வேந்தன் ''

கொங்கு நாட்டு வேந்தனும்! குமணன்
தங்கும் புகழ் பாடுவோம் .... நாம்

எங்குங் காணவியலா ஈகை
அங்கு இருக்கக் கண்டேன்

நாவால் புகழ்ந்திடுவார் புலவர்கள்
நாடொறுஞ் சென்றிடுவார் .... அங்கே
பாவலர் உள்ளமதை ஒருபொழுதும்
கேவலம் செய்தறியான் .... அவன்

அந்தோ! அழிந்திட்டதே அன்றிருந்த
அருந்தமிழ் உணர் வெல்லாம்
சிந்தை கொள்வீர் இன்றே .... நீவிர்
செந்தமிழ் ஆட்சிதனை (கொங்கு)

[கதையமைப்பையோ, கற்பனைக் கருத்துக்களையோ, சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் தம் இசைவு பெறல்வேண்டும்]

[கதை — சிலப்பதிகாரம்; கருத்துக்கள் கற்பனை எனினும் அகச்சான்றுடன் அமைந்தன.]

காட்சி 7

[பேரியாற்றின் மணற்பரப்பு: காலம் பிற்பகல்........ மலைவளம் காணவந்தோர் ஆங்காங்கே மணற்பரப்பில் அமர்ந்துள்ளனர்........ஒரு பக்கம் அடிகள் அமர்ந்துள்ளார்........ஆசான் அடிகளைச் சந்திக்கின்றார்.]

ஆசான் :—அடிகளே! அடியேன் வணக்கம். இயற்கைவளம் நல்கிய இன்பத்தில் ஆழ்ந்துவிட்டீர்கள்! இல்லையா?..........

அடிகள் :—ஆம் புரோகிதரே! ஆம்........மலைவளம் காணக் கண்களும் கண்களோ? இடுமணல் எக்கர்ப் பரப்பும், இளம் தென்றல் வீசும் இன் மணமும் எத்துணை இன்பந் தருகின்றன.

மாலைக் கதிரவன் மலைமறை காட்சியும், அவன் தன் கோலக் கதிர்களைக் கொடுத்து நீங்கலும், காலமெல்லாம் கண்டு களித்தற்குரியன; கழிபேருவகையூட்டுவன.

கிளியோட்டுவார் பாடும் கீதம்; தினை குற்றுவோரின் தித்திக்கும் தேமதுரத் தமிழ்; குரவைக் கூத்தாடும் குறத்தியரின் குயிற்பாட்டு; அருவியின் இன்னொலி...ஆ....ஆ........இவற்றைக் கேட்காத செவிகளும் செவிகளோ.........!

ஆசான்—புரோகிதர். இவர் ஆட்சிமுறையை நடாத்தும் ஐம்பெருங் குழுவில் ஒருவர், இந்தப் பணியைத் தமிழ்ப் பெருமக்களே ஏற்றிருந்த காலம் மாறி ஆரியர் ஏற்கும் நிலைமை ஏற்பட்டது, தலைதூக்கி நின்ற தமிழர் பண்பாடுகள் தலைசாயத் தொடங்கின. செங்குட்டுவன் ஆட்சியிலும் இந்த நிலை........

ஆசான் :—ஆம்....ஆம்...! இயற்கைக் காட்சி எவர் மனத்தையும் தன்பால் இழுத்துவிடும்! இசை ஓரறிவுயிரையும் தன்வயப் படுத்திவிடும்.

அடிகள் :—என்னே! இன்பம். இயற்கை அன்னை அளிக்கும் இவைதாம் இன்பத்தின் எல்லையோ?

ஆசான் :—ஆம்! அடிகளே ஆம்! என் வாழ்க்கையில் இரண்டாவது முறை........சென்ற ஆண்டில் தேவர்களுக்கு அவிர்ப்பாகம் அளிக்க தீ வளர்த்தபோது மறையவர் இசைத்த மந்திரங்களின் இன்னெலி என் மனத்தை மகிழ்ச்சிக் கடலிலே திளைக்கச் செய்தது........

அடிகள் :—இன்று அத்துணை மகிழ்ச்சி..........

ஆசான் :—இல்லை என்று சொல்லவில்லை

அடிகள் :—வேதத்தின் நாதம் உமது ஆத்தும கீதமாகிவிட்டது. புரியாதது.......இசை அமையாதது,.......இன்பம் அளியாதது........ என்றாலும்.......

ஆசான் :—இன்பம் தோன்றுகின்றது........அதிருக்கட்டும். நாம் ஏன் அதைப்பற்றிப் பேசவேண்டும்?

அடிகள் :—பின் யார்தான் பேசுவது?

ஆசான் :—இல்லை........ஒரு ஐயம்.

அடிகள் :—ஒன்றென்ன! ஓராயிரம் வேண்டுமானாலும் கேளும்.... உரைக்கக் காத்திருக்கின்றேன்........பகுத்தறிவைத் துணையாகக் கொண்டவர் பதில் கூறவா தயங்குவர்? கேளும் கூறுகின்றேன்.

ஆசான் :—அடிகள் வருத்தப்படுவதில்லை என்றால்........

அடிகள் :—பொருத்தமானதைக் கேளும்........வருத்தம் என்ன விருக்கிறது?

ஆசான் : தாங்கள் திருநீறணியாதிருப்பதேன்?

அடிகள் :—தாங்கள் திரு நீறணிந்திருப்பதேன்?

ஆசான் :—ஏதோ....! முன்னோர் கைக்கொண்ட முறை........

அடிகள் :—பின்பற்றுகின்றீர்........நானும் அப்படித்தான்.

ஆசான் :—அப்படிச் சொன்னால் எப்படி?

அடிகள் :—பின் எப்படிச் சொல்ல வேண்டும்?

ஆசான் :—சரியான விடை வேண்டும்........

அடிகள் :—சொன்னதைப் புரியாமல் கேட்கின்றீர்.

ஆசான் —இல்லை.......பௌத்தர் உம்மைப் புத்தநெறியினராகப் பறைசாற்றுகின்றனர். ஆருகதர் உம்மை அந்நெறியினர் ஆக்கிக் கூறுகின்றனர். திருமால்நெறியினரோ, "எங்கள் பெருமான்" என்றனராம். நீரோ........சிவநெறியினர். ஆயினும் திருநீறணிவதில்லை. அதனால்தான்........

அடிகள் :—ஆமாம். நல்லன போதிக்க வேண்டிய மதம்; நச்சுக் கொள்கைகளைப் போதிக்கத் தொடங்கின. நானே நச்சுக்கொள் கைகளை நீக்கி நல்லன நாடுகின்றேன். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் சமுதாயத்தில் பிறந்த நான் "எம்மதமும் சம்மதம்" என்றிருக்கின்றேன். எந்த நெறியாயினும் அறிவிற்கு எற்றன கூறின்........ஏற்கின்றேன்..............போற்றுகின்றேன்........புகழ்கின்றேன். மாற்றார் தூற்றுவரே என்பதற்காக ஏற்றன போற்றாதிருத்தல் இழிவாகும் என்ற காரணத்தால்.......

ஆசான் :—அதிருக்கட்டும் திருநீறணியாதிருத்தல்.......

அடிகள் :—திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் திருநீறணிந் தார்....நாமும் திருநீறணிகின்றோம்........விரிசடைக் கடவுள் திரிபுரம் எரித்தார் பகைவர் வெந்தழிந்த சாம்பலை வெற்றிக்குறிகுறியாக நெற்றியிலே தீட்டினர். நாமும் அணிகின்றோம். ஏன்? யாரை வென்றோம் எங்கே வெற்றிக்கொடி நாட்டினோம்? வெற்றிச் சின்னத்தை வேதாந்தச் சின்னமாக்கல்தான் விவேகமோ?

காட்சி 8

(திருப்புக் காட்சி)

[வில்லவன் கோதையொடு அழும்பில்வேள் உரையாடிக் கொண்டிருக்கின்றார்]

வில்ல :—"விவேகமாகுமா?"........ பகுத்தறிவுக்குத் தடை........ அமைச்சர் அதற்குப் பாதுகாப்பளிக்கின்றார்" என்று நாடு கேட்கும் உம்மைப் பார்த்து "அறிவு நெறி காட்டி அறியாமையை அகற்ற வேண்டிய அமைச்சர் அறியாமைக்கு ஆசனம் இட்டு அழைக்கின்றரே நியாயமா?" என்று மக்கள் மன்றம் கேட்கும்....

அழும் :—அறிவொளி நாட்டில் பரவுவதை வேண்டாமென்பவன் அழும்பில்வேள் அல்ல. ஆனால் இளங்கோ அடிகள் அப்பணியைச் செய்ய வேண்டாமென்பதுதான் என் எண்ணம். அடிகளின் அறிவொளி அருந்தமிழ் நாட்டார் கண்களைத் திறக்கும் ஆனல்........

வில்ல :—ஆனல்.......

அழும் :—வஞ்சகம் தலைவிரித்து.... அடிகளிடம்........

வில்ல :—வாலாட்டத் தொடங்கினல்.......... வாளிருக்கிறது கையில்; வல்லமையிருக்கிறது உடலில்; ஆட்சி இருக்கிறது அண்ணன் கையில்........ நாமே அஞ்சினல்........

அழும் :—அதைப்பற்றித்தான் சிந்தித்தேன். பகுத்தறிவுக் கதிர் வீசத் தொடங்குகின்றதே பகை யிருள் சூழ்ந்தால்........

வில்ல :—கதிரவனைக்காரிருள் என்ன செய்ய முடியும்? கற்றறிந் தாரைக் கயவர் என் செய்வர்?

அழும் :—கார்மேகமும் கதிரவனை மறைத்து விடுகின்றதே

வில்ல :—இருக்கலாம்.... கண நேரம்....

காட்சி 9

(திருப்புக் காட்சி)

[செங்குட்டுவனும் இளங்கோவேண்மாளும்: செங்குட்டுவன் நிலவை உற்றுநோக்கிக் கொண்டிருக்கின்றான்]

வேண்மாள்; நேரம் போவதே தெரியாமல் நிலாவில் என்ன காண்கின்றீர்கள்........

செங்கு ;—சிரித்த முகம்.... செந்தூரப் பொட்டு.... தேமதுரச் செவ்வாய்.... பறித்த முல்லை.... உள்ளம் பறிக்கும் பார்வை.

வேண்மாள் :—ஓகோ! இத்தனையும் இருக்கின்றதோ....! வெற்றிச் செல்விதான் தங்களை விடமாட்டேன் என்று கூறிவிட்டாளே....!

இனி எண்ணஏது நேரம்....? வெற்றிச் செல்வியை முத்தமிடும் உங்களுக்கு இந்த வேண்மாளை நினைக்க நேரமேது....?

செங்கு :—இல்லை.... இல்லை.... நீதான் என் வெற்றிச் செல்வி ! இந்தப் புன்னகை பூத்த முகந்தான் அந்த முன் மதிக் கண்ணுடியில் முழுமதிக் காட்சி அளிக்கிறது.

வேண்மாள் : ஆமாம்....! என்னைக் கண்டதும்....

செங்கு :—இல்லை.... உன்னைக் காணுதபோதும்தான் மாற்ருரொடு போரேற்றபோது, வில்லினைக் கைபிலே எடுத்தால்.... உனது நல்ல புருவங்கள் வெற்றி ! வெற்றி !! எனக் கூறுகின்றன. வேலினைக் கரத்திலே விரும்பி ஏற்கும்போது உன் நீள் விழிகள் 'வாழ்க எங்கோ' என வாழ்த்துகின்றன. எங்கே சென்ருலும் என் வெற்றிச் செல்வி நீயே தான். எங்கே சொல் யார் என் வெற்றிச்செல்வி?

காட்சி 9

[திருப்புக் காட்சி]

[ஒரு பக்கம் வீரனும் சூரனும் உரையாடுகின்றனர்.]

வீரன் :—நீயேதான் சொல்லேன்.... காதல் வீரம் கன்னித்தமிழ் நாட்டான் கண்களப்பா கண்கள்.

சூரன் :—ஆமாம்! ஆனுல் நமது அரசரைப் பொறுத்த வரையில் முன்னது மட்டு பின்னது கட்டு....

வீரன் :—ஏண்டா....! என்ன சொன்னுய்....? வீரமா மட்டு.... கொங்கர் செங்களத்தே கொடுவரிப் புலிக்கொடியை எங்கென்று தெரியாதழித்துச் சங்க நாதம் செய்ததை ; கங்கைக் கரையிலே கயவர் நூற்றுவரைச் சிங்கமென எதிர்த்ததை ; வங்கம் கடந்து பகை வென்று வாகை சூடியதை அறியாமல் பேசிவிட்டாய், களத்திலே சென்று கண்டு வந்தவன் நான் இருக்கும் போது.........

சூரன் :—என்னடா இது நீயே வீரமுழக்கம் செய்யத் தொடங்கி விட்டே.... புரியாமல் உளராதே. வீரம் வெற்றிக்கு மேல் பொங்கி டுதே.... காதல் வீரம்........ காதல் மட்டு........ வீரம் கட்டு என்று சொன்ன.... நீ என்னமோ....!

வீரன் :—ஓ.... அப்படியா? நான்தான் தவருகப் புரிந்துகொண் டேன் மன்னித்து விடு....

சூரன் :—அதிருக்கட்டும்.... வீரப்பா வாப்பா போகலாம்....

வீரன் :—எங்கே டப்பா சூரப்பா.... என்னையும் அழைக்கிறே.

சூரன் :—என்னடா இது.... நமது அரசர் மலைவளம் கண்டு களித்த மக்களை ஒன்று கூட்டி பேசப்போருரு.... நாளை நாட்டுக்குப் புறப்படவேண்டாமா?

வீரன் :—அப்படியா? வா போகலாம்.

காட்சி 10

[இடம் :—பேரியாற்றின் மணற்பரப்பின் மீது அலங்கரிக்கப்பட்ட புதிய அரங்கம். அனைவரும் வீற்றிருக்கின்றனர்]

செங்கு :—மலைவளங் கண்டோம்! மகிழ்ந்தோம். நாளை நாம் புறப்படும் நாள்.

வா-காவலன் : வாழ்க எங்கோவே! வாழ்க!! மலை வாழ்நர் குழு மன்னரைக் காண வந்திருக்கிறது. ஆணை தந்தால் காண அழைக் கலாம்.

செங்கு : அழைத்து வருக........ (அமைச்சரைப் பார்த்து) அமைச்சரே திறைப்பொருள்களை முறைப்படி பெற்று மலை வாழ் நரைக் குறையின்றி அனுப்பிவையும்....

அழும்பில் : அப்படியே....

(மலைவாழ்நர் அவைக்கண் புகுதல்)

வேடுவ : மன்னர் மன்ன! ஏழ்பிறப்படியேம் வாழ்க நின் கொற்றம்! வளர்க நும் ஆட்சி! 'யானை வெண் கோடு மகிலின் குப்பை மான் மயிர் கவரி 'மதுவின் குடங்கள் கானக் கோழி தேன் மொழிக் கிள்ளை: தெங்கின் பழம் தேமாங்கனி, இப்படி எத் தனையோ பொருள்கள். இவற்றையெல்லாம் மன்னர் பெருமான் மகிழ்ந்தேற்க வேண்டும் குன்றத்து வாழும் குறவர் காணிக்கை.

செங்கு : நன்று! நன்று!! மகிழ்ச்சி வளங் கண்டதினும் குற வர் பெருமக்கள் நலங்கண்டு மகிழ்கின்றோம். வேட்டுவப் பெரு மக்களே நாட்டில் ஏதேனும் குறைகளுளவாயின் கூறுமின்.

வேடுவர் : தங்கள் ஆட்சியில் எங்களுக்கென்ன குறை........ ஆனால்....

செங்கு : ஆனால் என்ன.... கூறுமின்....

வேடுவர் : வியத்தகு நிகழ்ச்சி. இதுவரை யாங்கள் கண்ணால் காணாதது; காதால் கேளாதது; நாடெங்கும் நடவாதது.... நின்னாட் டின்கண்.

செங்கு : நடந்ததைக் கூறுங்கள்.

வேடுவர் : கான வேங்கையின் கீழ் காரிகை ஒருத்தி; ஒரு முலை இழந்த திருமா பத்தினி ஆருத்துயரமொடு மலை மீதேறி நின்றாள்....

மகிழ்வூட்டி : என்ன! ஆருத்துயர்.... ஒரு முலை இழந்தாள்.... மலைமீதேறினாள்....

> மகிழ்வூட்டி : அரசன் முதலியோருக்கு இடையிடையே மகிழ்ச்சியை யூட்டிக் கொண்டிருக்கும் விகடகவி போன்றவர்.

வேடுவர் : மண்ணவர் போற்ற விண்ணவர் வந்தனர். காதற் கணவனைக் காரிகைக்குக் காட்டினர். காதற் கணவனோடு காரிகை யையும் கடிது அழைத்தேகினர். அக்காரிகை யாரோ? எங் நாட் டாளோ? யார் மகள் கொல்லோ! யாங்கள் அறியோம். வேந்தர் இதனை அறிந்தருள வேண்டும்.

அடிகள் : வியத்தற்குரியதுதான்.

செங்கு : ஆம்! நினைக்கும் போதே நெஞ்சம் திடுக்கிடு கின்றது. நங்கை எந் நாட்டாள்? யார் மகள்?

மகிழ்வூட்டி : எனக்குத் தெரியும்.

செங்கு : அப்படியா? அந் நங்கை நல்லாள் பெயர்........

மகிழ்வூட்டி :—பெயரைப்பற்றி எனக்கென்ன தெரியும்.........
அவள் ஒரு பெண்

(எல்லோரும் சிரிக்கின்றனர்)

வில்ல :—இதுதான் உமக்குத் தெரியுமோ ?

மகிழ் :—இதுவும் தெரியும் ; இன்னமும் தெரியும்....

அடிகள் : என்ருல் கூறுமே.........

மகிழ் :—அப்படி வாருங்கள் வழிக்கு.... சிரிக்காதீர்கள் "பெண்கள் சிரித்தால் போச்சு.... பேய்கள் தலைவிரித்தால் போச்சு" என்பார்களே (எல்லோரும் சிரித்தல் உற்றுப் பார்த்து) ஓகோ........ நீங்கள் எல்லோரும் ஆண்களா ?

வில்ல :—மகிழ்வூட்டி ! மன்னர் காத்திருக்கின்ருர்........ விரைவாகச் சொல்.

மகிழ் :—கணவனை இழந்தவள் அந்தக் கன்னி........கணவனே பிறராலே கொல்லப்பட்டான். கணவனை இழந்தவளுக்குக் காட்டுவதற்கு என்னவிருக்கின்றது. சினம் மிகுந்தது ; சிரிப்புப் பைத்தியமும் முற்றியது. கொங்கையைத் திருகி கோபுரத்திலே எறிந்தாள்.... சாவு அவளை வா என்று சாடை காட்டவே இல்லை. என்ன செய்வாள் ; கற்புக் கடம் பூண்டவளன்ருே ! கன்னித் தமிழ்ப் பெண்டிர். மலைமீதேறி தன் மணுளன் இருப்பிடம் தேடினுள் ; மலையுச்சியில் ஏறியவள் மண்மீது உருண்டு மடிந்தாள்........

வில்ல :—அப்படியா ?

மகிழ் ;—இந்த மலைக் குறவர்கள்........இதனைப் புரிந்துகொள்ளாமல்........செத்த கணவன் திரும்பி வந்தானும் ; தேவர்கள் புடைசூழ்ந்தார்களாம். பொய்........சரியான பொய்........கற்பனையில் கைதேர்ந்தவர்கள் கதைகட்டி விட்டார்கள்........மலைமீதேறிய மங்கையைக் காணுமென்றதுமே கதைகட்டி விட்டார்கள். மலைவாழ் குறவர்தானே........கற்பனையை மதிப்பர் என்ற காரணத்தால்.

வில்ல :—ஓகோ ! அப்படியா........?

அடிகள் :—மகிழ்வூட்டியின் கற்பனை கரைகடந்து விட்டது.

செங்கு :—மகிழ்ச்சியான நிகழ்ச்சியல்லவே இது. வேட்டுவமாந்தர் வியந்தேத்தும் அந்தக் கோதை ; நம் நாடு புகுந்து இறந்த அந்நங்கை ; எந்நாட்டாள் ? யார் மகள் ? இங்கு வரக் காரணம் என்ன ? யாரும் அறியீரோ ?

சாத்தனுர் :—வேந்தர் வேந்தே வாழ்க நின் கொற்றம். யானறிவேன் அதனை........

நங்கை நல்லாள் கண்ணகி ; நாயகன் கோவலன் ; தீவினைச் செயலால் சிலம்பை விற்க மதுரை புகுந்தனர். பொற்கொல்லனின் பொய்மொழி பாண்டியன் நெஞ்சத்தை மாற்றியது. கோவலன் கள்வன் எனக் கொல்லப்பட்டான். அறிந்தாள் கண்ணகி ; அலறினுள், துடித்தாள்........பொங்கி எழுந்தாள்.

(தொடரும்)

கள்ளநரி

"சித்தன்"

நடுப்பகல். வெயில் 'சுள்' ளென்று அடித்துக்கொண்டிருந்தது. மணி பன்னிரெண்டு இருக்கும். மதுரை ஜங்ஷனில் மானாமதுரை செல்லும்வண்டியை எதிர்பார்த்து, பிளாட்பாரத்தில் போடப்பட்டிருந்த சிமெண்ட் பெஞ்சியில் உட்கார்ந்திருந்தேன். எனது பக்கத்தில் சாமான்கள் வைத்திருந்த சிறு பெட்டியை வைத்துவிட்டு, அன்றைய தினசரி ஒன்றைக் கையில் விரித்துப் பிடித்த வண்ணம் படித்துக் கொண்டிருந்தேன்.

அடிக்கடி தரை அதிரும்படி 'கட கட' வென்று வந்து கொண்டும் போய்க்கொண்டுமிருந்த ரயில் வண்டிகளின் சப்தம் என்னை அமைதியாகப் படிக்க விடவில்லை. இந்த சப்தத்துடன் போட்டி யிடுவதுபோல, தினசரிப் பத்திரிகையை விரித்துப்படித்துக் கொண்டிருக்கும் என்னிடமே வந்து "இன்றைக்கு வந்த தினசரி, நாலு பக்கங்கள் ஓரணாசார்." என்று கேட்கும் பத்திரிகை விற்கும் பையன்களின் கூச்சல், "வெத்திலை பாக் பீடி சிகரெட்" என்ற நடமாடும் பெட்டிக் கடைகளின் விதவிதமான குரல்கள், "காபி காபி—காபி காபி" என்று காப்பி ஆறி இருந்தாலும் வார்த்தைகள் சுடுவதுபோல, சொல்லும் காப்பி விற்பவர்களின் அவசர சப்தங்கள் ஆகிய இவைகளின் மத்தியில் நாம் எப்படி அமைதிகாண முடியும்? அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அவர்கள் என்ன செய்வார்கள்? நின்று கொண்டிருக்கும் ரயில் போய் விட்டால், பிளாட்பாரத்தில் உட்கார்ந்திருக்கும் பிரயாணிகளிடத்தில் தானே அவர்களின் சாமர்த்தியத்தைக் காட்டவேண்டியதிருக்கிறது!

"ஐயா!" என்ற குரல் கேட்டு திரும்பிப் பார்த்தேன்.

எனது பக்கத்தில் ஒரு ஆள் வந்து உட்கார்ந்தார். அவருக்கு வயது நாற்பது இருக்கும். குள்ளமான ஆசாமி; கட்டுவிடாத சரீரம்; சாம்பல் நிற கோட் அணிந்திருந்தார்; அதே நிறத்தில் சூட்டும் மாட்டியிருந்தார். தலை நரை விழுந்திருந்தாலும், நன்றாக 'கிராப்' வாரி விடப்பட்டிருந்தது, கையில் ஒரு காகிதம் வைத்திருந்தார்.

காகிதத்தின் மூலம் கதை அளந்து கேட்கும் கௌரவப் பிச்சையாக இருக்குமென்று நினைத்து, "என்ன?" என்று எரிச்சலோடு கேட்டேன். அவர் தன் ஐந்தடி உடம்பை ஐந்து அங்குலமாக்கி, கூனிக்குறுகி "கொஞ்சம் ஒரு கடிதம் எழுதிக் கொடுக்கவேணும்" என்று கேட்டுக்கொண்டார்.

அடப் பாவி மனுசா! இதற்குத் தானா இந்த நடிப்பு என்று எண்ணியவாறு பத்திரிகையை மடித்து வைத்துக்கொண்டு, காகிதத்தை வாங்கி "ம். சொல்லுங்கள்" என்று எழுதத் தயாரானேன். அவர் சொல்ல ஆரம்பித்தார்.

"அன்புள்ள மனைவி தனம்மாளுக்கு நான் இங்கு வந்து ஒருவார



மாகிவிட்டது. பல இடங்களில் சுற்றியும் வேலை கிடைக்கவில்லை. நமது கஷ்டகாலம் 'கீட்' துரையும் தமது பங்களாவைக் காலி செய்துகொண்டு எங்கேயோ போய்விட்டார். இந்த இரண்டு நாட்களாகச் சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் டிக்கட்டுக்கு வைத்திருந்த பணத்தைக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டேன்.

அங்கு நீயும் சிறு குழந்தைகளான பொன்னம்மாளும், முத்தம்மாளும் சாப்பாட்டிற்கு என்ன செய்தீர்களோ வென்று கவலையா யிருக்கிறேன். நான் வரும்பொழுதே வீட்டுக்காரர் வாடகைக்கு அவசரப் படுத்தினார். நான் வந்ததும் தருவதாகச் சொல்லிவை. பக்கத்து வீட்டுக்கார அம்மாளுக்கும் நாம் தர வேண்டிய கடனுக்கும் அப்படியே சொல்லிவை.

நாளை இவ்வூர் சவேரியார் பள்ளிக்கு, ஜான் சுவாமியார் வருவதாகத் தெரிகிறது. அவரைப் பார்த்து, நமது கஷ்டத்தைச் சொல்லி ஏதாவது பணம் வாங்கிக்கொண்டு நாளை மறுதினம் வந்து சேருகிறேன். காலையில் சாப்பிட்டதுதான். கையில் காசில்லை. இப்பொழுதும், இரவும் பட்டினியாக இருக்கப் போகிறேன். என்ன செய்யலாம். நம் மீது இரக்கப்பட இங்கு யாருமில்லை. எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிறார். எதற்கும் மனம் தளரவேண்டாம். உனது அன்பான கணவன்,''

இவ்வளவும் அவர் சொல்லச் சொல்ல எழுதிவிட்டு,'கையெழுத்துப் போடுங்க'ளென்று கடிதத்தை நீட்டினேன். "இல்லே இல்லே. 'அந்தோனி' என்று நீங்களே எழுதிவிடுங்க''ளென்று சொன்னர். அப்படியே எழுதி விட்டு, கடிதத்தை மடித்து, அவர் சொன்ன விலாசத்தையும் மேலே எழுதிக்கொடுத்தேன். அவர் முகம் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. எனக்கு வண்டி வர இன்னும் கால்மணி நேரமிருந்ததால் அவரிடம் பேச்சுக் கொடுத்தேன்.

"ஊரில் என்ன வேலே பார்த்துக் கொண்டிருந்தீர்கள்?''

"நான் கொடைக்கானலில் ஒரு துரை வீட்டில் பட்லராக வேலே பார்த்து வந்தேன். அந்தத் துரை இறந்து விட்டார். எனக்கு வேறு பங்களாக்களில் வேலே கிடைக்காமல் போகவே எனது சொந்த ஊரான திண்டுக்கல்லுக்கு வந்து ஒரு மாதமாக அங்குதான் குடும்பத்துடன் இருந்து வருகிறேன். சொந்தக்காரர்கள் உதவி கிடையாது. பணமிருந்தால் தானே பந்துக்கள். நான் இங்கு வந்து ஒரு வாரமாகி விட்டது. எங்கு சுற்றியும் இந்த ஊரில் எனக்கு வேலே கிடைக்க வில்லே. பாவம், இரண்டு சிறு குழந்தைகளே வைத்துக்கொண்டு சாப்பாட்டிற்கும் இல்லாமல் எனது மனேவி எப்படித் தவிக்கிருளோ? அவள் ஆறுதலாயிருப்பதற்காக, வண்டியில் யாராவது தெரிந்தவர்கள் சென்ருல்' இந்தக் கடிதத்தைக் கொடுத்தனுப்பலா மென்றிருக்கிறேன். ரொம்பவும் வந்தனம். நான் வருகிறேன்.'' என்று சொல்லிக்

இளங்காடு
தஞ்சை மாவட்டம்
20—4—54.

'இன்பத் தமிழகத்தின் இணேயற்ற எழிலோடு பொன்னியைக் கண்டேன். அவள் புது மணம் நுகர்ந்தேன். வள்ளுவன் குறளேயும் வண்டமிழ் இலக்கியத்தையும், செந்தமிழ்க் காப்பியமாம் தேன் சுவை சிலப்பதிகாரத்தையும் வாரி யிறைத்து வளம்பல பெருக்கும் 'பொன்னி' வாழ்கஎன்று வாழ்த்துகிறேன்'

புலவர் சா. மருதவாணன்

கொண்டே எழுந்தார். அவரது கதையைக்கேட்ட எனது உள்ளம் இரங்கியது. பையிலிருந்து எட்டணுவை எடுத்துக் கொடுத்து. சாப்பாட்டிற்கு வைத்துக்கொள்ளும்படி சொன்னேன். அவரும் விரும்பாதவரைப்போல வாங்கிக் கொண்டு நடந்தார்.

நாட்டில் எவ்வளவோ பேர் உழைக்கத் தயாராயிருந்தும் வேலே கிடைக்காத காரணத்தால், வாழ வகையற்று வாடி வருந்துவதைச் சிந்தித்தவாறு, கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு அருகிலிருந்த டீ ஸ்டாலுக்கு சென்றேன்.

சற்று முன்பு என்னேச் சந்தித்த அந்தக் குள்ளமான மனிதர் அந்தோனி அவ்விடம் டீ அருந்திக் கொண்டிருந்தார். என்னேப் பார்த்ததும் நன்றி கலந்த பார்வையோடு புன்முறுவல் செய்தார். நானும் பதிலுக்கு

விற்பனையாளர் தேவை:

செங்கல்பட்டு
பவானி
போடி நாயக்கனூர்
பல்லடம்
கொடைக்கானல்
குன்னூர்
கள்ளிக்கோட்டை
பாலக்காடு
தலைச்சேரி
பூந்தமல்லி
திருவள்ளூர்
அரக்கோணம்
காட்பாடி
ஜோலார்பேட்டை
திருப்பதி

முன்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

பொன்னி லிமிடெட்
111, பவழக்காரத் தெரு,
சென்னை-1.

முகத்தை மலர வைத்துக்கொண்டேன்.

டீ அருந்திவிட்டு அந்தோனி அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டார். அங்கு கூடியிருந்தவர்கள் ஸ்டால் வேலைக்காரர் இருவர், நாலுஐந்து போர்ட்டர்கள், இரண்டொரு பிரயாணிகள் ஆகியோர்தான். நாட்டின் நிலையைப் பற்றி ஆளுக்கு ஒருவிதமாகப் பேசினர்.

டீ ஸ்டால்காரர் சொன்னார் "உழைத்தும் வாழ வழியின்றி வருந்தும் மக்களிடையே ஏமாற்றிப் பிழைப்பவர்களும் உலவத்தான் செய்கிறார்கள். சற்று முன்பு இந்த இடத்தில் டீ குடித்து விட்டு போனானே ஒரு குள்ளமான ஆசாமி, அவன் ஒரு ஏமாற்றுக்காரன்."

"யாரது? சூட்டும் கோட்டும் போட்டிருந்தாரே அவரா?" என்றேன் விரைவாக.

"ஆமாம். அவன்தான். அவன் பலே ஆசாமி! தினசரி பலரிடம் பலவிதமாக கதை சொல்லி, சில சமயங்களில் எழுதத் தெரியாதவன் போல நடித்து அவர்களையே எழுதவும் செய்து, பணம் வாங்கி விடுகிறான். இந்தப் பத்து நாட்களாகவே அவனிடம் எவ்வளவோ பேர் ஏமாந்து போனார்கள் என்றார் ஸ்டால்காரர்.

அப்பொழுது அடுத்த பிளாட்பாரத்திலிருந்து சென்னை செல்லும் எக்ஸ்பிரஸ் வண்டி புறப்பட்டது. வண்டியில் அந்த ஆசாமி உட்கார்ந்திருந்த பெட்டி நான் நின்ற இடத்தைக் கடந்து சென்றது. நான் ஒன்றும் செய்ய இயலாதவனாக அந்த ஆசாமியையே கண்கொட்டாது பார்த்துக்கொண்டு நின்றேன்.

சாமியே, சரணம்!

"வழிப்போக்கன்"

அன்னை பாத்திமா இராக்கினி பவனி வந்து, வாயார ரசிகர்களின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டுபோய் விட்டார்கள். கடல் கடந்து வந்த திருக்கன்னிக்குக் கடல்மடை திறந்தாற் போல் காணிக்கைகளைக் கட்டாயக் கடன் பத்திரக்காரர்கள் வசூலித்துக் கொடுத்து விட்டார்கள். ஊர்வலங்களும் வரவேற்புகளும் பெருக்கெடுத்து ஓடின.

இதைப் பார்த்தார் தடியூர்த் தம்பிரான். அவருக்குக் கண்களில் நீர் ஊற்றெடுத்தது. தண்டியைத் தட்டினார். சத்தம் எழும்பவில்லை. காலிக் கமண்டலம் அய்யனை நோக்கிக் கண் சிமிட்டியது. "என்ன செய்குவோம்; ஏடெடுத்தோம், படிக்கவறியோம். இருப்பிடம் நன்கறிந்தும் பக்தர்கள் குருபீடத்தை நெருங்க அஞ்சுகிறார்கள். இனி நாமே சென்று நமது 'மாஜி கஜானா'க்களைக் கண்டு வந்தால்தான் உண்டு" என்று தம்பிரான் ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தார்!

செல்லாக் காசுகள், கிழிந்த செருப்புவார்கள், தேய்ந்து போன டூத்பிரஷ்கள், இவைகளைச் சுமந்து உண்டியல் மாடுகளும் ஓய்ந்துவிட்டன. அறுநூறு ஏக்கர் நிலத்திற்கு வேலி போடக் கூடப் பணம் புரட்டமுடியவில்லை. எங்கேயாவது கடன் வாங்கி ஒரு இருநூறு கூர்க்கச் சிப்பாய்களை நிலத்திற்குக் காவல் வைத்தால்தான் உண்டு. இல்லையானால் கஞ்சித்தொட்டி யுகத்தில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் பசி ஏப்பத்தால் உப்பி ஊதி வளரும் ஜன சமுத்திரம் அய்யனுக்குச் சிறிதும் சிரமம் கொடுக்காமல் அறுவடை வேலைகளைக் கவனிக்க இறங்கினாலும் இறங்கிவிடுவார்கள்.

பசி—பசி! — இதுதானா தினசரிப் பிரார்த்தனையாக இருக்க வேண்டும்? "பசி நாதா! எங்களைப் பார் நாதா!" என்று சனியன்கள் தொலைய வேண்டும் என்று தொழுகிறார்கள்; முட்டாள் ஜனங்கள்! சனி தொலைய, அதன் ஈஸ்வரனைத்தானா தொழ வேண்டும்? குபேரனைத் தொழுது தொலைக்கக் கூடாதா? அல்லது குண்டோதரனையாவது தொழலாம். கைநிறையப் பணமோ வாய்நிறையச் சோறோ கிடைக்குமென்ற நம்பிக்கையாவது ஏற்படும்! அதை விட்டுவிட்டு எதை எதையோ தொழுகிறார்கள். எத்தனையோ சரண வரிசைகள் போடுகிறார்கள். பாமரர்கள் பக்தி மயக்கத்தில் பா(ழ்) மரங்களாகி விட்டனர் போலும்!

தம்பிரான் மனம் ஒரு நிலையில்லாமல் பிரேக் இல்லாத வண்டியைப்போல் ஓடிக் கொண்டிருந்தது. அறுநூறு வேலி நிலங்களையும் ஆயிரக்கணக்கான வெள்ளிப் பாத்திரங்களையும் பார்த்துப் பார்த்துப் பெருமூச்செறிந்தார். முத்துச் சிவிகை

அதுவும் கையை விட்டுப் போய் விடுமா? பொற்பாதக் குறடு களுக்குப் பதில் எருமைத் தோல் செருப்புகளையா இனி அணிய வேண்டும்? புழுவாய்த் துடித்த அவர் மனம் மடஜனங்களின் போக்கை மடத்தை நோக்கித் திருப்பிவிடத் திட்டமிட்டது. ஆயி னும் தயக்கம்..........

உதவி செய்வார் ஒருவரு மில்லை. சுற்று முற்றும் பார்த் தார். எந்தச் சாமியும் முன் போல அவ்வளவு சுதாரிப்பாகத் தென்படவில்லை. காமாட்சிக்குக் காலரா! ஊர் முழுதும் காலராத் தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொண்ட பிறகும் காமாட்சி தன் 'தேவநிலை'யை உச்சரித்து அடம் செய்தாளாம். பாவம், காலரா வந்துபோன காபராவில் காமாட் சியின் கஜானாவை யாரோ 'அபேஸ்' செய்து விட்டான். அவ் வளவுதான்! "ஆ....ஊ....பார்!" என்று படையெடுக்கக் கிளம்பி விட்டாள். சூலாயுதம் வெறும் இரும்புதானே என்று பார்க்கா மல் அதையும் ஒரு 'சோறு தேடி' தூக்கிக் கொண்டு போய் விட் டான். சூலாயுதம் இல்லாமல் எப்படி ஒருபெண் இந்த உணவா சுரர்களுடன் போராட முடியும்? மூக்கைப் பிடித்த வண்ணம் மூல வனை நோக்கி மோனத் தவம் செய்ய ஆலயத்தின் ஒரு மூலை யில் அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டாள்.

மீனாட்சிக்குக் குளிர்காய்ச்சல்! கார்த்திகை மாதத்தில் என்று மில்லாத புதுமையாக ஓயாது பெய்த பனிமழை உடம்புக்கு ஒத்து வரவில்லை. வைத்தீஸ்வர னுக்கு வாழ்க்கைப் பட்டவள் என்ற மமதையில் வேறு நல்ல உணர்ச்சியுள்ள டாக்டரிடம் சென்று உடம்பைக் காட்டிக் கொள்ளவும் பழைய 'திக்விஜய வெட்கம்' வந்து விட்டது. இப் போது வழக்கப்படி சயன அறைக்கும் போவதில்லை. சண் டையும் போடுவதில்லை. இருந்த இடமே தெரிய வில்லை. எங்கோ இருக்கிறாள்!

கைலையங்கிரியில் 'அகண்ட' நித்திரையில் ஆழ்ந்திருந்த பரம சிவன் திடீரென்று மறைந்து விட் டார். பூதகணங்களும் போக்கிரி முனிவர்களும் தேடுடா தேடென்று தேடிப் பார்த்தார்கள் ஊஹூம்! காணவே இல்லை. ஏனைய கணங்களும் வேறு நல்ல ஒழுக்கமுள்ள முனிவர்களும் சமீ பத்தில் ஏற்பட்ட பூகம்பத்தால் பூமியோடு பூமியாகப் புதைந்து போய் விட்டார்கள். இனிமேல் என்றைக்காவது ஒருநாள் பூகோள சாஸ்திரக்காரர்கள் தோண்டி எடுத்தால்தான் அந்த ஜடங்களை மியூஸியத்திலாவது காணமுடியும்.

உலகம் பூராவும் இப்போது குளிர் அதிகமாகிக்கொண்டு வரு கிறது. நாமோ கவலைப்படாமல் எப்போதும் போல அனுவசிய மாக அனுச்சின், வபெக்ஸ் முத லிய தற்காலிகத் தடுப்பு மருந்து களை உபயோகித்துக்கொண்டு குளிர் ஜுரங்களுக்குத் தப்பித் துக் கொண்டு வருகிறோம். இது தவிர. டாக்டர்களும் தயாராக இருக்கிறார்கள். என்னமோ, உபத்திரவத்தைப் போக்காவிட் டாலும், உயிரைப் போக்குவதற் காவது தைரியமாய் இருக்கிறார் கள். ஆனால் ஆதிசேஷனுக்கு அந்த நம்பிக்கையும் ஏற்பட இட மில்லை. அவன் ஒரு அனாதை!

அனுதைக்கு அனுதை துணேயா வதைப் போல அவன் தோன்ருத் துணேவனும் நிரந்தரத் தலேவனு மான ஆபத்பாந்தவனும் ஒரு அனுதை! இருவருக்கும் 'வல் லிய சலபாவம்' தீண்டிவிட்டது. ஓயாது இருமிக்கொண்டிருக் கிருர்கள்.

அனுதைகள் தான் இப்படி அவஸ்தைப் படுகின்றனவென் ருல் ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீமந் — நாராயண மூர்த்தியின் தாத்தாவும், அதே சமயம் தாமரைத் தண்டிலிருந்து தோன்றியதால் அவருடைய மக னுமான பெரிய ஸ்ரீ பிரமதேவருக் குக் கடினமான மூளேக்கோளாறு! சிருஷ்டிக்கு வேண்டிய முக்கியப் பொருளாகிய களிமண் இப் போது கிடைப்பது அரிதாகி விட் டதாம்! புராணிகர்களுக்கு டெண்டர் நோட்டீஸ் கொடுத்துக் கொடுத்து அலுத்துப்போய் விட் டார். சீக்கிரம் சேகரித்து அனுப் புவதாக ஆயிரம் முறை வாக் களித்தும் முடியவில்லே. பஜனே மடங்கள்தான் என்ன செய்யும்? பரிதாபம்! மார்கழி மாதம் வர வேண்டிய குளிர் ஐப்பசி மாதமே அவர்களேப் போட்டு வாட்டிவிட் டது. தெருவில் ஓசிப்பிரசாதம் வாங்குவதற்குக் கூட இப்போது 'வாடகை ஆள்' கிடைக்காமல் திண்டாடுகிருர்கள். எங்கும் களிமண் மண்டைகள் ஸ்டாக்கி லிருந்து குறைந்து விட்டன. பஜ கோவிந்தம் பாடியும் பயனில்லே. வருண ஜபம், மகாயக்ஞம் மந்திர உச்சாடனங்கள் பண்ணியும் ஒரு பிரயோஜனமுலேது! எனவே பண்டார சந்நிதிகளும் புராணப் பிரசங்கிகளும் ஏதோ தங்களா லியன்ற அளவு களிமண் சப்ளே செய்துகொண்டு வருகிருர்கள்.

இப்படி எங்கு பார்த்தாலும் சோம்பல் சொரூபங்கள்! பயங் கரக் குறட்டை ரிகார்டுகள்! நாடெங்கும் நாத்தளர்ந்த நடமா டும் கோயில்கள்! நாடி ஒடிந்த விபூதிப் படைகள்! அச்சு முறிந்த அறப்போர்க் குச்சிப் பூச்சிகள்! வீரமுழக்கம் செய்யக் கிளம்பிய விபூதிகளேச் சுற்றி ஜனங்கள் 'பினயில்' தெளித்து அபிஷே கம் செய்கிருர்கள். எந்த ஆல யத்தைச் சேர்ந்த விக்ரகங்களேத் தட்டினுலும் ஓட்டைச் சத்தம்!

இத்தகைய இடுப்பொடிந்த வேளேயில் என்செய்வார் சந்நி தானம்! இருந்தாலும் நெஞ்சம் தளரவில்லே! இன்னும் தேடினுர். அவருக்குத் தெரிந்த ஒரு ஜீவ னேக் கண்டுபிடித்து விட்டார். அவ்வளவுதான்! ஒரு சந்தோஷ ஆரவாரம்! ஆனந்த போதையில் ஆயிரம் புலிகளே இழுத்துவந்து ஐயப்பாமிர்தத்தைக் கறந்து தனது கஜானு நோயைத் தீர்த் துக் கொண்டதாகவே கருதிவிட் டார். ஓடினுர் உபரிமலேக்கு! ஜீவன் முக்தரைக் கண்டார். "ஐயப்பா! ஐயையோ அப்பா– சரணம், சரணம்" என்று சாஷ் டாங்கமாக வில்வெட்டு மெத்தை யில் வீழ்ந்தார்! மெய்யப்பன் மெதுவாகத் திரும்பினுர்.

"தாஸ! எழுந்திரு. எங்கே உன் பளபளப்பு? எங்கே உன் வைரக் குண்டலங்கள்? கமண்டல மேந்திய கையில் கரிச்சட்டியா? காலகாலனுக்குத் தூதனுப்பும் உமது கண்களில் கண்ணீரா? தங்கபஸ்பம் தவழும் உதடுகளில் இத்தனே வெடிப்புகளா? நிதான மாகச் சொல்"

"நீசர்கள் மறந்தார்கள், நீங் களும் மறந்தீர்கள். கஜானுவும்

மறைந்துவிட்டதப்பா. இனி சாமியே சரணம்!''

'' அடியானே-துடியாதே! அறியாமை மடிந்துவிட்டதா? பகுத்தறிவாசூரன் கொழுத்துவிட்டானு? எழுந்திரு. எங்கே, என்னை ஆலிங்கனம் செய்து கொள் ''

'' ஒரு வரம்........''

'' கேள்........''

'' நான் அற்பன். தங்களைத் தழுவ என் மேனி தயங்குகிறது''

'' தயங்காதே! தாராளமாக என்னைத் தழுவு''

''பொன் வேண்டாம். பொருள் வேண்டாம். போக போக்கியங்கள் வேண்டாம். கண்ணையும் கருத்தையும் கவரும் சொர்ண மயமான அழகும் வேண்டாம். சுந்தரிகள் கூட வேண்டாம். சுந்தரா! நான் தங்களைத் தழுவாமல் இருக்கும் வரம் மட்டும் வேண்டும்!''

'' முடியாது. தழுவத்தான் வேண்டும்''

'' சாமி, சந்நிதானம் பிடிவாதம் பிடிக்கிறதே என்று சினங்கொள்ளற்க. அடியேன் ஒருபோதும் தழுவேன்;''

'' என்னடா வாதம்! பிடி, சாபம்!

'' கொடுங்கள் சாமி! எல்லாம் சரணம்!!''

'' இல்லை. முதலில் பல்லவி, அனுபல்லவி. பிறகுதான் என் சரணம்''

'' ஆகட்டும் மெய்யப்பா!''

'' நாளை நான் திக்விஜயம் செய்யப்போகிறேன். நீ வந்த வழியே திரும்பிப்போ! உன் செல்வாக்கைத் திருவோட்டோடு ஒழிக்கப்போகிறேன். என்னைச் சரணடையாமல் நீ பிழைக்கவே முடியாது போ. ஓடு''

மெய்யப்பனுக்குக் கோபம் பலமாக உண்டானதைக் கண்டு தம்பிரான் நடுங்கினுர். ஆனுல் அதைவிடப் பன்மடங்கு பயங்கரமான அந்தக் குஷ்டம் பிடித்த உடலைத் தழுவுதற்கு இவர்மேனி நடு நடுங்கியது. அதனுல்தான் உதவி கூட வேண்டாமென்று உதறித் தள்ளிவிட்டு, உபரிமலை ஆசிரமத்தை விட்டுக் கிளம்பினுர். தலைவாயிலில் கும்பல் கும்பலாக ஜனங்கள் கூடிக் கொண்டு தங்கள் குறைகளை முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் அபய ஓலம் தம்பிரான் செவிகளில் ஆலகால விஷத்தை அள்ளித் தெளித்துக் கொண்டிருந்தது. அப்படியே நின்று விட்டார்.

யார் அந்த ஆண்டவன்?

ஆண்டவன் சர்வ வல்லமை உடையவன், அன்புருவானவன் என்கிருர்கள். தவளையை விழுங்கும் பாம்பும், ஆட்டையும், மானையும் அடித்து, இரத்தத்தை உறிஞ்சும் புலியும் ஆண்டவன் படைப்புத்தான் என்ருல், தவளையைக் கொல்லும்படி, பாம்பைப் படைத்த அந்த ஆண்டவனுக்கு அன்பு எங்கே இருக்கிறது? மானையும் அதைக் கொன்று புசிக்கும் புலியையும் படைத்த ஆண்டவன் எப்படி அன்புருவானவனுக இருக்க முடியும்?

—நெடுஞ்செழியன்

"பசி நாதா! பசி-ஈ-சுவரனே! எங்களைப் பார்! இன்னும் எங்களை வாட்டியது போதும். விடையேறிய சடையனே! எங்கள் வேதனையைப் பார்! அட சனியனே! நீயாவது பாரப்பா! உன்னை வலம் வந்தோம். உன் நாமாவளி பாடினேம். நாத்தளர்ந்தோம். சோர்ந்தோம். உடல் நடுக்கம் ஓய்ந்தபாடில்லை. ஊர் காப்பார் பிடிவாதம் தொலையவில்லை. கஞ்சித்தொட்டிக் காலம்! ராமநாதபுர ஆட்சி! புயல் நிர்வாகம்!! இந்நிலையில் இங்கே அறுநூறு ஏக்கராக்கள்! வேலியற்ற வேள்விகள்! யாகக் குண்டங்கள்! அதற்கு நெய்க்குடங்கள்! மலை மலையாகத் தானிய மூட்டைகள்!! தயாபரனே! தர்மகர்த்தாவே! எங்கள் தரித்திரத்தைப் பாரப்பா!"

கெஞ்சிக் கூத்தாடும் கண்கள்—ஒட்டியவயிறு, ஒளியிழந்த முகம். உபரி வருவாயில் ஒடுங்கும் எண்ணங்கள்—இத்தகைய கோரக் காட்சிகளோடு உபரிமலை அய்யனின் தலைவாயிலில் மனிதச் சந்தை. சந்தை இரைச்சல் இன்னும் குறையவில்லை. ஒரே ஒப்பாரி மயம். 'எவனே தூண்டி விட்டிருக்கிறன். அதனல்தான் இங்கு மக்கள் மடங்களைச் சுற்றுகிருர்கள்' என்று தடியூர் சந்நிதானம்—ஏங்கினர். அவர் ஏக்கமும் மக்கள் முழக்கமும் மெய்யப்பனை ஒன்றுஞ் செய்துவிட முடியவில்லை. ஐயோ, பஜகோவிந்தம்!

முன்னேற்பாட்டின்படி மெய்யப்பனின் ஊர்வலம் அமர்க்களமாக அறிஞர்கள் புடைசூழ அரங்கேறியது. சரணங்கள் எங்கும் முழங்கின. அப்பன் வரிசைக் கிரமமாக அவதாரங்கள் எடுக்க

கடவுள் உண்டு!

இப்போது இங்கே இல்லாத கடவுள் திராவிடத்திலே நிச்சயம் இருப்பார். 'ஏழை எங்கே சிரிக்கிருனே அங்கேதான் உண்மைக் கடவுள் இருப்பார்' என்ற கவியரசர் தாகூரின் வாக்குப்படி, நாம் திராவிடர்களை, ஏழைகளைச் சிரிக்க வைப்போம். அந்தச் சிரிப்பிலே நிச்சயமாய், இப்போது ஏழை அழுது புலம்புவதால் இல்லாமல் எங்கேயோ போயிருக்கும் கடவுள் அப்பொழுது இருப்பார்.

—அண்ணா

ஆரம்பித்தார்! தங்கம், வெள்ளி, வெள்ளிமேல் தங்கம், பித்தளையை மறைத்திருக்கும் வைரக் 'கோஷா'—எங்கும் அப்பன் உருவம் பெற்று எழுந்தார்!

நாடெங்கும், நாடகமேடையெங்கும் அப்பனுக்கு அபார வரவேற்பு! பட்டிகளிலும் சாக்கடைத் தொட்டிகளிலும். மருந்துப் புட்டிகளிலும் அப்பன் 'லேபிள்கள்' தோன்றின! பஜனையூரில் 'அப்பன் ஸ்பெஷல் மிட்டாய்கள்' செய்து வழங்கினர்கள். அப்பனுக்கும் வழங்கப்பட்டது. அதுவும் தங்கத் தாம்பாளத்தில் தகதகக்கும் நெய் அல்வா! அது, பாதம்பரி மணம் வீசி, பாமரர்கள் நாசிகளிலே பக்தி நெய்யை வார்த்து விட்டது. ஆரஞ்சுப் பழ வியாபாரிகள், கண்களில் ஆனந்தச் சாறுவடிய அபிஷேகக் கூடை

களைச் சமர்ப்பித்தார்கள். பல சரக்குகள் சூடச் சாம்பிராணி களைச் சூறையிட்டார்கள்! சணல் வியாபாரிகள் 'பக்திச் சரடு' திரித்தனர், மாணவர்கள் பாக வதம் பாடினர். நாட்டிய மணி கள் சிவ சக்தி நடனங்களை அரங் கேற்றினர். பஜனைக் கூடங் களில் அன்று 'பக்திச் சுண்டல்' விநியோகம்! காப்பிக் கிளப்பு களில் அன்று அப்பன் பாயாசம்!

வயிறு எரியாதா சந்நிதானத் திற்கு? மேலும்மேலும் எரிச்சலை யூட்டும் செய்திகள் அவர் காதில் விழுந்து கொண்டே இருந்தன.

அப்பன் வரவால் மாமனுருக் கும் மருமகனுக்கும் சண்டை. இருவரும் போட்டி போட்டுக் கொண்டு பாதகாணிக்கை செலுத்தினர். மகளுக்கும் தாய்க் கும் போராட்டம். இருவரும் வீட்டில் தங்குவதில்லை. கணவ னும் மனைவியும் தனித்தனி அறையில்! எங்கும் தாடிகள் பெருகின! க்ஷவரத் தொழிலாளர் 'நஷ்ட ஈடு' வழக்குத் தொடர்ந் தார்கள்! ஆடைப்பஞ்சம் அறவே ஒழிந்து விட்டது. கீழே ஒரு துண்டு, மேலே ஒரு முண்டு. கழுத்திலே வடம்! அதிலே கொட்டை மாலை! அம்மட்டோ!

சந்தனக் கடைகளில் கனத்த லாபமழை! ஒரு சந்தனக் கடை முதலாளியே அப்பன் வரவேற் புக் குழுவிற்குத் தலைவரா யிருந்தாரென்றால், அதில்— சாமியே சரணம்—ஆச்சரியமே இல்லை. ஆட்சேபிப்பவர்கள் காதிலும் கண்ணிலும் சந்தனக் குழம்பை ஊற்றி, சாமியைச் சரணடையச் செய்து விடுவோம் என்று சந்தன மார்பர்கள் கம்பீர மாகக் கர்ஜித்தார்கள்!

ஆனால்.........!

காலொடிந்த அப்பன் தங்கக் காலோடு ஊர்வலம் வருகிறார். புலிகளை மடக்கிப் பால்கொண்டு வந்து தாயின் நோய் தீர்த்த தனயன் காலரா காதலர்களைக் கடைத் தேற்ற வழியறியாது, தன்னை நாடி உபரிமலை ஓடிவரும் பக்த கோடிகளைப் பாம்பின் வாயினின்றும் மீட்கத் திசை தெரியாமல், பாதாம் அல்வா சாப்பிட வாயைப் பிளந்து கொண்டு பவனி வருகிறார். வெட்கம்! வெட்கம்! ஊரை ஏமாற்றுவதால் மட்டுமே நன்று கப் பணம் திரட்ட முடியும் என்று கருதி, தாழி வயிற்றுக்குப் பாலா பிஷேகம் வார்த்து வளர்த்துவரும் பொம்மலாட்டப் 'பூதநாதர்கள்' இந்த 'அப்பன் பொற்காலத்தை' —சரணம் சீசனை நன்றாகப் பயன் படுத்திக்கொண்டார்கள்!

இத்தனை செய்திகளும் தார்க் குழம்புபோல் தடியூர்த்தம்பிரான் காதுகளில் பாய்ந்தன. காலிக் கஜானவும், 'பிளாங் பேப்பர்' களும் சந்நிதானத்திற்குப் 'புருக் லாக்ஸ்' வேலை செய்ய ஆரம் பித்து விட்டன. இரண்டு மூன்று தினங்கள் தொடர்ச்சியாக யோசித்தார். கடைசியாக 'உபரி மலை'யைச் சரணடைவதைத் தவிர வேறு உசிதமான வழி உருப்படியாகத் தெரியவில்லை.

மறுநாள்!

வெள்ளித் தாம்பாளத்தில் வேண்டுகோள் பறந்தது. "மெய் யப்பா! வருக! சாமியே,சரணம்!"

இப்பொழுது தடியூர்ச் சந்நி தானத்தின் மேனியும் மெய்யப் பன் மேனியைப் போலத் 'தக தக'வென்று 'மினுமினுக்'கிற தாம்! *

விநோத மண முறைகள்

ஏஸ்.என்.கே.ராஜன்

பொண்டர் :

சென்னை மாகாணத்து வடக்கு எல்லையிலும், ஒரிஸ்ஸா மாகாணத்திலும் மூவாயிரம் அடிக்கு மேல் உயரமுள்ள பீடபூமிகளில் வாழும் பொண்டர் (Bondar) என்ற காட்டு ஜாதியாரில் ஒரு கிராமத்து வாலிபர்கள் அதே கிராமத்திலுள்ள பெண்களை எக் காரணம் கொண்டும் மணப்பதில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் விசாலமான ஒரு பள்ளம் வெட்டி மேலே கூரை போட்டு மூடுவார்கள். மணமாகா மங்கையர் அதில் தங்குவர். அவர்களை மணக்க வாலிபர்கள் அடுத்த கிராமங்களிலிருந்து வருவார்கள். இரவானதும் மங்கையர் தங்கியிருக்கும் பள்ளத்திலே நெருப்பு மூட்டி வெளிச்சம் உண்டாக்குவர். அந்நெருப்புக்கு ஒரு புறம் பெண்கள் வரிசையாக உட்காருவர். அவர்கள் தங்கள் மார்பை பளபளப்பான அந்நாட்டு ஆபரணங்களால் மூடியிருப்பர். இடுப்பிற்கு ஒரு துண்டு மட்டும் கட்டியிருப்பர். அப்பெண்களுக்கெதிரே மணக்க வந்த வாலிபர்கள் வந்தமர்ந்து அவர்களது நாட்டுப்பாடலை வெகு உருக்கமாகப் பாடுவார்கள். அப்பாட்டு முடிவடைந்ததும் சட்டென்று ஒவ்வொரு வாலிபனும் தனக்குப் பிடித்த பெண்ணை நெருங்கி அவள் தொடையின் மீது தட்டுவான். அப்பெண்ணும் பதிலுக்கு முதுகில் தட்டுவாள். அதுவே பெண்ணின் சம்மதத்தைக் காட்டும் அறிகுறி. உடனே வாலிபன் அவளைப்பற்றி இழுத்து முத்தமிட முயலுவான். ஆனால் அப்பெண் அவனது பிடியினின்று தப்ப முயலுவாள். அங்கிருக்கும் எல்லா ஆண் பெண்களும் இதே விளையாட்டுகளில் இறங்குவர். எல்லோரும் களைப்படையும் வரை இவ்விளையாட்டு நீடிக்கும். பின்னர் ஆண்கள் ஒருவரிசையிலும், பெண்கள் ஒரு வரிசையிலும் பாதத்திற்குப் பாதம் தொடும்படிப் படுத்து உறங்குவர். இம்மாதிரியான நடவடிக்கை சில நாட்கள் நீடிக்கும். அதன் காரணமாக மணக்க விரும்பும் வாலிபனுக்கும், யுவதிக்கும் பரஸ்பரமான அன்பு உண்டாகிவிடும். பிறகு வாலிபன் பெண்ணுக்கு ஒரு ஜதை பித்தளைக் காப்பைப் பரிசாக அளித்து, அவளை மணப்பதாக பெரியோர் முன்னிலையில் கூறுவான். பிறகு மணம் நடந்தே

றும். அந்த ஜாதியில் கற்பு பிரதானமாகக் கருதப்படுகிறது. மேற்கூறியவாறு மணமாகா முன் வேடிக்கை விளையாட்டுகள் ஆண் பெண்களுக்கிடையே நடை பெற்றாலும் கற்பு நிலை தவறாமல் பார்த்துக் கொள்ளுகின்றனர் யுவதிகள்.

காஸி :

கஞ்சம் ஜில்லாவில் தோட்டி வகுப்பைச் சேர்ந்த காஸி (Ghasi) என்ற ஜாதியாரிடையே மணச் சடங்கின்போது ஒரு பானையில் தண்ணீரை நிரப்பி மணப் பந்த லில் கட்டித் தொங்க விடுவர். மணமான மறு நாள் மணமகன் அச் சட்டியை உடைப்பான். உடனே மைத்துனன் அவனை முதுகின் மேல் அடிப்பான். மண மகன் கோபித்துக்கொண்டு தன் வீட்டுக்கு ஓடிப்போவான். மறு நாள் மணப்பெண் அவன் வீட்டிற் குச் சென்று, சமாதானப்படுத்தி அவனைத் தன் வீட்டிற்கு அழைத்து வருவாள்.

ரெல்லி :

கஞ்சம் ஜில்லாவில் ரெல்லி (Relli தோட்டக்காரர்) என்ற ஜாதியார் மணத்திற்கு முன் கிராமாதிகாரியின் உத்தரவின் மீது மணமகன் மணமகள் வீட் டிற்குச் சென்று மணத்திற் கெனத் தயாரித்த கழுத்துச் சங்கிலியை மணமக ளின் கழுத்தில் அணிவிப்பான். அத்துடன் ஏழரை ரூபாயும், ஒரு பன்றியையும் அவர்கள் ஜாதி யாருக்கும், ஐந்து ரூபாயை மாமனுருக்கும் சன்மானமாகக் கொடுத்து மணத்தை ஆரம்பிப் பார்கள்.

செஞ்சு :

கஞ்சம் ஜில்லாவைச் சேர்ந்த நல்லமலைக் காடுகளில் வசிக்கும் செஞ்சு (Chenchu) என்ற ஜாதி யார் மணமக்களைச் சுற்றி நாற் புறமும் நான்கு அம்புகளை நடு வர். அப்படி நடுவது தாலி கட் டும் நல்ல வேளையைப் பார்ப் பதற்கேயாகும். அதாவது நடுப் பகலில், நடப்பட்ட அம்புகளின் நிழல் தரையில் விழாமலிருக்கும் போதோ, அல்லது மிகக் குறுகி விழும் போதோ தாலியைக் கட்டுவர்.

குருபர் :

மேற்கு பெல்லாரியைச் சேர்ந்த கன்னட இடையர்களா கிய குருபர் (Kurubar) மணத்தின் போது மணவறையைச் சதுர மாக நிர்மாணித்து, அதன் நான்கு மூலைகளிலும் நீர் நிறைந்த பானை களை வைப்பர். உலக்கைக்கு வெள்ளை, சிவப்பு வர்ணங்களால் கோடுகள் இழுத்து, நடுவில் வைப் பர். அதன்மேல் மணப்பெண் இரு சிறு தோழிப் பெண்களுடன் உட்காருவாள். அப்பொழுது எல்லோரும் அரிசியை அவள் மீது வீசுவார்கள். பிறகு பெண் ணுக்கு எண்ணெய் தடவி குளிப் பாட்டி பரிசுகள் கொடுப்பர். அதன் பின்னர் மணப்பந்தலில் ஒரு பெரிய கம்பளம் விரித்து, அதன் மேல் ஒரு புறம் அம்மிக் கல்லையும், அதற்கெதிரில் ஒரு கூடை நிறைய சோளத்தையும் வைப்பர். மணமகன் ஒரு காலைக் கல்லின் மேல் வைத்து, மண மகள் ஒரு காலைக் கூடையில் வைத்துத் தாலி கட்டுவார்கள். மணமான ஆறும் இரவு ஒரு தாம்பாளத் தட்டில் (கங்காளம்) சோறு, நெய், சர்க்கரைஇவற்றை

வைத்து அதைச் சுற்றி மணமக்க ளின் சுற்றத்தார் அமர்ந்து அதைத் தின்று தீர்ப்பர். தின் னும் உறவினர்களின் தொகை ஒற்றைப்படையாக இருக்கும். அவ்வுணவை அவர்கள் எவ்வளவு சீக்கிரம் சாப்பிட முடியுமோ அவ் வளவு சீக்கிரம் சாப்பிட்டு முடிக்க வேண்டும். சாப்பிடும் போதோ, அல்லது சாப்பிடும் முன்னே ஏதா வது தடை ஏற்பட்டால் அது துர திர்ஷ்டம் வருவதற்கான அறிகுறி என்று கருதப்படும். மேலும் அவ்வறிகுறி பெண் கெட்ட நடத்தையுடையவள் என்பதைக் காட்டும் என்றும் எண்ணுவர்.

ஹெக்கடி :

ஹெக்கடி (Heggadi) என்னும் கன்னட விவசாயிகளிடையே மணச் சடங்குடன் ஒரு வேடிக் கைச் சம்பவம் நிகழும். மண மான மறுநாள் இரவு. மணமகள் அணிந்துள்ள ஆபரணங்களில் ஒன்றை மணமகன் திருடிக் கொண்டு விடியும் முன் தன் வீட்டை அடைவான். மறுநாள் பெண் வீட்டார் மணகனைத்தேடி அவன் வீட்டிற்குச் சென்று. அவன் பெண்ணின் நகை ஒன் றைத் திருடிக் கொண்டு வந்து விட்டதாகவும், அவனைக் கண்டு பிடிக்க வேண்டும் என்றும், திரு டனைக் காட்டிக் கொடுக்கும்படி யும் கேட்பர். ஆனல் மணமகன் வீட்டார் அதைப்பற்றித் தங்க ளுக்கு ஒன்றும் தெரியாதென் றும், மணமகனையும் தாங்கள் பார்க்கவில்லை என்றும் சொல்லு வார்கள். பெண் வீட்டார் வீடெல் லாம் மணமகனைத் தேடுவர். அதற்குள் மணமகனைப் போல வேஷமிட்ட ஒருவனுக்கு முக்கா டிட்டு அவர்களுக்கு முன்னல் போகும்படி செய்வர். தேடு பவர்கள் அவனை மணமக னென்று கருதி, அவனைப்பிடித்து எல்லோருக்கும் முன்னல் அவன் தான் திருடன் என்று நிறுத்தி வைப்பர். அவன் தன் முக் காட்டை விலக்கியதும் எல்லோ ரும் ஏமாற்றமடைவர். பெண் வீட் டார் திருடனுகிய மணமகனைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று ஒப்புக் கொண்ட பிறகு மணமகன் தான் ஒளிந்து கொண் டிருக்கும் இடத்தைவிட்டு வெளியே வருவான். பிறகு எல் லோரும் சேர்ந்து ஊர்வலமாகப் பெண் வீட்டை அடைவர்கள்.

மரைக்காயர் :

கிழக்குக் கடற்கரையோரம் வாழும் முகமதிய மரைக்காயர் களிடையே மணமான நான்காம் காம் நாள் மணப்பெண்ணுக்கு பிராமணப் பெண்ணைப் போல உடையுடுத்து, ஒரு கையில் பித் தளைப் பாத்திரமும், மற்ருெரு கையில் ஒரு தடியையும் கொடுப் பர். அவள் மணமகனை நெருங்கி, அவனை மெள்ள அத் தடியால் தட்டி, "நான் உனக் குத் தயிரும் மோரும் கொடுக்க வில்லையா? அதற்கான விலை யைக் கொடு" என்று கேட்பாள். அதற்கு மணமகன், "உன் தயி ரும் மோரும் புளிப்பாக இருந் தது" என்று சொல்லிச் சில புளி யங் கொட்டைகளைப் பாத்திரத் தில் போடுவான். ஆனல் அவள் அதை மறுத்துப் பணம் கேட்பாள். உடனே அவன் பொன், வெள்ளி, செம்பு நாண யங்களை அப்பாத்திரத்தில் போடு வான். அதன் பிறகு மணச் சடங்கு முடிவு பெறும்.

ஜெய்பூர் மலைவாசிகள் :

மலைவாசிகளில் ஒரு வகையினர் குறிப்பிட்ட காலங்களில் வேட்டைக்குச் செல்வார்கள். வேட்டைக்குச் சென்றவர்கள் வெறுங்கையுடன் திரும்பினுல் பெண்கள் அவர்கள் மேல் சாணத்தையும் மற்றப் பொருள்களையும் விட்டெறிவர். ஆனுல் வேட்டையில் வெற்றியடைந்து, வேட்டையாடிய பொருள்களைக் கொண்டு வந்தால் ஒரு விருந்து நடக்கும். அதில் வயதான ஆண் பெண்கள் குடித்துக் களிவெறியில் மூழ்குவர். வாலிபர்களும், மங்கையரும் கிராமத்தின் நடுவே உள்ள தனித்த பெரிய குடிசைக்குச் சென்று எல்லோரும் ஒன்ருகப் படுத்துக் கூடி மகிழ்வர். அதன் பலனுகக் கருத்தரிக்கும் ஒவ்வொரு பெண்ணும் தன்னுடன் கூடிய ஆணைக் குறிப்பிடுவாள். பிறகு அவர்களுக்கு மணம் முடியும்

ஏலகிரி மலைவாசிகள் :

சேலம் ஜில்லாவில் ஏலகிரி மலையில் வாழும் மலைவாசிகளில் ஒரு வாலிபனின் தந்தை தன் மகனுக்குத் தகுந்த பெண் மற்ருெரு கிராமத்தில் இருக்கிருள் என்று கேள்விப்பட்டால் உடனே தன் சொந்தக்காரர்களுடன் அவ்வூருக்குச் சென்று அந்த ஊர்க்கவுண்டனை (கிராமத் தலைவனை)ச் சந்தித்து ஒருவருக்கொருவர் ஆலிங்கனம் செய்து மரியாதையைத் தெரிவிப்பர், வாலிபனின் தந்தை தான் வந்த காரியத்தை அவருக்குச் சொல்லி நான்குபேர் வார்த்தைக்குக் கட்டுப்படத் தனக்குச் சம்மதம் என்று கூறுவார். மண ஒப்பந்தம் முடிவடைந்தால் மணப்பெண் வீட்டார் ஒரு பெரிய விருந்து வைப்பர். மணமகன் வீட்டார் மணமகளின் வீட்டினுள் நுழையும்போது அவ்வீட்டின் மூத்த மருமகள் அல்லது மகள் வாசலுக்கு வந்து உள்ளே செல்லும் ஒவ்வொருவருடைய கைத்தடியையும் வாங்கிவைப்பாள். பிறகு அவள் சந்தனக் குழம்பால் ஒவ்வொருவருடைய நெற்றியிலும் வட்டமான ஒரு குறியிட்டுச் செல்வாள். பிறகு மணப்பேச்சு நடக்கும். அது முடிந்ததும் தங்கள் ஊருக்குத் திரும்பும் மணமகன் வீட்டார் ஒவ்வொருவரிடமும் முன்பு வாங்கிவைத்த கைத்தடியை அவரவர்க்கு மாற்றமில்லாமல் அவள் கொடுக்கவேண்டும். அப்படி மும்முறைக்குமேல் மாற்றம் ஏற்பட்டால் அதில் ஏதோ அபசகுனம் இருப்பதாகக் கருதி அதற்குப் பரிகாரம் செய்வர்.

வட ஆற்காடு மலைவாசி :

வட ஆற்காடு ஜில்லாவில் வசிக்கும் மலைவாசிகளில் ஒருவன் ஒரு பெண்ணை மணக்க விரும்பினுல் அப்பெண்ணின் பெற்ருேரிடம் சம்மதம் கேட்க ஒரு வருடம் அவர்கள் வீட்டில் ஊழியம் செய்யவேண்டும்.

அலியர் :

கஞ்சம் ஜில்லாவில் அலியர் (Alia) என்ற ஜாதியாரிடையே ஒரு பெண் பருவமடையும் முன் தக்க கணவனைத் தேட மணக்க இயலாவிடில் கணவனுக்குப் பதில் ஒரு வில்லை வைத்துப் பெயரளவில் மணம் செய்விப்பர். அதன்பின் மணமகன் கிடைத்தபோது மணச்சடங்கை முடிப்பர்.

(தொடரும்)

காந்தள் மெல்விரல்

"எழில்வேந்தன்"

'பெண்களால் முன்னேறக் கூடும்' என்று கூறினர் புரட்சிக் கவிஞர். ஆம்! உண்மை தான். 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்று நம் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவரும் பழமொழியும் அக் கருத்தை ஒருவாறு உணர்த்துவதாகும்.

நாட்டு முன்னேற்றத்தின் உயிர் நாடியாய் விளங்கவேண்டிய நம் தமிழகப் பெண்களின் நிலை தற்பொழுது எவ்வாறுளது? கல்வியற்றவராயும், கற்ற ஒரு சிலரும் கற்ற அறிவைப் பயன் படுத்தாதவராயும், பண்பொடு ஒழுகும் நிலையைப் பழகாதவராயும், 'வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' என்ற வள்ளுவன் வாக்கை மறந்தவராயும், ஆடையணிகளில் அளவுகடந்த ஆசையுடையவராயும், செல்வச் செருக்கால் செய்யவேண்டிய கடமைகளை மறந்தவராயும் அமைந்த பெண்களையே இன்றைய நிலையில் நாம் மிகுதியாகக் காணுகின்றோம். இந்நிலை விரும்பத்தக்கதல்ல. விலக்கப்படவேண்டியதாகும். மேலும், அவ்வகையில் விளங்கும் பெண்கள் அமைந்த குடும்பத்தில் இன்பம் இராது. அமைதியும் இராது.

இத்தகைய இழிநிலை நீங்கி உயர்நிலையுற்று உவப்புடன் வாழவேண்டுமெனில் நமது பெண்கள் பண்டைத் தமிழகப் பெண்கள் வாழ்ந்த வாழ்க்கையையுணர்தல் வேண்டும், உணர்வதன்மூலம் வீடும் நாடும் விளக்கம் பெறும், விவேகம் வளரும்; வேதனை நீங்கும்.

குறுந்தொகை என்பது சங்க நூல்களில் ஒன்று. எட்டுத் தொகை வகையைச் சேர்ந்தது. அகப்பொருளைப்பற்றிக் கூறும் அழகான நூல். இனிய எளிய முறைகளால் அமைந்து படிப்போர்க்கு இன்பம் பயக்கும் நூல். அந்நூலில் கூறப்பட்டுள்ள காட்சியொன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

ஆண்மையும் அழகும் அமைந்த ஆடவன். பண்பு நலனும் பாலன்ன மொழியும் அமைந்த பாவை. அவன், அவளைக் கன்னிகாதானமாகப் பெறவில்லை. பாணிக்கிரகணமும் செய்து கொள்ளவில்லை. வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொண்டான். வண்டமிழும் வான்பொருளும் போல் அன்பால் இணைந்து இருவரும் மகிழ்ச்சியோடு அகவாழ்வு நடத்தினர்கள்.

தன் மகள் புதுவாழ்க்கை நடத்துவதைக் காண விரும்பியது செவிலித் தாயின் உள்ளம். செவிலி என்பவள் வளர்ப்புத் தாய். அவள், காதம் சில கடந்து காணச்சென்றாள். தன் மகளுடைய இல்லத்தையடைந்தாள்.

தலைவி, தன்னில்லம் வந்த தாயை அன்புணர்ச்சி தோன்ற வரவேற்று, அகமலர்ச்சியோடு உபசரித்தாள்; நலம் விசாரித்தாள். பிறகு, இருவரும் பிறந்த இல்லத்தின் பெருமையையும், உற்ரூர் உறவினரின் நிலையினையும் பேசி மகிழ்ந்தனர் சிறிது நேரம்.

அதன்பின் தலைவி, தன் கடமையைச் செய்யக் களிப்புடன் புறப்பட்டாள். வெளியில் சென்ற கணவன் வீட்டிற்கு வருமுன் வேண்டியவற்றைச் செய்ய அட்டில் (சமையலறை) புகுந்தாள். கட்டியான தயிரைக் காந்தள் போன்ற தன் மெல்விரல்களால் பிசைந்தாள். பழகிய மட்பாண்டத்தில் எண்ணெயை ஊற்றினுள். உளுந்து முதலிய தாளிதப் பொருள்களைக் காய்ந்த எண்ணெயில் இட்டுத் தாளிதம்செய்தாள். அகப்பையால் துழாவினுள். துழாவியபொழுது எழுந்த புகையால் கண்களில் நீர்மல்கியது. கணவன்பொருட்டுச் செய்யப்படுவதாதலின் கண்ணீரைப் பற்றிக் கவலைப்படவில்லை. பிசைந்த தயிரையும் தாளிதத்தையும் பக்குவமாகக் கலந்து இனிய சுவையுள்ள புளிக்குழம்பு வைத்தாள். பதங்கெட்டுப் போகுமேயென்று கருதி கட்டித் தயிரைப் பிசைந்த விரல்களைக் கழுவவும் எண்ணுது தான் உடுத்தியிருந்த உயர்ந்த பட்டாடையில் துடைத்துக் கொண்டாள். இச்செயல், அவளுடைய செல்வச் செழிப்பையும் கணவன்பால் கொண்டுள்ள கட்டுக்கடங்கா அன்பினையும் உணர்த்துவதாகும்.

வெளியில் சென்ற கணவன் வீட்டிற்கு விரைந்து வந்தான். அன்பே! என்ற அன்புமொழியைக் கூறிக்கொண்டே அகத்தில் நுழைந்தான். தலைவியின் முகம் அன்று என்றுமில்லாத மலர்ச்சியுடன் விளங்கியது. தன்னில்லத்திற்குச் செவிலித்தாய் முதன் முறையாக வந்ததுதான் அதற்குக் காரணம். கார்மயிலன்ன காரிகையும் கடிதில் வந்து முக மலர்ச்சியோடு முன்னே நின்று கணவன் கையிலிருந்த பொருள்களை வாங்கி வைத்தாள். ஊரிலிருந்து செவிலித்தாய் வந்துள்ள செய்தியை உவப்புடன் கூறினுள். தலைவனும் மகிழ்ந்தான். கணவனுடைய களைப்பு நீங்கும் வகையில் கனிமொழி பேசினுள். அதன்பின், 'உண்ண நேரமாகின்றது' என்ற குறிப்பையுணர்த்தினுள். அப்பொழுதுதான் தனக்கும் பசிப்பதைத் தலைவன் உணர்ந்தான்.

அன்னமனையாள் அகமகிழ்வோடு இலைபோட்டு அமுது படைத்தாள். நறுமணத்தொடு நாவில் நீர் ஊறிடச் செய்யும் நல்ல சுவையமைந்த கறிவகைகளும் வைத்தாள். பிறகு, தன் அன்பு மணுளனுக்குப் பெரிதும் விருப்பமான தயிர் கலந்துசெய்த புளிக்குழம்பினை யூற்றினுள். ஐம்புல இன்பமும் அவ்வுணவு விருந்தில் அமைந்திருந்ததால் தலைவன் மகிழ்ந்தான். 'இனிதாயிருக்கிறது இன்றைய குழம்பு' என்று சொல்லி மீண்டும் ஒரு முறை குழம்பினை ஊற்றிக் கொண்டான். 'நீ கைதொட்டது வானேர் அமுதத்தை ஒத்திருக்கிறது' என்று தலைவியைப் பாராட்

டிப் பேசினன். அதனைக் கேட்ட தலைவி அளவிலா இன்புமுற்ரு ளாயினும் அதனை முழுதும் வெளிக்காட்டாது, புன்முறுவல் சிறிதே காட்டி அவ்வின்பத்தை வெளிப்படுத்தினள். அவள் காட்டிய புன்முறுவல் அவளுடைய செருக்கின்மையை நன்கு விளக்குவதா யிருந்தது.

இக்காட்சியைக் கதவின் அருகே சிறிது மறைவாய் நின்று பார்த்து மகிழ்ந்த செவிலித்தாய், தன் இருப்பிடம் சென்று பெற்ற நற்ருயிடம் பெருமையோடுபேசினள். இதோ! அப்பாடல். படித்துப் பாருங்கள். உணர்ந்தவர்கள் உணராதவர்களுக்குப் படித்துக் காட்டுங்கள்.

முளிதயிர் பிசைந்த காந்தள்
மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது
உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை
கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப்
பாகர்
இனிதெனக் கணவன்
உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று
ஒண்ணுதல் முகனே

இத்தகைய அன்பு நிலையில் அகவாழ்வை நடத்தும் நாளே வண்டமிழ் நாடு வளம்பெறும் நாளாகும்.

*

எழுத்தாளர்களுக்கு

●

பொன்னி இதழுக்குக் கதை. கட்டுரை, கவிதை முதலியவற்றையனுப்புவோர் கீழ்க்காணும் குறிப்புக்களை கவனித்தருள வேண்டுகின்ருேம்!

★ பிறமொழிக் கலப்பின்றி, நல்ல, இனிய எளிய தமிழில் எழுதி யிருக்கின்றீர்களா ?

★ பகுத்தறி வுணர்ச்சியைச் சிறிதேனும் ஊட்டத்தக்கதா யமைந்துள்ளதா ?

★ தமிழ், தமிழர் தமிழ் நாட்டுப்பற்றை மக்களிடை உண்டாக்குமா ?

★ பண்டைத்தமிழ் இலக்கியக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துணர்த்துமா?

★ ஆராய்ச்சியுரைகள் உளவா? புதிய கண்டுபிடிப்புக்களா ? புதுமைகளா ?

ஆசிரியர்.

42 Prize winners are awarded Prizes in our Competition No. 13. Ist Prize 16 persons IInd Prize 2 persons IIIrd Prize 23 persons & 1 Consolation Prize. Full particulars are published in the "Sunbeam" dated 25-4-54.

ரிஜிஸ்டர்ட் நெ. 624. போட்டி நெ. 15.

ரூ. 25,000

பரிசு பெறுக.

RAISING COMPETITIONS

KEY S. NO. 13 * 20 TO 35 / 110

27	20	32	31
29	34	22	25
30	33	21	26
24	23	35	28

We hereby certify that the above is the solution in original deposited with us by Raising Competitions No. 13 on 24/3/54 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

எமது ஸீலிடப்பட்ட சரியான விடை சென்னை மெஸர்ஸ் பிரீமியர் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களது அத்தாட்சியுடன் பிரசுரிக்கப்படும் எமது ஸீலிட்ட விடைக்கு வரிக்கு வரி எழுத்துக்கு எழுத்து முற்றிலும் சரியான விடைக்கு முதல் பரிசு ரூ. **12,500**; முதலிரண்டு வரி சரியான விடைக்கு 2-ம் பரிசு ரூ. 6500; முதல் வரி சரியான விடைக்கு 3-ம் பரிசு ரூ. 3500. இடமிருந்து வலமும், மேலிருந்து கீழும் முதலிரண்டு எண்கள் சரியான விடைக்கு 4-ம் பரிசு ரூ. 2,500

முடிவு தேதி 12–5–54 **விடை 27–5–54**

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரூ. 1–0–0.

ஆறு கூபன்களுக்கு ரூ. 5–0–0, 14 கூப்பன்களுக்கு ரூ. 10.

விடைகள் கண்டு பிடிக்கும் விதம்:— 22 முதல் 37 வரையுள்ள எண்களைப் பக்கத்திலிருக்கும் கட்டங்களில் பூர்த்தி செய்க.

118

இடமிருந்து வலமாகவுள்ள, வரிசைகளையோ, மேலிருந்து கீழாகவுள்ள வரிசைகளையோ, சதுரத்தின் மூலைகளுக்கு குறுக்காகவோ எந்த வரிசையைக் கூட்டினாலும் மொத்தம் 118 தான் வரவேண்டும். ஒரு எண்ணை ஒரே முறைதான் உபயோகிக்கலாம், சாதாரண காகிதத்தில் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் எழுதலாம். ஒவ்வொரு விடைக்கும் அடியில் அவரவர் பெயர், விலாசத்தை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி, கட்டணத்தையும் கிராஸ் செய்த இந்திய போஸ்டல் ஆர்டராகவோ, மணியார்டராகவோ அனுப்பவும். மணியார்டர் பாரத்தில் கூப்பன்களில் அவரவர் பெயர் விலாசத்தை எழுதவேண்டும். விடை கூப்பன்களுடன் மணியார்டர் ரசீதை அனுப்பவும். வெளி நாட்டிலிருந்து அனுப்புவோர் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டராக வாங்கி அனுப்பவேண்டும். பரிசுத் தொகைகள் வசூலுக்குத் தக்கபடி மாறும். எல்லா விஷயங்களிலும் மானேஜரின் தீர்ப்பே முடிவானது. சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். விடை வேண்டுவோர் 4 அணா தபால் ஸ்டாம்பு அனுப்பினால் விடை தபாலில் அனுப்பப்படும். எமது விதிகளையும் நிபந்தனைகளையும் நன்கு அறிந்தவர்களே போட்டியில் கலந்துகொள்ள வேண்டும்.

விடைகளையனுப்பும் விலாசம்:—

The Raising Competitions No. 15

28, (P) Thandavaraya Gramani Street, Madras-21.

அச்சம் தவிர்!

"வாழ்நன்"

நானிலத்திற்கு நாகரிகத்தை வாரி வழங்கிய நந்தமிழ் நாட்டில் அருந்தமிழ்ப் பாட்டி ஔவை மூதாட்டியின் அறிவுரைகூறும் ஆத்திச்சூடி தோன்றி ஆண்டுகள் பல உருண்டோடிய பின்னர், பைந்தமிழ்க் கவிஞன் பாரதி பாடினுன் பாப்பாக்களுக்குரிய புதிய ஆத்திச்சூடியை. ஆனுல் அது பரப்புவாரின்மையால் உலகில் ஒதுக்கிடம் பெற்றுள்ளது. இனியாவது பலரும் படித்துப் பயன் கொள்ளுமாறு செய்யவேண்டுமென்னும் சிறந்த நோக்கத்தால் சிறுவர் பகுதியில் இந்த இதழிலிருந்து தொடங்குகின்றேன்.

இன்பத் தமிழ்நாட்டின் இளஞ் சிறுவர்களேயும் சிறுமிகளேயும் காண்கின்ருர் நம் சுப்பிரமணிய பாரதியார். உள்ளம் சோர்கிருர். ஏன்? வேங்கைப் புலியை, வேகமுள்ள சிங்கத்தை, சீறும் சிறுத்தையை, ஆண் யானேயை, அடல் மறவனே, ஆரிய வேந்தர்களே அடக்கியொடுக்கி ஆண்மையை அனேத்துலகங்களுக்கும் அறியச் செய்தவனின் வழிவந்த தமிழர்களின் வழித்தோன்றல்கள், இன்று ஆலமரத்தையும், சாலேயோரத்தையும், ஆண்டி மடத்தையும், புல்லேயும், பூணூலேயும்; பல்லியையும் கண்டு அஞ்சிச் சாவதை அடங்கியொடுங்குவதைக் கண்டதேயாகும். இந்நிலேயிலே கவிஞன் சிந்திக்கின்ருன். அப்பொழுது தென்படுகிறது இதற்குரிய காரணம்: மடமையின் வயப்பட்ட மாதர்கள் தம் செல்வக் குழந்தைகளேத் தேன் சிட்டுகளேத் தம் சொல்வழி கேட்கவும், தொடை நடுங்கவும், துடுக்கைக் குறைக்கவும், அழாதிருக்கவும், அம்மாவிற்குப் பணியவும் அடுப்பங்கரை செல்லாதிருக்கவும், ஆற்றங்கரையை அணுகாதிருக்கவும் எண்ணங் கொண்டு, தொட்டிலிலே, தம் தோளிலே, துணேக் கரங்களிலே இடும்பொழுதும், ஏந்தும்பொழுதும், எடுக்கும் பொழுதும், தூங்கவைக்கும் பொழுதும், தூக்கி அணேக்கும் பொழுதும், வண்டியுருட்டும் பொழுதும். வான்மதி காட்டும் பொழுதும், வாழைப்பழம் ஊட்டும்பொழுதும் பேதமை காரணமாக, உளநூலின் உண்மை தெரியாது அதோ அஞ்சு கண்ணன், இதோ பூச்சாண்டி, அங்கே பேய், இங்கே பூதம், கோழி கொத்தும், மாடு முட்டும் என்றும், இரா நேரத்திலே சாலேயோரத்திலே ஏழு கண்ணன் வருவான்! எமன் வருவான்!! காட்டேரி கத்தும், கருப்பன் மிரட்டும், காளி கத்துவாள், மாரி சீறுவாள் என்றுகூறி எழில்மிகு சிறுவர்களே தங்கைகளே பயமுறுத்தி, பகுத்தறிவை இழக்கச் செய்து சோற்றுப் பிண்டங்களாய் சொரணேயற்றவர்களாய் வாழச் செய்வதை நினேந்து பார்க்

கிறார். நெஞ்சம் நெருப்பாகிறது. உடனே அஞ்சத்தகாதவற்றிற்கு அஞ்சி, ஆண்மையிழந்து அல்லல் பலபட்டு ஆங்கிலேயரின் அடிமையாகி, ஆரியர்களின் அடிவருடி, அச்சத்தைத் துச்சமென்றிகழாது அரிய சொத்தென்றெண்ணும் ஆடவர்களும் பெண்டிரும்கூட சோர்வுற்றெழ, சோம்பல் தணிய மடமை மாய, அறிவொளி வீச அருந்தமிழ் மொழியில், அமிழ்த நடையில், எளிய இனிய முறையில் எடுத்து இயம்புகின்றார். அனைவரும் உண்டு ஆண்மை பெறுவீராக!

" அச்சம் தவிர் "

என்ன அழகு! இரண்டே சொற்கள், இனிய கருத்துக்கள். இதன் பொருளாவது பயத்தைப் போக்கு என்பதாகும். ஏனெனில் அச்சம் அறியாமையின் ஆணி வேராகும். அது கல்லி(தோண்டி) எடுக்கப்பட்டால்தான் அறிவு வளரும். ஆண்மை பிறக்கும். இன்றேல் புதியன காணும் பொழுதும் கேட்கும் பொழுதும் நடுக்கம்தான் பிறக்கும். நாலுபேரைக்கண்டால் நாய் குரைத்தால் நாடாள்வோரை நெருங்கினால், நள்ளிரவில் வெளியேசெல்ல நேரிட்டால், மரம் ஆடினால், மட்டை அசைந்தால், கோட்டான் கூவினால், குள்ளநரி ஓடினால், இருட்டுத் தென்பட்டால் மருட்சியும் மயக்கமும், திகைப்பும் திணறலும் ஏற்படத்தான் செய்யும். ஆதலால் அச்சத்தை அழித்துவிடு என்று அறிவுரையை அன்புரையாக வழங்குகிறார் நம் வரகவி சுப்பிரமணிய பாரதியார். இவ்வாறு கூறியதும்,

அச்சத்தை அழிப்பது எவ்வாறு? என்று அறிந்துகொள்ள ஆசைப்படும் அருமைத் தம்பிகளே! தங்கைகளே!! கேளுங்கள். பேரன்பு மிகவுடைய பெற்றோர்களே! நீங்களும் கேளுங்கள். தாலாட்டும் தாய்மார்கள், புரட்சிக் கவிஞரின் புதிய தாலாட்டுப் பாடலைப் பாடுங்கள். ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியனின் நேரிய வீரத்தைப் பாடுங்கள். சேரன் செங்குட்டுவனின் தீரத்தைக் கூறுங்கள். கதை சொல்லும் காரிகையர் கண்ணகியின் கற்பை விளக்குங்கள். காக்கைப் பாடினியின் புலமையைப் போற்றுங்கள். ஆட்டம் ஆடும்பொழுது ஆதிமருதியின் ஆட்டனத்தியின் ஆற்றலைப் பேசுங்கள். உறங்க வைக்கும் பொழுது "உச்சியிருட்டினில் பேய் வந்ததாக வுளறினால் அச்சமா? பேய் என்பதுண்டா? என்ற பாரதிதாசனின் பாட்டைப் பாடுங்கள். பாடஞ் சொல்லித் தரும் பொழுது பாரோர் போற்றும் பாவலர் திருவள்ளுவரின் "அஞ்சாமை யல்லால் துணை வேண்டா" என்ற அறிவு மொழியைப் புகட்டுங்கள். இதற்குத் தந்தைமார்கள் தகுமுறையில் உதவி செய்க. இவ்வாறு பெற்றோர்கள் செய்திடின், பேரன்பு கொண்ட குழந்தைகள் கேட்டிடின், அச்சம் அழிந்தே தீரும். ஆகையால் தமிழ்த் தம்பிகளே! தங்கைகளே!! நீங்கள் இத்தகைய அறிவுரைகளைக் கேட்க வேண்டுமென்றால் தமிழர் பண்பிலே தவறாது வாழவேண்டுமென்றால் பொன்னியைப் படியுங்கள், புதுமை வழியிலே செல்லுங்கள். குறளைக் கல்லுங்கள், அதன்வழி நில்லுங்கள். குவலயம் வாழும், குருட்டுத்தனம் மாயும், கொள்கை பரவும். *

இலக்கியச் செல்வங்கள்



ஆனால், இன்று இரவலர் துயர் துடைக்கும் புரவல னாக இருக்கும் ஒப்பற்ற பெருவள்ளல் நல்லியக் கோடான் ஒருவனே. அவன் எத்தன்மையன் என்றால்,

பருவமழை பெயக்கண்டு பசுந்தோகை விரித்து மகிழ்ந்து கூவிய மயிலைக் குளிரினால் குலைந்து கூவியதெனக் கொண்டு, தான் அணிந்திருந்த போர்வையை அதற்கு அன்புடன் இட்ட **பேகன்**

கொள்கொம்பின்றித் தவித்த முல்லைக் கொடிபடரத் தான் ஏறி வந்த பொன் தேரை நிறுத்திவிட்டுக் கழலடி சிவப்ப நடந்து சென்ற பறம்பு நாட்டின் மன்னன் **பாரி**

அழகிய தலையாட்டங்கொண்ட குதிரையோடு அகன்ற தனது நாட்டையும் இரப்போருக்கு உலகம் மருளும்படி கொடுத்துதவிய **காரி**

பாம்பு தனக்கு ஈன்று தந்த பசு நீலப்பட்டாடையை ஆலின் கீழ் அமர்ந்த கடவுளுக்கு அன்பினால் கொடுத்த **ஆய்**

அரிது முயன்று பெற்ற அழியா நிலைதரும் அமிழ்தம் போன்ற நெல்லிக்கனியை ஔவைக்குத் தந்து அழியாப் புகழ் கொண்ட **அதிகன்**

களங்கமில்லா உள்ளத்துடன் கலந்து பழகும் நண்பர் கள் மகிழ்ந்து வாழ்கவென்று நாள்தோறும் பொருள் தந்த **நள்ளி**

சிறுகுன்றுகளும் சுரபுன்னை மலரும் நிறைந்த நாடுகள் பலவற்றை ஆடுவார்க்கு அளித்த **ஓரி**

ஆகிய வள்ளல்கள் எழுவரும் செய்து வந்த கொடைச் செய்கையை இன்று தான் ஒருவனாகவே நின்று ஆற்றிவரு கின்றான். புலி போன்ற வீரமுடையான்; அவன் இடையில் இருக்கும் வாள் பகைவர்தம் முகத்தினும் மார்பினுமே புண் செய்து மீளும் தன்மையை உடையது. ஓவியர் குடி யில் தோன்றியவன்; என்றும் பின்னிடுதலை யறியாத அவன் இணையடிகளில் வீரக்கழல் இடையறாது கிடந்து

ஒலிக்கும். வழங்குவதில் மழையை ஒத்த அவன் கைகளோ எப்பொழுதும் கூத்தர்கட்குப் பிடிகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

நல்லியக்கோடனின் நல்லியல்புகளைச் சொல்லும் போதே அப்பாணனின் உள்ளம் தனது பழைய நிலையைச் சற்று எண்ணுகிறது. அந்த இரங்கத்தக்க நிலையை ஏழைப்பாணன் அறிய எடுத்துரைக்கின்ருன்.

பாணனின் வறுமை நிலை :

இப்பொழுது கை நிறையப் பொருளும் கண்களிலே ஒளியும் பெற்று மீளும் இப்பாணனும் முன்பு வறுமையில் தான் வாடினன். அந்த வறுமையின் கொடுமையை ஆசிரியர்

திறவாக் கண்ண சாய்செவிக்குருளை
கறவாப்பால் முலைகவர்தல் நோனது
புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்"
காழ் சோர் முதுசுவர் கணச்சிதல் அரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
ஒல்கு பசி உழந்த ஒடுங்கு நுண்மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேரொக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழி பசி வருத்தம்"

என்று இரங்கிக் கூறுகின்ருர். வீட்டிலே அடுக்களை வாழ்ந்தால் தானே அனைவரும் வாழமுடியும்? ஆனல் அவன் வீட்டின் முற்றத்தில் முடங்கிக் கிடந்த பெண் நாயைப் பார்த்தே அவன் வறுமையை அறிந்து கொள்ள லாம். வெவ்விய பசியால் மெலிந்து விலா எலும்புகள் வெளிப்பட்டுக் கிடந்த அந்த நாய், பாலற்றத் தன் மார் பினைச் சுவைத்த தனது குட்டிகளையே அதுவும் கண் திறந் தறியாத இளங்குட்டிகளைக் குரைத்து விரட்டியதாம். அம் மட்டோ! வீட்டின் உட்புறத்திலே அடுக்களையின் தட்டிகள் இற்று இற்றுப் பொடிந்து வீழ்ந்தன. அடுப்பிலே காளான் பூக்கச் சுவரிலே ஏறிய கறையான் கூறையை உண்ணத் தொடங்கியது. பாணன் மனைவி என் செய்வாள்! கொல் லைப் புறத்திலே குப்பையில் கிளைத்துக் கிடந்த கீரையை

உப்புக்கூட இல்லாமல் சமைத்துத் தனது பெரிய குடும்பத்துடன் அதைப் பகிர்ந்து உண்ண வேண்டிய நிலையில் இருந்தாள். பிறர்தம் ஏளனத்திற்கு அஞ்சிய அவள், வீட்டுக் கதவையும் மூடியே வைத்திருந்தாளாம். ஆனால் அக்கொடிய வறுமை இன்று அடியோடு ஒழியும்படி நல்லியக் கோடனிடமிருந்து பொருள் பெற்று ஊர் திரும்புகின்றான் பாணன்.

இவனது கதையைக் கேட்ட ஏழைப் பாணனின் கண்களிலே ஒளி தோன்றுகின்றது. தனது வாழ்க்கையிலும் ஒரு மறுமலர்ச்சி ஏற்படும் என்ற நம்பிக்கை பிறக்கின்றது. இனித்தாமதிக்காமல் செல்வான் வேண்டிக்கேட்க, பரிசில் பெற்றுவரும் பாணன் வழி கூறுகின்றான். வழியில்,

நெய்தல் காட்சிகள் :

> " அலை நீர்த் தாழை அன்னம் பூப்பவும்
> தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும்
> கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும்
> நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும் "

நீண்டுகிடக்கும் நெய்தல் நிலம் குறுக்கிடும். அங்குதான் உப்பங்கழிகளும் குளங்களும் சூழ இடையிலே **எயில் பட்டினம்** இருக்கின்றது. அங்கு வாழும் பரதவர்கள் மிகவும் நல்லவர்கள். **கிடங்கில்** என்னும் ஊருக்கு அரசனாகவுள்ள, மாலையணிந்து விளங்கும் அவர்களின் தலைவனைப் புகழ்ந்து பாடினால், பாணனும் விறலியும் தம் சுற்றத்தோடு மகிழ்ந்துண்ணும்படி நன்றாகச் சுட்டுப்பக்குவப்படுத்திய மீன் துண்டுகளைத் தருவர் : அந்நாட்டில் அலைகளால் கொண்டு வந்து குவிக்கப்பட்ட விறகு பார்ப்பதற்குப் படுத்துறங்கும் ஒட்டகம் போல் தோன்றும். அவ்விறகுகளால் தீ மூட்டி எரித்து அரிக்கப்பட்ட நல்லகள்ளை மதிபோன்ற முகமும் பிடியின் துதிக்கைபோன்ற கூந்தலையும் கொண்ட நுழைச்சியர் தருவர்.

முல்லை நிலவளம் :

அவ்விடத்தைக் கடந்து அப்பால் காட்டுவழியே சென்றால் வழியில் காந்தள் கைபோலவும், காயாமலர் மயிலின் கழுத்து போலவும், அவரை பவளம் போலவும் நிறம் பெற்றுப் போவாரை மயக்கும். அருவிகள் துள்ளிக் குதித்து இறங்கும் பெரிய மலையின் பின்னால் ஞாயிறு மறைகின்ற

மாலைக்காலத்தே ஆங்குள்ள வேலூரிலே தங்கினுல், புளிங் கறியுடன் கூடிய உணவை ஆமானின் சூட்டிறைச்சியுடன் ஆங்கு வாழும் எயிற்றியர் தருவர்.

மருத நிலச் சிறப்புக்கள் :

அதற்கு அடுத்தாற்போல் கொஞ்ச தூரம் சென்ருல் முற்றிலும் வேருன அழகிய காட்சிகளைக் காணலாம். குளிர்ந்த நீர் நிலைகளைச் சூழ்ந்தபடி உயர்ந்த காஞ்சி மரங்கள் மாலை மாலையாகப் பூத்து நிற்கும். அவற்றின் கிளைகளில் இருக்கும் பொன்னிற வாயினையும் நீல நிறத்தினையும் கொண்டுள்ள சிச்சிலிப் பறவை நீரினுள் பாய்ந்து மூழ்கி மீனைப் பிடித்து மீளும். சிச்சிலிப் பறவைகளின் கால்கள் பட்டுக் கிழிந்த இலைகளோடு கூடிய தாமரை மலரின் தேனை உண்ண நெருங்கும் சிவந்த கண்களையும் நீல நிறத்தினையும் உடையவண்டுகள் வரிசை, திங்களைச் சேருகின்ற கரும்பாம்பு போல் காட்சியளிக்கும். இத்தகைய அரியகாட்சிகள் நிரம்பிய குளங்களையும் வயல்களையுமுடைய **ஆமூர்** அரிய காவலையும் நீங்காத குடியிருப்பையும் கொண்டது. வீட்டினுள் வாழும் உழவர் குடிப்பிறந்த உயர் மகள் வழிச் செல்வோரைத் தன் மக்களை விட்டுத் தடுத்தழைத்து வந்து, கையால் குத்திச் சமைத்த உணவை, நண்டும் பீர்க்கங்காயும் கொண்ட கலவையோடு அளிப்பாள்.

மூதூரின் சிறப்பு :

அவ்விடமிருந்து மிக அண்மையிலேயே நல்லியக் கோடனின் **மூதூர்** உள்ளது. அவ்வூரில் தெருக்கள் ஆறு போன்று அகன்று கிடக்கும். அவற்றில் எழுகின்ற துகள்களைப் போர்யானைகள் பொழியும் மதநீர் அடங்கும்படிச் செய்கின்றது. போர்க்களத்திலே பிணங்களை இடறுவதால் சிவப்பேறிய யானையின் நகங்களோடு கூடிய கால்கள், நிணத்தைத் தின்று பேய் மகள் வாய்திறந்து சிரித்த தோற்றம் போல் இருக்கும், மேருமலை கண் விழித்தது போல் இருக்கும் அவனது கோபுரவாயில் அறிஞர்க்கும், அறவோர்க்கும் எப்போதும் திறந்தே கிடக்கும்.

நல்லியக் கோடனின் நற்பண்புகள் :

நல்லியக்கோடன் செய்ந்நன்றி மறவாதவன்! சிற்றினம் சேராதவன்; விரும்பியவற்றை விரும்பியவாறே முடிக்

கும் திறம் படைத்தவன்; சேர்ந்தாரிடத்து என்றும் இன் முகமுடையான்; வரிசையறிந்து பரிசில் நல்கும் அருங் குணத்தோடு கூடியவன். எப்பொழுதும் கலைஞர்களும், கவிஞர்களும் சூழ, விண்மீன்கள் சூழ நிலவும் வெண்மதி போல வீற்றிருப்பான்.

இத்தகைய பெரியோனை எப்படி நெருங்குவது? எப் படிப் போற்றுவது? வழிசொல்கின்றான் அவ்வழி காட்டி.

பரிசிலர் பாடும் முறை:

அமிழ்தம் பொழியும் அழகிய சீறியாழைக் கையில் எடுத்து மீட்டி

"முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்
ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்
தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்"

சில மொழிந்தால் போதுமாம்! ஆம், பெரியோரிடத் துப் பணிவும், வீரரிடத்து மார்பும்; உழுவோரிடத்து அரு ளும், பகைவரிடத்து எரிதவழும் வேலும் காட்டும் இந்நால் வகைப்பண்புகளுக்குள், ஒரு மன்னனது ஏனைய அருங் குணங்களெல்லாம் அடங்கித்தானே ஆக வேண்டும்? மேலும், புகழ்ச்சியை விரும்பாத நல்லியக்கோடன் இதற்கு மேலும் பாடும்படி விடமாட்டான்!

நல்லியக் கோடன் தரும் பரிசிலின் சிறப்புக்கள்:

அதற்குள் மூங்கிலின் உரித்து எடுத்த தாள் போன்ற குற்றமில்லாத ஆடையைத் தருவான்; பாம்பின் நஞ்சு போல் உண்டவரை மயக்கும் கள்ளினது தெளிவைப் பரு கத்தருவான். இலக்கண முறையில் சமைத்த இனிய சோற்றினைப் பொற்கலத் திட்டு அருகிருந்து உண்ணும் படி செய்வான். பகைவர் தம் அரணை அழித்து வந்த பொருளால் எப்பொழுதும் பாணர் தம் வறுமையைப் போக்கியபடியே இருப்பான். அரிய வேலைப்பாடும் வேக மும் அமைந்ததேரோடு, குதிரையும் யானையும் உடன் தந்து, இறுதியில் பாணனைச் செல்லும்படி வழியனுப்பு வான். இதுபோன்ற செய்திகளைப் பரிசில் பெற்ற பாணன் விளக்கமாகக் கூறி முடிக்கின்றான்.

ஏழைப்பாணன் அவனுக்கு நன்றி கூறிவிட்டு, மயில்கள் தோகை விரித்தாட என்றும் மழை பொழி யும் குறிஞ்சி நாட்டுக் கோமான், நல்லியக் கோடன் இருக்கும் திசை நோக்கித் தன் சுற்றம் சூழ விறலியுடன் புறப்படுகின்றான்.

கற்றதனாலாய பயன்

‘ வாழ்நன் ’

வையத்துள் வாழ்வாங்கு வாழ விழையும் மக்களினம் கல்வியைக் கற்றலிலே இற்றை ஞான்று கருத்தூன்றி வருதல் கவனிக்கற்பாலது. ஆதலின் கல்வி என்ருல் என்ன? கல்வியின் குறிக்கோள் யாது? ஈண்டு பயில்வார் நோக்கம் யாது? அதன் பயன் யாது? என்பன குறித்து அறிந்துகொள்ளல் இன்றியமையாததன்ருே? கூறுமின்.

கல்வியென்பது கல் என்ற வேர்ச் சொல்லின் அடிப்படையிலே தோன்றியது. கல்வியென்ருல் அறிவினைத் தோண்டுதல் அறியாமையைப் புதைத்தல் என்று பொருள்படும். இதனலன்ருே நம் வள்ளுவப் பெருந்தகை,

> '' தொட்டனைத்தூறும் மணற் கேணி மாந்தர்க்குக்
>
> கற்றனைத்தூறும் அறிவு ''

என்று ஈராயிரம் ஆண்டிற்கு முன்னர் அருளிப் போந்தார். கருத்து என்பது எண்ணம். ஊன்றுதலாவது ஆழப் பதியவைத்தல். கற்கும்பொழுது வேறு வகையிலே எண்ணம் சென்றிடின் எக்கல்வியையும், யார் கற்பிப்பினும் பயன் தரா என்பது யாவரும் அறிந்த வொன்ருமு. ஆதலால் படிக்கும் பாடத்திலே மனத்தைப் பதியவைத்துப் படித்தல் வேண்டும். இன்றைய இளைஞர்கள் தம் நோக்கையும் போக்கையும் பல்வேறு வகையிலே சிதறவிட்டு விடுதலாலன்ருே ஏனைய நாட்டு மாணவரைப் பார்க்கினும் குறைபாடுடையராக இருக்கின்றனர்.

மற்றும் இன்று கல்வி பயிலும் மாணவர் நோக்கமும், அவர் பெற்ருேர் எண்ணமும் அறிவுவளர்ச்சி பண்பு வளர்ச்சி, ஒழுக்கவுயர்வு, சான்ருண்மை முதலிய உயர்ந்தவற்றை நோக்காது கீழான வேலை தேடும் படலத்திலன்ருே செல்கின்றது. ஆய்வு மனப்பான்மையும், அறிவியல் முறையில் புதியன ஆக்கும் புகழ்மிகு செயலும் அமைந்தாலன்ருே நம் அருந்தமிழ் நாடு அவனியோர் போற்றும் நிலையெய்தவியலும். தந்தையின் கடன் தன் மைந்தனைச் சான்ருேன் ஆக்குதல் என்ற கடமையை உணர்ந்தாலன்ருே குவலயம் போற்றும் கொள்கையுடைய குடியாட்சி நிலவமுடியும்.

இம்மட்டோ! பயிலும் முறையினையும் பழகும் முறையினையும் மாணவர்கள் இன்னும் தெரிந்தாரில்லை. சிலர் பணத்தை வீசியே படித்துவிடலாம் என்று மனப்பால் குடிக்கின்றனர். இது தவறுடையதென்பதை நமது செந்தமிழ் நாட்டின் தனிப்பெருங் கவிஞர், தமிழகத்து விடிவெள்ளி,

பைந்தமிழ்க் கவிஞன் பாரதியின் பக்திசால் நண்பன் பாரதிதாசன் கூற்றுல் மறுப்போம்.

'' விலைபோட்டு வாங்கவா
முடியும் கல்வி
வேளைதோறும் கற்றுவரு
வதால் படியும் ''

எனவரும் மொழியே அவர்தம் எண்ணத்தை ஈடழிக்கும் வெடி குண்டாகும். வேறு சிலர் தனி முறைக் கல்வியெனும் தன்னலக் கல்வியால் வேண்டிய அளவு வெண் பொற் காசுகளை அள்ளி வீசி, காசுகொடுக்கும் கர்வத் தால் கணக்காயரைத் துச்சமென மதித்துத் தம் வாழ்க்கையை நுணலைப்போன்று தாமே துய ரக் கடலில் ஆழ்த்தி வருகின்ற னர். கற்கும் முறையினையும் கற்றலின் சிறப்பினையும் முத் தமிழ் நாட்டில் முது தமிழ் வளர்த்த பாராண்ட பழமையு டைய பாண்டியர் மரபிலே இரண் டாயிரம் ஆண்டிற்கு முன்னரே மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த எம் மறக்குடி வேந்தன், தருக்குமொழி பேசிய சண்டாளராம் சனுதனிகளை, ஆரியர் குலத்திலே தோன்றிய அறிவிலிகளை, அகம்பாவக்காரர் களை அடக்கி ஒடுக்கும் பொருட்டு வடநாடு சென்று வடவரை வணக்கி வாகைமாலை புனைந்து தம் பெயருக்கு முன் அவ் வெற் றியையே அடைமொழியாகக் கொண்டிலங்கிய ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் கூறுவ தைத் தெளிவுறக் கேட்டுத் திருந் துமின்.

'' உற்றுழி யுதவியும் உறுபொருள்
கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப் போரன்ன வுடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னுதவருள்
அறிவுடை யோனுறு அரசுஞ்செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பாலொருவன் கற்பின்
மேற்பாலொருவனும் அவன்கட் படுமே''

என்ற புறப்பாடலில் பொதிந் துள்ள கருத்தினைக் கருதிப் பாருங்கள். இதனைப் பாடியவர் முடியுடை மூவேந்தரில் ஒருவரா யினும் பாட்டின் நயம் பாராட்டு தற்குரியதல்லவா? கல்வி என் னும் கற்பகத்தருவால் சாதி வேற்றுமையைத் தரைமட்டமாக் கலாம் என்ற சால்புடைக் கருத் தும் ஆசிரியர் மனம் நிறையளவு விருப்பத்துடன் பொன்மணிகளை அள்ளிக் கொடுப்பினும் கல்வி பயிலும்பொழுது பணிவும் ஆவ லும் வேண்டுமென்பதும், வய

உதவி நிதி

பாரதியாரின் நண்பரும், எழித்தாளருமான பரலி சு. நெல்லையப்பர் அவர்கட்கு நிதி திரட்டிக் கொடுப்பதெ னச் சென்னை, தமிழ் எழுத் தாளர் சங்கம் முடிவு செய் திருப்பதாயும், அப்பணிக்கு எல்லோருடைய உதவியை யும் நாடுவதாகவும் நிதியின் பொருளாளரும் 'குமுதம்' ஆசிரியருமான தோழர் எஸ். ஏ. பி. அண்ணுமலை அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். நிதியனுப்பு வோர், 'ஆசிரியர், குமுதம், தபால் பெட்டி 1008, சென்னை-10' என்ற முக வரிக்கு அனுப்பலாம்.

தால் மூத்தோர் பலர் வாழினும் கற்கவேண்டியவற்றைக் கற்ற அறிஞர்களேயே உலகோர் போற்றி அவர் ஒழுகும் நெறி அரசியலாட்சி முறை அமையுமென்பதும், வேற்றுமை உள்ளம் இலாத பெற்ற அன்புத் தாய் கூட அறிவு நிறைந்த மைந்தனிடம் சிறிது மனம் வேறு படுவாள் என்ற உள நூல் கருத்தும் ஆசிரியப்பாவில் அமைத்துப் பாடிய அரசன் திறத்தினை என்னென்பது? அவர் பாடிச் சென்று ஆண்டு பலவாயினும் அதன் பெற்றியை யுணர்ந்து அவ்வழியில் சென்று பயன்பெருத நந் தமிழ் மக்களைத்தான் என்னென்று கூறுவது? நீங்களே சிந்தியுங்கள்.

நம் மாணவமணிகளுக்குப் படிக்க வேண்டிய நூல்களும் தெரிவதில்லை. முறையும் அதன் பயனும் தெரிந்தபாடில்லை. ஏனைய நாட்டாரோடு தலை நிமிர்ந்து இணையாக நிற்க வேண்டுமாயின் நாம் யாவற்றையும் அறிந்துணர்தல் வேண்டும். கற்பதற்குரிய நல்ல நூல்களை. சிறந்த சங்க இலக்கியங்களை, தெள்ளு தமிழ்த் தீஞ்சுவைத் திருக்குறளை, அற நூல்களை, ஒழுக்க நூல்களை, சட்ட நூல்களை, மொழி வரலாற்று நூல்களை இன வரலாற்று நூல்களை, தமிழகத்தின் பண்டைய வரலாறுகளை, நிலத்தியல் கூறும் நில நூல்களை, உள நூல்களை, மருத்துவ நூல்களை, பொறியியல் நூல்களை. அறிவியல் நூல்களை, அறிவூட்டும் நவீனங்களை, விழுமிய தூய இறையுணர்வூட்டும் இனிய தமிழ் நூல்களை ஐயம் திரிபறக்கற்றல் வேண்டும். இது குறித்து வள்ளுவர் வாய் மொழியைக் காண்க.

"கற்கக் கசடறக் கற்பவை
கற்றபின் நிற்க அதற்குத்தக"

என்ன தெளிவு பாருங்கள். இதனையன்றோ நந் தமிழ் இளைஞர்கள் படித்தல் வேண்டும். மேலும் வேண்டாத பலவற்றைப் பயின்றும், பலபட்டங்கள் பெற்றும் பல நாடுகளைச் சுற்றியும், பல நாட்டு நாகரீகத்தில் சிக்கிச் சிதறுண்டும், பன்மொழி அறிந்தும், கண்ணிருந்தும் குருடராய், காலிருந்தும் நொண்டியாய், அறிவு இருந்தும் அறியாராய் அறியாமைக் குட்டையில் மூழ்கியும், தூய ஆன்ம உணர்வு அற்றும் பித்தரைப் போன்று பிதற்றியும், பிணியாளரைப் போன்று வருந்தியும், "ஒன்றே குலம் ஒருவனே இறைவன்" என்ற உண்மையை மறந்தும் இந்நாட்டிடை உழன்று உறைந்து வருகின்றனர். அவர்கள் அறிய வேண்டுவதொன்றினை அன்புடன் கூறி முடிக்க விழைகின்றேன். அதாவது எவ்வளவு கற்றும் எந்நிலையில் வாழ்ந்தும், எவண் உறைந்தும் பயனில்லை. தூய அறிவே உருவாய், அன்பே வடிவாய் இலங்கும் மெய்யுணர்வினையுடைய இறைவனை வணங்காது பாமரராய் விலங்குகளாய் பல்லாயிரம் தெய்வங்களை மூடத்தனத்தால் வணங்கும் முறை தவரூகும் என்று அறிந்து கொள்ளுதல் நல்லறிவுடையோர் செயலாகும். இது குறித்தும் வள்ளுவர் பெருமான் வழங்கியுள்ள வண்டமிழ் மொழியைக் கேண்மின்.

"கற்றதனால் ஆய பயனென்
கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."

197819

புரட்சி மனம்

மல்லிகா என் பள்ளித் தோழி. அவளை அன்பின் இருப்பிடம், அழகின் சிகரம் என்றே சொல்லலாம். அத்துடன் அறிவும் நிறைந்தவளாய் விளங்கினாள். அவள் நிறையப் படிக்க ஆசைப்பட்டாள். ஏழ்மையின் காரணமாக, ஐந்தாம் வகுப்போடு அவள் படிப்பு நிறுத்தப்பட்டு, அவள் ஆசை நிராசையாய் முடிந்தது. பருவமடைந்தாள் மல்லிகா. அவளுக்கோர் 'துணை' தேடலாயினர் பெற்றோர்கள். ஆனால் அவள் ஏற்கனவே பக்கத்து வீட்டுப் பாண்டியனுக்கு தன் மனதில் இடங்கொடுத்திருந்தாள். அந்த 'தன்மைக்கு' என்ன பெயரோ? காதலோ! .... அன்போ! .... பிரேமையோ! பொதுவாகப் பாண்டியனை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. பார்வைக்குக் கவர்ச்சிகரமான அழகனாய் விளங்காவிட்டாலும், அவனது பரந்த, விரிந்த மனப் பண்பு, அன்பு நிறைந்த பார்வை, அவன்பால் பாசம் காட்டச் செய்தது மல்லியை. பாண்டியன் பத்து வகுப்பு முடியப் படித்தவன். பகுத்தறிவாளன். அவனுக்கு ஒரு 'கம்பெனியிலோ, 'கவர்மெண்ட்' காரியாலயத்திலோ 'குமாஸ்தா' வேலை கிடைக்காததால் ஒரு சிறு சைக்கிள் கடை வைத்திருந்தான். நடுநிலைமையில் அவன் தொழில் நடந்து வந்தது. இதில் எந்த 'பிளாக் மார்க்கெட்' செய்து பணத்தைக் குவிக்க முடியும்? அவன் உடை, உணவுக்குப் போதிய ஊதியம் கிடைத்தது. ஏற்கனவே சிறு குடிசை இருக்க இடமாக பெற்றோர்கள் விட்டுச் சென்றனர். இவைதான் அவனது சொத்து. மல்லிகா முதலியார் வகுப்பு, பாண்டியன் பிள்ளைமார் வகுப்பு. இவர்களது பாசம் இந்த வகுப்பு வித்தியாசத்தை எண்ணிப் பார்க்கவில்லை. இப்பொழுது அதை எப்படித் தள்ள முயன்றும் முடியாத தொன்றாகி விட்டது. பாண்டியன் இதை உணர்ந்தே ஆடவனாய் இருந்தும் அவசரப்படாமல், இவ்வளவு நாளும் தன் உள்ளத்தைக் கட்டுப்படுத்தி வந்தான். ஒழுக்கமும், கட்டுப்பாடும் நிறைந்துவிளங்கிய 'பகுத்தறிவு மன்றத்'தில் அவனும் ஒரு தொண்டன். சில தொண்டர்களைப் போல் வெறும் வாய்ப் பேச்சளவில் கொள்கைகளைப் பின்பற்றமாட்டான். செயலில் கொண்டுவரும் தீரன்! அவனுக்கு மல்லிகாவை மணம் செய்துகொள்ள மனப்பூர்வமாக விருப்பம்தான். கலப்பு மணத்தால், தான் ஒரு சிறந்த முன்னேற்றத்தை விரும்பும்மனிதனாக வாழலாம். வாழ்ந்து, தன்னைப் பின்பற்றிப் பலர் நடக்க, சமூகத்தினின்றும் சாதிச் சனியனை ஒழிக்கலாம் என்று எண்ணினான். எனினும் தயக்கம்!

எப்படி முடியுமென்ற எண்ணம் மலைபோல் அவன் முன் நின்றது.

மல்லிகா தன் தாயிடம் மட்டும், எப்படியோ துணிந்து தன் காதலை, மறைமுகமாக வெளியிட்டாள். பின்னர் பாண்டியன் மல்லிகாவின் தந்தையிடம் பணிவன்புடன் 'பெண் கேட்க' அவர் சீறினர் பாம்புபோல். 'அவ்வளவு தைரியமா உனக்கு. உன் சாதி வேறு! என் சாதி வேறு, இது மாதிரி இன்னொரு முறை உளராதே. யார் காதிலேனும் பட்டால், ஒருவர் அறிய, பலர் அறிந்து, என் பெண் மணமாகாமலே இருந்துவிடும்படி செய்து விடாதே. நல்ல பிள்ளையாகவே நடந்துகொள்'' என்று வேதாந்தம் பேசிவிட்டு, கதவையும் படீரென்று சாத்திக்கொண்டு உள்ளே சென்று தன் மனைவியிடம் இதைக் கூறினர். அவளுக்கும் அப்பொழுதுதான் தன் பெண்ணைக் கோபிக்கவேண்டுமெனத் தோன்றியது. ''ஏண்டி, மானங்கெட்டவளே, இத்தனை நாளாக நம் குடும்பம் மானத்தோடும், கஞ்சி இல்லாவிட்டாலும கவுரவத்தோடும் வாழ்ந்து வருவது உனக்குப் பிடிக்கவில்லையா? இனிமேல் இந்த கதைப் புத்தகங்கள் படிப்பது, அடுத்த வீட்டுக்காரனோடு பேசுவது, இதையெல்லாம் நிறுத்திக்கொள். இந்த தைக்குள் உனக்கொரு 'மூனு முடிச்சியை'ப் போட்டுவிட்டுத் தான் மறுவேலை. அதற்குள் ஏதேனும் செய்து வைக்காதே. இல்லாத பொல்லாத வழக்கத்தை யெல்லாம் கொண்டு வராதே'' என்று பலவாறு ஏசினுள் அதற்கு மல்லிகா ''ஏனம்மா, எதிர்வீட்டு இளவரசியை வேளாங்கண்ணி 'மைனர்' பிள்ளைக்கு கொடுக்கவில்லையா?'' என்ருள். உடனே அவள் தாய் ''எதிர்த்து வேறே பேசுகிருயா? இளவரசி வாழ்க்கைப்பட்ட இடம் பெரிய பரம்பரைப் பணக்காரர்கள். மேலும் அவன் ஒரு தாசில்தார், பிள்ளைமார் சாதியில் கொடுத்தாலும், பணக்காரர் என்ற 'பட்டம்' அந்த 'பிள்ளைமாரை' மறைத்துவிட்டது. இவன் அப்படியா? இவன் ஒரு வரட்டுப் பயல். ஓட்டை சைக்கிள் கடை தான் இவனுக்கு இருக்கிறது. இவனுக்கு உன்னைக் கொடுத்தால் இந்த ஊரார், நம் உறவினர் எல்லோரும் நம்மைத் 'தள்ளி' வைத்து 'சாதிக் கட்டுப்பாடு' செய்வார்கள். இனி இதுமாதிரி அதிகப்பிரசங்கித்தனமாய் வாயாடினல், நான் ஆற்றிலோ குளத்திலோ விழுந்து, இப்படியும் நமக்கு ஒரு பெண் பிறந்து தொலைத்ததே நம் மானத்தை வாங்க என்று சாகவேண்டியதுதான்'' என்று ஏதேதோ படபடவென்று பேசிவிட்டுத் தன் கணவனிடம் போய் 'ரகசியம்' பேசினள்.

இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பல இடங்களில் வெயில் என்றும் மழையென்றும் பாராமல் மல்லியின் மணத்தை சுருக்காக முடிக்க அவள் தந்தை சுற்றிவந்தார். பல சாதகங்கள் வீடுவந்து திரும்பின. பின் ஒரு நாள், பெருமையாகத் தன் மனைவியிடம் ஏதோ கூறிக் கொண்டிருந்தார்.

ச. தங்கம்

கும்பகோணத்திற்கு அருகில் பாபநாசம் என்னும் ஊர் உள்ளது. அதில் வீரமங்கலம் ஒரு

குக்கிராமம். அங்கு முத்து முதலியார் ஒரு பெரிய மிராசுதாரர், அடுத்தடுத்து அவருக்குச் சொந்தமாக வீடுகள் சில இருந்தன. அவர் வசிப்பது அழகிய, சிறிய தனியானதொரு பங்களா. ஐந்தாறு வேலி நிலம் இருந்தது. 'டயர்' போட்ட அருமையான ஜட்கா வண்டி; வீட்டிலேயே நான்கு ஜோடி கறவை மாடு; இத்யாதி போதாதென்று அவ்வூர் மணியக்காரர் பதவிவேறு, வயது நாற்பத்தைந்தாக இருந்தாலும் கட்டுக்கோப்பான சற்று தடித்த உடல். கருப்பு நிறம், தற்கால நாகரிகத்திற்கு ஏற்றாற் போல் 'கிராப்' தலையுடனும்,மடிப்புக் கலையாத எட்டுமுழ ஜரிகைக் கரை போட்ட வேட்டியுடனும், சலவையிலிருந்து எடுத்துடுத்திய சில்க் ஜிப்பாவோடும், கண் சரியாகத் தெரியாததால் தங்கப் பிரேம் போட்ட கண்ணுடியோடும், படாடோபத்தைக் காட்டப் பத்து விரலிலும் மோதிரத்தோடும் காட்சி யளிப்பார். வயதிற்கு வந்த ஒரு பெண்ணும், பிள்ளையும் இருந்தனர். மனைவி மறைந்து மாதங்கள் பல ஓடிவிட்டன. மனைவி இல்லாத குறை உள்ளத்தை வருத்தி வந்தது. உல்லாசமாக இப்படியும், அப்படியுமாக ஐந்தாறு இடங்களில் கெட்டலைந்தார். இருப்பினும் 'நிரந்தரம்' என ஒன்று இல்லாததால் சபலம் தட்டியது. மக்கள் இருவர் இருந்தாலென்ன? மதிப்பு இல்லையா மலைபோல்! பணம் இல்லையா இன்னும் பத்துப் பேர் சாப்பிட? இரண்டாந் தாரமாக ஒரு சின்னஞ் சிறு குட்டியை முடிச்சுப் போட்டு வைத்தால் நினைத்த போது இன்பம் பருக லாம்; உரிமையோடு! இப்படியெல்லாம் அவர் எண்ண, அந்த எண்ணத்தின் விளைவும், மல்லியின் நிலையும், அவள் தந்தையின் தரித்திரமும் ஒன்று சேர, சாதகம் பார்த்ததில், இருவருக்கும் பத்துப் பொருத்தமும் பாங்காக அமைந்துள்ளதாக, மாங்கல்யப் பொருத்தம் மனதிற்கு திருப்தி தருவதாக அமைந்துள்ளது, என்று ஒரு புரோகிதர் ஏதோ தப்புக் கணக்குப் போட்டுச் சொல்ல; ஒரு நல்ல நாளிலே, மல்லியின் மனப் பூர்வமான விருப்பமோ, அநுமதியோ இல்லாமலே அவளை அவரிடம் ஒப்படைத்து விட்டு. ஏதோ சில நாள் மாப்பிள்ளை வீட்டில் நெய்யோடும் பாலோடும் சாப்பிட்டு விட்டு வீடு திரும்பினர்.

மல்லிகாவும் நடந்தவைகளை ஓரளவிற்கு மறந்து, இனி என்ன செய்ய முடியும் இந்த 'சிறு' பெண்ணல் என்ற திகைப்பில், தான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்ற அர்த்தமற்ற சமாதானத்தோடு, தன்னிலும் முப்பது வயது மூத்த அப்பா என்ற 'முறை'க்கு ஆளாகும் நிலையில் உள்ள முதுமைக் கணவனேடு, கிடைத்ததைக் கொண்டு 'நிறைவு' காணும் பெண் பண்போடு வாழ்க்கைப் பாதையில் சென்று கொண்டிருந்தாள்.

கருவுற்ருள் மல்லிகை. ஐந்தாம் மாதம் 'முறைக்காக' பிறந்தகம் வந்தாள். அப்போது பாண்டியனைப் பார்த்தாள். அவனும் பழைய பாசத்தை மறந்தவனுகவே காணப்பட்டான். அகத்தின் அழகு எப்படியோ? "என்ன மல்லி! சுகந்தானே?" என்ற இரண்டே வார்த்தையில் தன்

நினைவை அவளிடம் விட்டு விட்டு சென்று விட்டான். அவள் தன் அம்மாவின் மூலம் பாண்டிய னுக்கு இன்னும் மணமாகவில்லை யென அறிந்துகொண்டாள்.

ஒரு வாரத்திற்குப் பின் ஊர் திரும்பினாள் மல்லி. ஐந்து மாதம் சென்றது. ஒரு அழகிய பெண் மகவைப் பெற்றெடுத்தாள். முத்து முதலியாருக்கு இப்போ தெல்லாம் அடிக்கடி உடம் புக்கு ஏதாவது நோய்வந்து தொந்தரவு செய்தது. மனைவி கருவுற்ற நிலையில் இருந்தபோது தன்னைக் கட்டுப்படுத்த அவரால் முடியாது பழைய பாடத்தைக் கையாண்டு, போக்க முடியாத நீர் வியாதியைப் பரிசாகப் பெற்று, இப்பொழுது படுக்கை யில் இருந்துவந்தார். தஞ்சையி லிருந்து டாக்டர் தருவிக்கப் பட் டார். ஏற்பட்ட செலவுகள் கணக் கிலடங்கா. ஏழைகளின் வயிற்றி லடித்து, பலரை ஏமாற்றிச் சேக ரித்த பணமெல்லாம் தண்ணீர் பட்டபாடாய்க் கரைந்தது. பலன் இல்லை! எப்படி கிடைக்கும்? நிலத்திலே எட்டியை விதைத்து விட்டு, கட்டிக் கரும்பைக் காண வேண்டுமென்றால் முடியுமா? தஞ்சையில் ஆஸ்பத்திரியில் தனிப்பார்வையில் சேர்க்கப்பட் டார். குணம் இல்லை. சேர்ந்த இருபது நாளில் இறந்த செய்தி வந்து, தனியானதொரு காரில் அவரின் சடலம் வீரமங்கலம் வந்து, தக்க மரியாதையுடனும், புரோகிதர்களுக்கு 'நல்ல' வரு மானத்துடனும் அடக்கம் செய் யப்பட்டது.

முன்பு புரோகிதர்கள் பார்த் துச் சொன்ன 'மாங்கல்யப் பொருத்தம்' ஏனோ மல்லிக்கு இல்லாதொழிந்தது. அவள் 'தலை எழுத்து' அப்படி என்று பேசி னர் சிலர். அந்தக் குழந்தை பிறந்த வேளை அப்படி! அப்பனை முழுங்கி விட்டது என்றனர் சிலர். ஆனால் மல்லி தன் நிலையை நினைத்து ஏங்கினாள். பூ, மஞ்சள் ஒழிந்ததே என்று குமுறினாள். இனி இன்ப வாழ்வைப்பற்றி எண்ணுவதே எல்லையில்லாத் தொல்லையாயிற்றே, என்று வருந்தினாள். அதிகமாக அவள் வெளியே வரக்கூடாதாம்! ஓராண்டு காலம்வரை அவள் இரவில் உண்ணாது 'விரதம்' இருக்க வேண்டுமாம்! 'ரவிக்கை' போடக்கூடாதாம்! சிரிக்கக் கூடாதாம். சீப்பைத் தலையிலே வைக்கக்கூடாதாம்! இப்படி எத் தனையோ 'கூடாது' என்று பலர் உபதேசித்தனர். அதைவிட அவளை, ஏன்?.........அவள் போன் றவர்களை உயிர்வாழக் கூடாது, எனக் கூறாது விட்டனர்! பதினாறு வயது முடிந்த பாவை, பருவம் எய்தி, இயற்கை தந்த எழிலோ டும், பொலிவோடும் இருக்கும் போது ரவிக்கை அணியாது இருப்பது தகுமா? ஏனோ இன் றும் நம் நாட்டுக் கிராமங்களில் மட்டும் இத்தகைய வழக்கம் உள் ளது!

இதை மீறினாள் மல்லிகா. அங்குள்ளோரின் ஏச்சுக்கும், கண்டனத்திற்கும் இலக்கானாள். அங்கு இருக்க முடியாததால், கிடைத்தவரை சில, சில்லறை சாமான்களுடனும், தன்னைத் தற் கொலை செய்துகொண்டு சாகா மல் தடுத்த அருமைக் குழந்தை மோகனுவுடனும் தாய் வீட்டிற்கு வந்தாள்.

அங்கே அவளுக்கு ஆதரவான வரவேற்பு இல்லை. மல்லிகை ஒரே மகள் அல்ல, ஒரு தம்பியும் இரு தங்கைகளும் உண்டு. தங்கைகளுக்கு மணமாக வேண்டும். தம்பியோ ஒரு மாதிரி! அவனுக்கு நல்ல வழக்கமோ. உயர்ந்த ஒழுக்கமோ கிடையாது. எங்கேயாகிலும் முப்பது, நாற்பதில் சம்பளம் பெற்று வேலையில் இருப்பான். சம்பளத்தையும் தகாத நண்பர்களுடன் சீட்டாடி இன்ன வேண்டாத பிற விஷயங்களில் தலையிட்டு, வீட்டிற்குப் பணம் தந்து உதவாமல் 'ஊர்



சுத்தி'யாகவே இருந்தான். சகோதரர்களையும், பெற்றோர்களையும், அவசியம் இல்லாது அதிகாரம் செய்வான். மல்லியையும், அவள் மகளையும் 'தண்டச் சோறு' என்று ஏசுவான். இந்தச் சூழ்நிலையில் மல்லியின் தந்தை ஐம்பது ரூபாய் வருமானத்தில், ஐந்து பெரியவர்களையும், ஒரு குழந்தையையும் எப்படிக் காப்பாற்ற முடியும்? அவரது கோபமெல்லாம் மல்லியின் மீதே பாயும். வறுமையின் கொடுமையால் 'மகள்' என்ற பாசம்கூடப் போய்விட்டது.

சகிப்புத்தன்மையோடு காலத்தை ஓட்டிவந்தாள் மல்லி. பலமற்ற அவள் உள்ளத்திலே பாண்டியன் அடிக்கடி தோன்றினன். பல நாட்கள் பாண்டியன் நினைவால் வருந்தினள். அவனை தினமும் ஒருமுறை தோட்டத்துப் பக்கத்தில் பார்ப்பாள். ஒரே ஒரு நிமிடம் அவர்கள் கண்கள் கலந்துறவாடும். சிறு புன்னகையைப் பரிமாறிக்கொள்ளுவர். ஆனல் தங்களது உள்ள வேட்கையை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை இருவரும்.

அன்று திருவாதிரைத் திருநாள். விழா பார்க்க வீட்டிலிருந்த அனைவரும் சென்றுவிட்டனர். மல்லி விதவையானபடியால் எந்த விழாவிலும் அவள் கலந்துகொள்ளக் கூடாதாம். தனியாக இருந்தாள் மல்லி. அச்சமயம் அங்குவந்த பாண்டியன் "இதை நிதானமாகப் படித்துவிட்டு, முடிந்தபோது உன் பதிலைக் கவனத்தோடு எனக்குத் தா" என்று சொன்னவாறே ஒரு 'கவரை'த் தந்துவிட்டுச் சென்றான். பரபரப்போடு அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினள் மல்லி.

மதிப்பிற்குரிய மல்லி!

என் மனதிலே உனக்கு என்றும் இடம் உண்டு. நீ விரும்பினல், பூரண அன்புள்ளத்தோடு ஒத்துக்கொண்டால்; நான் உன்னைச் சட்டப்படி மறுமணம் செய்து கொள்கிறேன். உனக்கும், உன்னருமை மகளுக்கும் என்னல் முடிந்த ஆதரவைத் தருகிறேன், என் இதயத்தில் கைவைத்துக் கொண்டு சொல்கிறேன்; என்றும் எக்காரணத்தைக் கொண்டும் உன்னைக் கைவிட மாட்டேனென்று. என்னை உன் தூய அன்புள்ளத்தால் நம்பு. உன்னை மணந்துகொள்வதில் எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா? நீ ஆச்சரியப்படுகிருயா? ஒரு குழந்தையுடன் இருக்கும் விதவையை நான் உரிமையாக்கிக் கொள்ளுவது உண்மையா என்று சந்தேகிக்கிருயா? அப்படி எண்ணதே. அது தவறு. உண்மையாகச் சொல். உன் உள்ளத்திலே அன்று முதல் இன்று வரை நான்தானே இருக்கிறேன்! மனமில்லா மணத்தால் நீ மாசுடையவளாய் ஆக முடியாது. வெறும் உடற் சுவையை நான் பெரிதாகக் கருதவில்லை. நான் செய்து கொள்ளப் போகும் மணம்; காதல் மணம்! கலப்பு மணம்! இவைகள் எல்லாம் என் தற்புகழ்ச்சிக்காக, சுயநலத்திற்காக என்று எண்ணிவிடாதே! உனது குறையாத இளமை என்னவாகும்? உன் பெற்ருேர்களுக்கும் உன்னல் ஏன் வீண் தொல்லை. உனக்கும்தான், உணவு, உடைக்குங் கூட இன்று கஷ்டமாக இருக்கின்றதே. இவைகளையெல்லாம்

சிந்தித்துத்தான் இக் கடிதத்தை எழுதினேன், உனக்கும் சம்மதமாக இருந்தால் 'செய்யுங்கள்' என்ற ஒரே வார்த்தையில் உன் பதிலைத் தந்து முன்னேற்றப் பாதையில் செல்லும் முதல் வீரனுக்குவாய் என்னை. அன்பன்,
—பாண்டியன்.

கடிதம் முடிந்தது. கனவு காண்பது போல் இருந்தது மல்லிக்கு. இது உண்மையா என்று உள்ளம் கேட்டது. நம்ப முடியவில்லையே என்று அறிவு, இருப்பினும் கண்கள் கூறின கனவல்லவென்று. மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தினுள். பெற்றோர்களிடம் கூறினுள். கடிதத்தைக் காண்பித்தாள். அவர்கள் ஒன்று படுவார்களா? சமூகம்தான் அவர்களைச் சும்மாவிடுமா? அதனுல் அவர்கள் மல்லி பாண்டியனின் கடிதத்தை மறந்துவிட வேண்டும், அல்லது இந்த ஊரை விட்டே ஓடிவிட வேண்டும். அதைவிட அவள் உயிரை விட்டு விட்டால்கூட நல்லதுதான் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டனர். பின் ஓர் முடிவுக்கு வந்து பாண்டியனுக்குத் கடிதம் வரைந்தாள். "என் பெற்றோர்களுக்கு விருப்பம் இல்லை—எதிர்க்கிறுர்கள். எனக்குச் சம்மதம். ஒரே ஒரு நிபந்தனை. இந்த ஊரில் நாம் வசிக்கக்கூடாது. அடுத்து இருக்கும் சிற்றூர்களில் வேண்டுமானுல் வசிக்கலாம். வீடு பார்த்து, பிற ஏற்பாடுகளும் செய்துவிட்டுத் தெரிவிக்கவும்."

அன்புள்ள, — மல்லிகா.

கடிதத்தைக் கண்டான் பாண்டியன். எதிர்ப்பு இல்லாமல் எப்படி ஒரு நல்ல காரியம் நடக்க முடியும்.என்றெல்லாம் சிந்தித்து முதல் முடிவுக்கே வந்து, ஒரு வாரத்திற்குள் சிதம்பரத்திற்கருகில் உள்ள புவனகிரியில் வீடு பார்த்து, வாடகை பேசி, மற்ற ஏற்பாடுகளும் செய்துவிட்டு மல்லியிடம் தெரிவித்தான். அவன் இருந்த சிறு குடிசையை அவனைப் போன்ற ஒரு தொழிலாளிக்கு மிகக் குறைந்த விலைக்குக் கொடுத்துவிட்டான்.

அந்த ஏற்பாட்டின்படி அன்று மாலை "மங்கம்மாள் பூங்காவில்" ஒரு சிறு பெட்டியுடனும், மோகனுவுடனும் வந்து சேர்ந்தாள் மல்லி. காத்திருந்த பாண்டியன் முறுவலித்தவாறே புவனகிரிக்கு அழைத்துச் சென்றுன். மல்லிகா அடுப்பை மூட்டிச் சோறு சமைத்தாள். மூவரும் உண்டனர். வேலைகளை முடித்துக்கொண்டு, மோகனுவைத் தூங்கச் செய்து விட்டு அவள் அருகிலேயே தானும் படுத்துக்கொண்டாள், தன்னைப் பற்றிச் சிந்திக்க அப்போதுதான் அவகாசம் கிடைத்தது அவளுக்கு. அச்சம் ஏனே அவளை ஆட்கொண்டது. 'பெண்புத்தி, பின் புத்தி' என்பார்களே! அதற்கிணங்க நாமும் அவசரப்பட்டு, இவருடன் வந்துவிட்டது தப்பா? நாம் நடந்துகொண்டது சரியா? எல்லோருடைய பேச்சுக்கும் ஆளாகி வறுமை ஒருபுறம் வாட்ட, இளமை ஒருபுறம் இன்னல்தர, துன்பமே நமக்குத் துணையாகத் தொடர்ந்துவர, இச் சூழ்நிலையில் 'வாழ்வு' கிடைக்கும் என்ற வாய்ப்பு வரும்பொழுது நாம் ஏன் அதை நழுவவிட வேண்டும் என்றெல்லாம் எண்ணினுள். அவள் உள்ளம் குழம்பியது. நினைவின் வேதனை தாங்காது நெஞ்சு வலிக்கவே சற்று முனகி

னாள். "ஏன்? என்ன செய்கிறது? தலைவலியா?" என்ற அன்புக் குரலைக் கேட்டு அப்பக்கம் திரும்பினாள். வெளியே, களங்கமிலா அமைதியான முகத்தோடு பாண்டியன் நின்றுகொண்டிருந்தான். "ஒன்றுமில்லை, நெஞ்சு வலிப்பது போல் இருந்தது. ஆமாம்! ஏதோ சட்டப்படி பதிவுத் திருமணம் என்றீர்களே; நாளைக்கே அதை செய்துவிடலாமல்லவா?" என்று தயங்கியபடியே மல்லி கேட்டாள். "மல்லிகா உன் நெஞ்சு வலிக்குக் காரணம்புரிந்துவிட்டது! வீண் நினைவின் விளைவுதான். ஏன் இல்லாத ஒன்றை நினைத்துக்கொண்டு மனதை அலட்டிக் கொள்கிறாய். என்மீது உனக்கு நம்பிக்கை இல்லையா? கண்ணியமற்றக் கசடன் என்று என்னை எண்ணி விட்டாய்? நீ என்ன செய்வாய்! நாட்டிலே அப்படி ஏமாற்றும் எத்தர்கள் நிறைந்திருப்பதால்தான், உன்போன்ற பெண்கள் பயப்படுவதும், என் போன்றோர்களையும் சந்தேகிப்பதும் இயல்பாகி விட்டது. நாளைக் காலை ஒன்பது மணிக்குமேல் சர்க்கார் காரியாலயம் சென்று நாம் இருவரும் சட்டப்படி மணம் செய்து கொள்ளலாம். மாலை நம் வீட்டில் ஒரு சிறு விருந்து. 'பகுத்தறிவு மன்றத்தி'லிருந்து தலைவரும் இன்னும் சில தோழர்களும் வருவார்கள். சரி, சரி நீ நிம்மதியாகத் தூங்கு" என்றான்.

"சும்மாதான் கேட்டேன். தப்பாக எடுத்துக்கொள்ள வேண்டாம். நீங்கள் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். நானும் தூங்கப் போகிறேன்" என்றாள் மல்லி.

"எது தற்காப்பு மிகவும் பலமாய் இருக்கிறதே. இருக்க வேண்டியதும் அவசியம்தான்" என்றபடியே திண்ணையில் வந்து படுத்துவிட்டான் பாண்டியன்.

அறிவிப்பு

சந்தா, ஏஜென்ஸி விபரங்களுக்கும், மணி ஆர்டர், போஸ்டல் ஆர்டர், செக் முதலியவைகள் அனுப்புவதற்கும்,

பொன்னி லிமிடெட்
111, பவழக்காரத் தெரு,
சென்னை—1.

என்று குறிப்பிடவும்.

பொழுது புலர்ந்தது! அவர்களுக்குப் புதுவாழ்வு மலர்ந்தது. மணமும் முடிந்தது! மாலையும் வந்தது! தலைவரும் தோழமை பூண்ட தொண்டர்களும் வந்து சிறப்பித்தனர். தலைவர் பாண்டியனின் பரந்த மனப்பான்மையைப் பாராட்டிப் பேசினார். பாண்டியனைப் பின்பற்றி ஏனைய இளைஞருலகும் நடந்து சமுதாயத்தில் மாபெரும் புரட்சியைச் செய்து, புதுமையை விளைத்து சாதி, மத—இன, பண—இன்ன பிற ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்தெரிய வேண்டும் என்று கூறி முடித்தார். சிற்றுண்டிக்குப் பின் அனைவரும் கலைந்தனர்.

நீல வானிலே நீந்திக் கொண்டிருந்த முழு நிலவு பொன்னொளி பரப்பி, புன்னகையோடு அக்காதலர்களை வரவேற்றது! விண்மீன்கள் கண் சிமிட்டி வாழ்த்தின! முழு நிலவைப் பார்த்தவாறே உட்கார்ந்திருந்தாள் மல்லி, பாண்டியன் வீரநடை போட்டான் பெருமிதத்தால் அவன் உள்ளம் விரிந்தது. மல்லியின் அருகில் வந்தான். முதல், முதலாக அவளது பூங்கரத்தைப் பற்றினான்.

"மல்லிகா! இப்பொழுது திருப்திதானே, என்னை நம்புகிறாய் அல்லவா? இனி உன் முகத்தில் புன் முறுவலைத் தவிர, துன்பத்தின் சாயை துளியும் இருக்கக்கூடாது. என் வாழ்நாளில் அருந்துணையாக இருக்கும் துணைவியாக நீ விளங்க வேண்டும். சமுதாயத் தொண்டில் பெண்களின் சார்பில் நீயும் என்னுடன் பங்கு கொள்ள வேண்டும். எனக்கு வரும் வருவாய் கொஞ்சம்தான். அதைக் கொண்டு பாலிலும், தேனிலும் புரளமுடியாது! இருப்பினும் பட்டினி என்று இல்லாமல் வயிறார உண்ண முடியும். பட்டாடை உன்னால் உடுத்த முடியாது! சாதாரண, நம்போன்ற எளிய கைத்தறியாளர்கள் நெய்யும் நூலாடைதான் உடுத்த முடியும். படாடோபத்தோடோ, பலவித நகைகளோடோ நீ இருக்க முடியாது! இவை எல்லாவற்றினும் பணத்தைவிட மேலாக நம்மிடம் உயர்ந்த பண்பும். ஒப்பற்ற பாசமும் இருக்கிறது. அது போதும் நமக்கு ஊரார் ஏசினாலும், வைதீகம் சீறினாலும், வேதாந்திகள் வரட்டுக் கூச்சல் போட்டாலும், அடுத்த எதிர்த்த வீடுகளில் இருப்பவர்கள் ஏதேனும் பேசி எள்ளி நகையாடினாலும் நீ அவைகளை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இதுதான் உனக்குக் கூறும் அன்புரை—அறிவுரை எல்லாம். நாம் நல்ல சமுதாயத்தை ஏற்படுத்த முடிந்தவரை நம் உழைப்பைத் தருவோம். புது சமுதாயம் நம் போன்றோரால் பூக்கட்டும்!

பொதுவுடைமை மணம் வீசட்டும்'' இப்படிப் பேசினன் ஒரு பிரசங்கியைப் போல!

ஆர்வம் கலந்த அவனது பேச்சை, அசையாது, அயராது கேட்டுக்கொண்டிருந்தாள் மல்லி. ஆனந்தக் கண்ணீர் பெருக்கினுள். அவள் முன் பாண்டியன் கண் கண்டதொரு மனிதத் தெய்வமாகக் காட்சியளித்தான். அப்படியே உட்கார்ந்து அவனது கால்களைப் பற்றிக்கொண்டாள். ''எனக்கு வாழ்வளித்த தெய்வம் நீங்கள்தான்'' என்றுள். அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. தொண்டையை அடைத்தது.

''என்ன இது? பைத்தியக்காரத்தனம்! மனைவியை இழந்த ஒருவன் மறுமணம் செய்துகொண்ட பிறகு, மறு மனைவியின் காலில் விழுவதில்லை! நீ எழுந்திரு'' என்று பரிகசித்தபடியே அவளைத் தூக்கி நிறுத்தினுன் பாண்டியன்.

அவனது கைகளைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு ''என்றும் இன்றுபோல் நாம் வாழ்வோமா?'' என்றுள் மல்லி,

''அதற்காகத்தானே நான் உன்னையே மணம் செய்துகொண்டேன்'' என்று அவள் கன்னத்தில் 'செல்ல' மாகத் தட்டி ஆதரவாகத் தன் பக்கம் இழுத்துக்கொண்டான் பாண்டியன்.

''இக வாழ்வினிலே ஆனந்தம், ஈடேறும் காதலே இன்பம்'' என்று சிறு தொலைவிலிருந்த 'பெரிய வீட்டு'த் திருமணவிழாவில் ஒலிபரப்பி இவர்களின் இதயகீதத்தை ஆனந்த கீதமாக அள்ளி வார்த்துக்கொண்டிருந்தது. *

பொன்னி

(மாதமிருமுறை)

	உள்நாடு	வெளி நாடு
ஆண்டுச் சந்தா	ரூ. 6—0—0	ரூ. 7—8—0

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது, சிலோனுக்கு மட்டும் வி. பி. பி. மூலமாக அனுப்பப்படும். தனிப்பிரதிக்கு 0—5—0 தபால் தலை அனுப்பவேண்டும்,

உங்கள் சந்தா சம்பந்தமாக அலுவலகத்திற்கு எழுதும்போது உங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிடவேண்டியது அவசியம்.

விபரங்கட்கு:

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு, சென்னை-1

நமது மருத்துவர்

G. வெங்கடப்பா M. B. B. S. (Ex) I. A. M. C.

வினா: பொன்னி மருத்துவரே, எங்கள் ஓட்டலின் சமையல் அறையில் தொழிலாளருக்கு அடிக்கடி தீ பட்ட புண் ஏற்படுகிறது. தயவுசெய்து சிகிச்சை முறைகளை விளக்கமாக எழுதவும்.

P. சுந்தரம், முத்துகுமாரி ஓட்டல், நீலகிரி.

விடை: "அடிக்கடி" தீப் புண் ஏற்படுகிறது என்பதைப் படித்தவுடன் உங்கள் அடுப்புகள் சரியான முறையில் அமைக்கப்படவில்லையெனத் தெரிகிறது. ஆகையால் அடுப்பு கட்டுவதில் நல்ல பழக்கமுடையவர்களைக்கொண்டு உங்கள் அடுப்புகளை அமைத்துக் கொள்ளுங்கள். சமையல் அறையின் தொழிலாளரைச் சற்று கருத்துடன் இருக்கும்படி சொல்லவும்.

ஆட்களுக்குத் தீ பிடித்தவுடன் முதலுதவி அவசியமாகையால், அந்த ஆள் கீழே படுத்துப் புரளவேண்டும். தீ அணைந்துவிடும். அருகிலுள்ளவர்கள் ஒரு துப்பட்டி, கம்பளி அல்லது பெரிய சவுக்கம் பக்கத்திலிருந்தால் அவைகளில் ஒன்றை விரித்து, தனக்கு முன் பிடித்துக் கொண்டு, ஓடி, தீ எரியும் ஆளின்மேல் போட்டு, சுற்றிவிட்டுத் தேய்த்துவிடலாம். அல்லது கீழே படுக்கவைத்து உருட்டலாம்.

தீப்பிடித்த பகுதி சிறிதாக இருந்தால் சவுக்கத்தை அதன்மேல் போட்டுத் தேய்த்துவிடலாம். தீப் பிடித்தவர் அங்கும் இங்கும் ஓடக் கூடாது,

ஒரு கத்தரிக்கோல் எடுத்து நெருப்பில் 3 விநாடிகள் காட்டி அல்லது ஸ்பிரிட்டில் தொட்டு எடுத்து, கிருமி அகற்றியபின் சுட்ட புண் ஏற்பட்டிருக்கும் பாகத்தின் ஓரங்களிலுள்ள பொசுங்கிப்போன தோல்களை வெட்டி எடுக்கவும். அதன்மேல் உடை படாதபடி துணியை நீக்கவேண்டும் அல்லது கத்தரித்துவிட வேண்டும். கொப்புளங்கள் இருந்தால் அவைகளைக் குத்திவிடக் கூடாது.

சுத்தமான தண்ணீர் இரண்டு டம்ளர் அளவு எடுத்து சோடாமாவு (ஆப்ப சோடா, ரொட்டி சோடா Sodium Bicarbonate) இரண்டு மேஜை கரண்டி அளவு போட்டுக் கொதிக்கவைத்து ஆரவைத்துக்கொண்டு

197819

ஒரு சுத்தமான கைக்குட்டை அல்லது பஞ்சை அதில் நனைத்து எடுத்து தீப்பட்ட புண்ணின் மேல் பிழிந்து பலமுறை கழுவவேண்டும். சோடா மாவு கலந்த நீர் புண்ணின் காந்தலை உடனே குறைக்கும். புண் பெரியதாக இருந்தால் அதே குட்டையை புண்ணின்மேல் வைத்துக் கட்டுப் போட்டு உடனே டாக்டரிடம் கொண்டுபோக வேண்டும்.

நெருப்பு, அமலங்கள், காஸ்டிக் திரவங்கள், மின்பொறி முதலிய வைகளினால் ஏற்படும் புண்ணுக்கு "சுட்டபுண்" (Burns) என்று பெயர்.

கொதிக்கும் நீர், டீ, காபி, பால், எண்ணெய், நெய், தார் முதலியனபட்டு வழண்டு புண் ஆவதற்கு "வெந்தபுண், அவியல், வேகல்" (Scalds) என்று பெயர். சுட்ட புண்ணுக்கும், வெந்த புண்ணுக்கும் சிகிச்சை ஒன்றுதான்.

இந்தப் புண்களில் 3 வகைகள் உண்டு :—

1. தோல் சிவந்து போவது
2. கொப்புளம் தோன்றுவது
3; தோலும், சதையும், பொசுங்கிப்போவது

முதல் வகைக்கு முதலுதவி போதும். இரண்டாம், மூன்ருவது வகைகளுக்கு மருத்துவரின் உதவி அவசியம. உடலின் மூன்றில் இரண்டு பாகம் சுடப்பட்டிருப்பின் மிகவும் ஆபத்து. தீப்பட்ட புண் ஏற்படின் அதிர்ச்சி (Shock) வரலாம். இந்த நிலையில் முதலில் அதிர்ச்சிக்கு முதலுதவி கொடுத்து, சுட்ட-வெந்த புண்களைப் பிறகு கவனிக்க வேண்டும்.

சுட்ட அல்லது வெந்த புண்களுக்கு சிகிச்சை ;

1. ஜென்ஷியன் வயலெட் ஜெல்லி (Gention violet Jelly) என்னும் மருந்தை, புண்களை சுத்தம் செய்தபின் தினம் ஒரு முறை சில நாட்களுக்குத் தடவினால் போதும். அதன்மேல் சுத்தமான லின்ட் (Lint) வைத்து, அல்லது பஞ்சு வைத்துக் கட்டுப்போட வேண்டும். இம் மருந்து ஆங்கில மருந்துக் கடைகளில் கிடைக்கும். தீப்பட்ட புண்களுக்கு இதுவே சிறந்த மருந்து.

2. டானிக் ஆஸிட் ஜெல்லி (Tonic Acid Jelly) என்னும் மருந்தைப் பலமுறை புண்ணில் தடவலாம்.

3. பிக்ரிக் ஆஸிட் (Picric Acid) என்னும் மருந்தை 90 சொட்டுகள் எடுத்து மூன்று அவுன்ஸ் சாராயத்துடன் கலந்து 40 அவுன்ஸ் தண்ணீர் சேர்த்து உபயோகிக்கலாம். 2, 3வது சொல்லப்பட்ட மருந்தை கழுத்து, அக்குள், விரல் இடுக்கு போன்ற பாகங்களில் ஏற்படும் பெரிய புண்களுக்கு உபயோகிக்கக்கூடாது ; ஏனெனில் பெரிய தழும்புகள் உண்டாகிச் சுருங்கும்.

4. சிறிய புண்களுக்கு எழுதும் மை (Ink) அல்லது (Tea) டிக்காஷனை பஞ்சில் நனைத்துப் புண்ணின் மேல் தடவி, உலற உலற மீண்டும் பல முறை தடவலாம்,

5. ஒரு தம்படிக் காசின் அளவைவிடச் சிறியதாக இருப்பின் தேங்காய் எண்ணெயுடன் சுண்ணும்பைச் சேர்த்து இலேசாகக்குழப்பிப் போடலாம்.

6. நீலகிரி தைலத்துடன் வாசிலேன் குழப்பி, தீப்புண்களுக்கு உபயோகிக்கலாம்.

இம் முறையை ஏழை கிராமவாசிகளுக்குப் பணியாற்றிவரும் டாக்டர் சவரிராயன் ஏசுதாஸன் F. R. C. S. E. அவர்கள் கையாண்டு வருகிருர்.

7. மெர்குரோக்ரோம் (Mercurochrome) மருந்தை நீரில் 2 சத விகிதம் கலக்கி உபயோகிக்கலாம்.

8. ஹேமா மெலிஸ் (Hama Melis) ஹோமியோ மருந்தை நீரில் கலக்கிப் பூசலாம்.

9. கேன்தரிடிஸ் நீர்க்கலவையைத் தடவலாம். எரிச்சல் தணியும். இம் மருந்தை X3 வீரியத்தில் 3 சொட்டுகள் நாக்கின் மேல் விடவும், எரிச்சலும், கொப்புளங்களும் தணியும்.

10. உடலின் அதிகப் பரப்பு சுடப்பட்டிருந்தால் ஆளி விதை எண்ணெயையும், சுண்ணும்பு நீரையும் கலவை செய்து பூசவும். அதே சமயத்தில் கேன்தாரிடிஸ் X3 என்ற மருந்தை 5 சொட்டுகள் 3 மணிக்கு ஒரு முறை நாக்கில் விடவேண்டும்.

11. தோலையும், சதையையும் ஆழமாகக் கருக்கியிருந்தால் வெளியில் தடவும் மருந்து ஒன்று போட்டு உள்ளுக்கு சாப்பிட காலி பைக்கிரமேட் X3 மருந்தை 5 சொட்டுகளை நாக்கில் விடவேண்டும்.

12. சித்த, ஆயுர்வேத முறைகளில் எனது ஆராய்ச்சியில் மேனுட்டு மருந்துகளுக்கு ஒப்ப அநேக தாவரங்கள் உண்டு. அவைகளில் நமது கிராமவாசிகள் சுலபமாக அறிந்து செய்யக் கூடிய முறைகளை மாத்திரம் இங்கே எழுதுகிறேன். (அ) நீலி சாயத்தை நீரில் குழைத்து அல்லது (ஆ) ஊமத்தை இலையைக் கசக்கி சற்று நீர் சேர்த்து நெருப்பின்மேல் கொதிக்க வைத்து, (இ) பருத்தி மலரை ''ஆ''வில் சொன்னது செய்து, (ஈ) இலுப்பை இலையை முன் சொல்லியதுபோல் செய்து, (உ) மா. இலை சாம்பலை அல்லது (ஊ) பாகக்காய் சாற்றுடன் சாக்கட்டியை குழப்பி, (எ) வாழைத்தண்டு சாம்பல், (ஏ) எள்ளை வேகவைத்து அரைத்துச் சுட்ட அல்லது வெந்த சாம்பல் புண்ணின் மேல் மேலே சொல்லப்பட்ட மருந்துகளில் ஏதாவது ஒன்றைத் தடவிக் கட்டுப் போடவேண்டும். புண்கள் பெரிதாகயிருக்கும்போது ஒரு தக்க மருத்துவரை நாடுவது நல்லது. சிகிச்சை கொடுப்பவர் நகங்களைக் கத்தரித்து தங்கள் கைகளைச் சோப்பினுல் கழுவிச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். சிறிய புண்ணுகயிருந்து கொப்புளங்கள் வந்திருந்தால் டெட்டால் மருந்தைத் தடவிக் கத்தரிக் கோலை டெட்டால் மருந்தில் கழுவி எடுத்து, கொப்புளத்தைக் குத்திவிட்டு கொப்புளத்தின் பொசுங்கிய தோலை வெட்டி எடுத்து விடவேண்டும். புண்ணை டெட்டால் மருந்தில் கழுவி பின் மேலே சொன்ன மருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

*

Edited, Printed & Published by Aru. Periyannan for Ponni Ltd., at Ponni Achakam, 111, Coral Merchant Street, Madras-1.

அச்சு வேலையை மிகச் சாதாரணமாகவும் செய்யலாம்; உயரிய முறையிலும் செய்யலாம், எல்லாம் செய்வோரைப் பொறுத்து
— இருக்கிறது. —

உயர்ந்த அச்சு வேலைகளை முடித்துக் கொடுப்பதற்கென்றே நிறுவப்பட்டுள்ள அச்சகம் ....

பொன்னி அச்சகம்

தபாற் பெட்டி எண் **1795**

111, பவழக்காரத் தெரு :: சென்னை-1.

எப்பொழுதும் மக்கள்பணி செய்யக் காத்திருக்கிறது.

சிறந்த புதிய வெளியீடுகள்!

★

நினைவுச்சின்னம்	இளமைப்பித்தன்	... ரூ.	1- 0-0
கடல் முத்து	எஸ். ஆறுமுகம்	... ரூ.	1- 0-0
உலக அரங்கில்	டி. கே. சீனிவாசன்	... ரூ.	1- 0-0
தபாலாபீஸ் விநோதங்கள்	க. சண்முகசுந்தரம்	... ரூ.	0- 8-0
கம்பன் கெடுத்த காவியம்		... ரூ.	0- 4-0
இலக்கியச் சந்தையில்	மு. அண்ணாமலை	... ரூ.	0- 8-0
வீடும் விளக்கும்	'சுகி'	... ரூ.	0- 8-0
தாஜ்மஹால்	நா. பாண்டுரங்கன்	... ரூ.	0- 8-0
கொடிமுல்லை	வாணிதாசன்	... ரூ.	0-12-0
இரு கதைகள்	நாரா நாச்சியப்பன்	... ரூ.	0 -4-0

27 MAY 1954

வணிகர்கட்குத் தக்க கழிவு உண்டு.

★

விவரங்கட்கு:

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு :: சென்னை — 1.